திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூலை 2019 விலை ரூ.5/-



திருமலையப்ப ஸ்வாமி
ஆனிவர
ஆஸ்தானம்

17-07-2019



திருமலையில்
13-05-2019 முதல்
15-05-2019 வரை
நடைபெற்ற
ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச
பரிணய மஹோத்ஸவம்

புதுமணவாளன் (திருமலையப்ப ஸ்வாமி)



பரிணய மேடை



புதுமணவாட்டிகள் (ஸ்ரீதேவி,பூதேவி)



திருமலையப்ப ஸ்வாமிக்கு பூமாலைகளை
சமர்ப்பிக்கின்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர்

குதிரை வாகனத்தில்
திருமலையப்ப ஸ்வாமி





கருடவாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி



*ஸத்த்வானுரூபா ஸர்வஸ்ய*
*ச்ரத்$_3$த$_4$ா ப$_4$வதி ப$_4$ாரத ।*
*ச்ரத்$_3$த$_4$ாமயோऽயம் புருஷோ*
*யோ யச்ச்$_2$ரத்த$_4$: ஸ ஏவ ஸ: ॥*

**பரதகுலத்தோன்றலே! எல்லா மனிதர்களுக்கும் சிரத்தை (அக்கறை) அவர்களுடைய மனப்பாங்கிற்கு ஏற்றவாறு அமைகிறது. இந்த மனிதன் சிரத்தையே உருவானவன். ஆகையினால், எந்த மனிதன் எந்தச் சிரத்தையோடு கூடியவனோ, அவன் அந்தச் சிரத்தையின் தன்மையுடையவனே.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 17–3*



*தாத$_3$ாத்விக ப்ரதிப$_2$லத்$_3$ப$_4$க$_3$வத்பரத்வம்*
*விஸ்தீர்ய பாண்ட்$_3$யகத$_2$கேந்த்$_3$ரஜயீ க$_3$ஜேந ।*
*க$_3$ச்ச$_2$ந் ப்ரீயாது$_3$பக$_3$தே க$_3$ருடே$_3$ந நாதே$_2$*
*ப்ரேம்ணாऽऽசிஷம் ரசயதிஸ்ம நமோऽஸ்து தஸ்மை ॥*

**அப்போதே (பரமபுருஷனுடைய நிர்ஹேதுக கிருபையால்) நெஞ்சில் தோன்றிய ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்துவத்தை விரியவுரைத்து வாதம் செய்து, பாண்டிய தேசத்தில் கூடிய வாதம் வல்லவர்களை வெற்றி கொண்டவராய், யானை மேலேறி ஊர்வம் வந்த எந்தப் பெரியாழ்வார் (அப்போது) உகந்து கருடன் மேலேறி சேவை சாதித்த ஸ்ரீமந்நாராயணன் விஷயத்தில் பொங்கும் பரிவாலே பல்லாண்டு பாடினாரோ, அவருக்கு நமஸ்காரம்.**

*- குருபரம்பரா ப்ரபாவம்*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் ஆனி/ஆடி மாதம் உத்தரா/தக்ஷிணாயணம்
## க்ரீஷ்மருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 ஜுலை 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | திங்கள் | சசி | ரோகி | மாதசிவராத்திரி. |
| 2 | 17 | செவ் | அமா | மிரு | சர்வ அமாவாசை, இரவு முழு சூரிய கிரஹணம், பெரியாழ்வார் உத்ஸவம் ஆரம்பம். |
| 3 | 18 | புதன் | பிர | திரு/புன | ஆஷாட சுத்த. |
| 4 | 19 | வியா | துவி | பூச | கடல் சீற்றம் பெருமழை, பாதிப்பு, பூரி ஜகன்னாதர் ரதயாத்ரை. |
| 5 | 20 | வெள்ளி | திரு | ஆயி | .... |
| 6 | 21 | சனி | சது | மக | மாத சதுர்த்தி, ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம் ஆரம்பம். |
| 7 | 22 | ஞாயிறு | பஞ் | பூர | ஸ்கந்த பஞ்சமி, வ்ய-சிரா, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்பயாகம் அங்குரார்ப்பணம், ஸ்ரீமரீசி மஹரிஷி ஜெயந்தி. |
| 8 | 23 | திங்கள் | சஷ்/சப் | உத் | ஆனித் திருமஞ்சனம், நடராஜர் அபிஷேகம், க்ஷயதிதி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்பயாகம், ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார வைபவம் நிறைவு. |
| 9 | 24 | செவ் | அஷ் | ஹஸ் | மாத துர்காஷ்டமி, சுக்ரன் கி.அஸ்தமனம். |
| 10 | 25 | புதன் | நவ | சித் | ..... |
| 11 | 26 | வியா | தச | சுவா | சுப நாள், பெரியாழ்வார் சாத்துமுறை, தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அங்குரார்ப்பணம். |
| 12 | 27 | வெள்ளி | ஏகா | விசா | சயன ஏகாதசி, செவ்வாய், மே அஸ்தமனம். கோபத்ம விரதம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம், திருப்பதி ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் ஆரம்பம், தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம். |
| 13 | 28 | சனி | துவா | அனு | புதன் மே.வ. அஸ்தமனம், சாதுர்மாஸ்ய விரதம் ஆரம்பம், நாதமுனிகள் திருநட்சத்திரம். |
| 14 | 29 | ஞாயிறு | திர | கேட் | பிரதோஷம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் நிறைவு, திருப்பதி ஸ்ரீவிகனசாசாரியர் உத்ஸவம் ஆரம்பம். |
| 15 | 30 | திங்கள் | சசி | மூல | வேர் தொடர்பானவைகள் பயிரிட, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 16 | 31 | செவ் | பௌ | பூரா | வ்யாஸ பூஜை, ஆஷாட பௌர்ணமி, கடக சூரியன் இரவு 4ம. 33நி. ஆகாமாவை, இரவு பகுதி சந்திர கிரஹணம். தக்ஷிணாயனம் (த்ருக்), குருபூர்ணிமா. |
| 17 | 1 | புதன் | பிர | உத்ரா | ஆஷாட பஹுள, திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம். |
| 18 | 2 | வியா | துவி | திவோ | ச்ரவணம், கரி நாள், விருத்தி திதி அசூன்ய சயன விரதம், திருப்பதி ஸ்ரீவிகனசாசாரியர் சாத்துமுறை. |
| 19 | 3 | வெள்ளி | துவி | அவி | சுப நாள். |
| 20 | 4 | சனி | திரு | சத | சங்கடஹர சதுர்த்தி, திரிதின ஸ்ப்ருக் நட்,யோக, தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் நிறைவு, துவஜாவரோஹணம். |
| 21 | 5 | ஞாயிறு | சது | சத | சுபநாள், தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ்வர ஸ்வாமி புஷ்பயாகம். |
| 22 | 6 | திங்கள் | பஞ் | பூரட் | சஷ்டி, பத்திரப் பதிவு செய்ய. |
| 23 | 7 | செவ் | சஷ் | உத்ரட் | சஷ்டி, தனிய நாள், சுக்ரன் கடகம். |
| 24 | 8 | புதன் | சப் | ரேவ | .... |
| 25 | 9 | வியா | அஷ் | அஸ் | காலாஷ்டமி, ஆண்டாள் திருவாடிப்பூர உத்ஸவம் ஆரம்பம். |
| 26 | 10 | வெள்ளி | நவ | பர | கரி நாள். |
| 27 | 11 | சனி | தச | கார் | கிருத்திகை, வாஸ்து கா.7ம.42நி. - 8ம. 18நி. இயற்கை பாதிப்பு, திருப்பதி ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம், ஆடிக்கிருத்திகை. |
| 28 | 12 | ஞாயிறு | ஏகா | ரோகி | காமிகா ஏகாதசி, சுப நாள். |
| 29 | 13 | திங்கள் | துவா | மிரு | ஸோமப் பிரதோஷம், புதன். வ. உதயம். |
| 30 | 14 | செவ் | திர | திரு | மாதசிவராத்ரி, புதன்(வ) மிதுனம், திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம் நிறைவு. |
| 31 | 15 | புதன் | சசி | புன | சர்வ (ஆடி) அமாவாசை. |




# ஸப்தகிரி

சமயமாத இதழ்


வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்


ஜுலை 2019 மலர் 50 இதழ் 02


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| வேதவியாசர் - திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி. | 7 |
| ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 19 பெரியாழ்வாரும் பிள்ளைத்தமிழும் - திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 9 |
| ஸ்ரீமந்நாதமுனிகள் - திருமதி. இந்திரா ஆராவமுதன், ஸ்ரீரங்கம். | 13 |
| சிறார் வாக்கு : குருபக்தி - செல்வி. பா. ஹரிணிப்ரியா, இராமநாதபுரம். | 16 |
| ஸ்ரீகிரிவரதராஜப் பெருமாள் ஆலயம்–சதுரங்கப்பட்டினம் - திருமதி. ஜி. விஜயலக்ஷ்மி, கள்ளிடைக்குறிச்சி. | 17 |
| வடுக நம்பி அருளிய யதிராஜ வைபவம் - திரு. பி.டி. சேஷாத்ரி, சென்னை. | 20 |
| நமது திருக்கோயில் : ஸ்ரீபிரசன்னவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், கீலபட்லா -திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 24 |
| பச்சை தோரணம் : திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம் -திருமதி. ஏ. அருணா, திருப்பதி. | 31 |
| அத்திகிரி அருளாளன் அருட்தரிசனம் - திரு. சக்திவிநாயகம், காஞ்சிபுரம். | 34 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்–பக்த துருவனின் சரித்திரம்–2 - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 36 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 39 |
| திருக்குறுந்தாண்டகத்தின் ஸாரம் - டாக்டர். கே.கே..ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி. | 42 |
| 108 திவ்யதேச வைபவம் – திருத்தேவனார் தொகை - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 44 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் தவத்தினால் அனைத்து வெற்றிகளும் சாத்தியமே - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 46 |
| ஆடிக்கிருத்திகை - திரு. வி. சீதாராமன், சென்னை. | 48 |
| ஆயுர்வேதம் – சீரகம் - திருமதி. வி.உஷா, திருப்பதி. | 51 |
| 2019, ஜூலை மாத ராசி பலன் - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 53 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

ஓவியம் :
திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்


அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம், திருமலை.**

பின்னட்டை : **ஸ்ரீவிகனசாசாரியார் ஸ்வாமி, திருப்பதி.**

உங்களுடன்...



# குருவருளே! திருவருள்!!



"குருர் பிரம்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மகேஸ்வர:
குருசாக்ஷாத் பரம்ப்ரம்மா தஸ்மை ஸ்ரீகுரவே நம:"

மும்மூர்த்திகளுக்கு சமமாக விளங்குபவர் குரு. இறைவனையும், குருவையும் நாம் வேறுபாடின்றி காண்கின்றோம். இது குறித்தே "எழுத்தறிவிப்பவன் இறைவனாவான்" என்பர் பெரியோர். இந்து மத கலாச்சாரத்தில் குருவிற்கு வழங்கக் கூடிய மதிப்பானது பரம உன்னதமானது. மிகவும் பவித்திரமானது. லௌகீக கல்விக்கும், ஆன்மீகக் கல்விக்கும் "குரு"வின் அவசியம் அளவிடற்கரியது. ஆதலால் தான் "குருவில்லா கல்வி குருட்டுக் கல்வி" என்பர்.

லௌகீக பட்டறிவின்படி ஆராய்ந்தால் எழுத்தறிவிப்பவன் குருவே ஆவார். மனித குலத்திற்கே இறைவனின் சன்னிதிக்கு வழி காண்பிப்பவர் குருவே! எழுத கற்றுக் கொடுக்கும் பணியை எழுத்தறிவு தெரிந்த யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் கல்வியோடு நற்போதனைகளையும் கற்றுத்தருதல் வேண்டும். வாழ்க்கையென்பது கண் முன்னே காணக் கூடியது மட்டுமன்று. மொழி, உணர்வு, பார்வைக்கு எட்டாத அலௌகீக ஆத்ம சம்மந்த ஆனந்தத்தை அடையச் செய்பவரே உண்மையான குருவாவார். மேலும் பிரம்ம ஞான தேடலுக்காக முன்னோக்கி அடி வைக்கச் செய்பவர் சத்குருவாவார்.

குருவினை தேர்ந்தெடுப்பதில்தான் ஒரு சீடனின் திறமை வெளிப்படுகின்றது. இவ்வுலகினை அறிதலைவிட, ஞானம் அநுட்டானம் நன்றாகவே உடைய ஒரு நல்ல குருவை அடைதல்தான் சீடனுக்கு முதல் தேர்வாக அமைகிறது. குரு என்பவர் பாதையைப் போன்றவர். இலக்கை அடைவதற்கான பாதை சரியான பாதையாக அமைந்தால் நல்லபடியாக சென்றடைவோம். ஆனால் தவறான பாதையாக அமைந்தால் தவறான இடத்தை சென்றடைவோம்.

ஆழ்ந்த நம்பிக்கையுடன் குருவை விஞ்சிய சாஸ்திரம், தவம் இல்லை என்று எண்ணுதல் வேண்டும். அப்பொழுதுதான், அந்த குருவானவர் எதையும் கேட்காமலேயே அனைத்தையும் போதிப்பார். அறிவின்மையை போக்கக்கூடிய வழியைக் காண்பிப்பார்.

ஞானமார்க்கத்தை தெரிந்து கொள்ள கண்டிப்பாக ஒரு குரு அவசியமாகிறார். ஆனால் குரு என்பவர் ஒருவர் இல்லாமலே சிலந்தி, விஷப்பாம்பு, உயிர்களைக் கொல்வதைத் தவிர வேறொன்றும் தெரியாத திண்ணப் பருக்கும் மோட்சம் கிடைக்க வில்லையா? என நினைக்கலாம். அவர்களுக்கு குரு எவரும் இல்லை என்பது பொருளல்ல. அவர்கள் மனதில் இருந்த அசைக்கமுடியாத பக்தியே அவர்களுக்கு குருவாக விளங்கியது.

நாம் அங்குமிங்குமென்று திரிகின்ற நிலையற்ற தன்மையில் இருக்கின்றோம். ஆதலால்தான் நம்முடைய கையைப்பிடித்து நடக்க வைக்கக் கூடிய ஒருவர் இருத்தல் வேண்டும். அப்பேர்பட்டவரை நாம் தேடுதல் வேண்டும். அது போன்ற சீடர்களுக்காக இறைவனே குரு உருவில் தேடி வருவார்.

அறிவின்மை, மனைவி, மக்கள் எனும் புற்றில் நாம் வசிக்கின்றோம். புற்றினுள் இருந்து கண்களை திறந்து பார்த்தால் இருள் மட்டுமே தென்படும். சிறிது சிரமப்பட்டு அப்புற்றிலிருந்து வெளியே வந்து ஒரு குன்றின் மீது நின்றால் சூரியனை தரிசிக்கலாம். அப்பேர்பட்ட சூரிய கிரகணங்கள் மனிதன் மீது பட்டால், மகரிஷிகளாவார்கள். ஆக சிரத்தையுடனும், பக்தியுடனும் ஒரு சத்குருவை அடிபணிதல் வேண்டும், வழிபடுதல் வேண்டும். அதுவே சாக்ஷாத் பரப்பிரம்மாவான குருவிற்கு நாம் செலுத்தும் உண்மையான புஷ்பாஞ்சலியாகும்!



# வேத வியாசர்

திரு.ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி.

ஸ்ரீ:பதியான ஸ்ரீமந் நாராயணன் கிருஷ்ணாவதாரத்தில் பகவத் கீதை உபதேசத்தில் விபூதி யோகத்தில் *"முநீநாம் அபி அஹம் வியாச:"* என்கிறபடி "முனிவர்களில் வியாசர் நானே" என்பதிலிருந்து வியாசர் விஷ்ணுவின் அம்சமாகவே இப்பூவுலகில் அவதாரம் செய்தார். வியாசர் பராசர மகரிஷிக்கும் செம்படவப் பெண்ணான சத்யவதிக்கும் புதல்வராக மூன்றாவது துவாபரயுகத்தில் அவதரித்தார்.

வியாசர் அவதார காலத்தில் மகரிஷிகளாலும் முனிவர்களாலும் ஓதப்பட்ட வேதவாக்கியங்கள் பரமாத்ம தரிசனத்தினை முழுவதும் வழங்கினாலும் முறையாக தொகுக்கப்படவில்லை. வேதவாக்கியங்களுக்கு தவறான வியாக்கியானங்களும் கருத்துக்களும், அர்த்தங்களும் பல்கிப் பெருகின. இதனால் தர்மம் குலைந்து அதர்மம் தலையெடுக்கத் தொடங்கியது.

**வேதம் :**

கருணை உள்ளம் கொண்ட வியாசர் சரஸ்வதி நதிக்கரையில் அமர்ந்து வேதவாக்கியங்கள் அனைத்தையும் ஒருமித்து தியானித்தார். தம்முடைய தவத்தினாலும் பிரமச்சரியத்தினாலும் வேதவாக்கியங்களில் புனிதம் மற்றும் தன்மைகளுக்கேற்ப அவற்றினை ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்கிற நான்கு வேதங்களாகப் பிரித்துத் தொகுத்தார். வியாசர் என்பதற்கு தொகுத்தவர் என்கிறப் பொருளுமுண்டு. ரிக் வேதத்தை பைலமுனிவருக்கும், யஜுர் வேதத்தை வைசம் பாயனருக்கும், சாம வேதத்தை ஜைமினி முனிவருக்கும், அதர்வண வேதத்தை சுமந்து ரிஷிக்கும் உபதேசித்து உலகமெங்கும் வேதத்தினை சிஷ்ய பரம்பரையாக போதித்து பரவும்படி செய்தருளினார். இதிகாசங்களையும், புராணங்களையும் ஐந்தாவது வேதமாக உபதேசித்துப் பரவச் செய்தார்.

**மகாபாரதம் :**

இமயமலையின் அடிவாரத்தில் உள்ள ஒரு குகையில் தவமியற்றிய வியாசருக்கு மகாபாரதக்கதை முழுவதும் உதயமாகி பலவிதமான கிளைக்கதைகளுடன் ஒரு லட்சத்திற்கும் அதிகமான சுலோகங்களாக பதிந்திருந்தது. இந்த அரிய பொக்கிஷத்தை சிஷ்யர்களுக்கு எவ்வாறு போதிப்பது என்று தவித்த வியாசருக்கு பிரம்மா நேரில் தோன்றினார்.

வியாசர் பிரம்மாவிடம், "பகவானே வேதங்கள், வேதாங்கங்கள், உபநிடதங்கள் இவற்றின் ரகஸ்யார்த்தங்களையும் தேவர், அரக்கர், மனிதர், விலங்கு, தாவரங்கள் இவற்றின் பிறப்பு, மூப்பு, வியாதி, இறப்பு பற்றியும், ஆத்ம ஞானம், தர்க்கம், வைத்தியம், கடல், நதி, புண்ணிய க்ஷேத்திரம், பர்வதம், காடுகள் பற்றியும், தர்மபரிபாலன முறையில் அரசாட்சி நீதி தவறா நெறிமுறைகள், விதிகள், உத்தமமான கடமைகள், பரமாத்மாவின் நுண்மையான செயல்பாடுகள் இவற்றினைப் பற்றியும் விரிவான இதிகாசம் ஒன்று மனத்தினில் உதயமாகியுள்ளது. இதனை எழுதுகின்ற ஆற்றல் உள்ளவர் பற்றி வழிகாட்ட வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்.

பிரம்மாவும் உத்தமமான இந்த காவியத்தை எழுதும் வல்லமை விநாயகப் பெருமானுக்கே உள்ளது என்று வழிகாட்ட, வியாசர் விநாயகரை தியானித்தார். வியாசர் முன் உதயமான விநாயகர் மகாபாரதம் எழுதுவதற்கு நிபந்தனை ஒன்றினை விதித்தார் அதாவது எழுதத் தொடங்கியவுடன் எங்கேயும் நிறுத்தாமல் சுலோகங்கள் சொன்னவண்ணம் இருந்தால் மட்டுமே தம்மால் எழுத முடியும் என்றுரைத்தார். வியாசரும் விநாயகரிடம் சுலோகங்களுக்கு சரியான அர்த்தம் தெரிந்தால் மட்டுமே எழுத வேண்டுமாய் பிரார்த்தனை செய்தார்.

வியாசர் சொல்லச் சொல்ல மகாபாரதத்தை விநாயகர் இடைவிடாமல் எழுதி வந்தார். அவகாசம் தேவைப்படும் போதெல்லாம் வியாசர் வேண்டுமென்றே பொருள் புரியாத சுலோகங்களை சொல்லும்போது விநாயகர் எழுதுவதை நிறுத்தி யோசித்து



பிறகு எழுதிய வண்ணம் இருந்தார். இவ்வாறாக மூன்றாண்டுகள் இரவு பகல் என்று பாராமல் வியாசரால் மகாபாரதம் அருளப்பட விநாயகர் எழுதி முடித்தார். வேதவேதாங்கங்களை கற்பதற்கு அதிகாரமில்லாத பாமரர்களும் தர்மங்களை அறிந்து அதன்படியொழுகி பராமாத்மாவினைச் சரணடைந்து உய்வடைய வேண்டும் என்பதற்காகவே வியாசரால் புராணங்களும் இதிகாசமும் அருளப்பட்டது.

*"இதிகாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும் ஹயேத் பிமேத் யல்பஸ்ருதாத் வேதோ மாமயம் ப்ரசலிஷ்யதி"*

–மகாபாரதம் 1–1–204

வேதங்களை இதிகாச புராணங்களின் வாயிலாக கற்க வேண்டும் அவ்வாறில்லையெனில் வேதங்கள் தவறாக உணரப்படும். மகாபாரதத்தில் ஒரு பகுதியாக உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை அனைத்து உபநிடதங்களின் சாரமாக ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளியதை வியாசர் அருளியுள்ளார். அம்புப்படுக்கையில் பீஷ்மர் அருளிய விஷ்ணு சஹஸ்ரநாமம் அடியார்களுக்கு மோட்சத்தை அளிக்கக்கூடிய சாதனமாக வியாசரால் அருளப் பட்டுள்ளது.

## ஸ்ரீமத் பாகவதம் :

உலக நன்மையின் பொருட்டு வேதங்களைத் தொகுத்தும், புராணங்களை எழுதியும், மகாபாரத இதிகாசத்தை அளித்தும் வியாசரின் உள்ளத்திற்கு அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படவில்லை. இன்னதென்று தெரியாத மனக்குறை வியாசரைக் கவலையில் ஆழ்த்தியது. நாரதரிடம் இதற்கு சரியான காரணத்தைக் கூறுமாறு வேண்டினார்.

நாரதர் "மகிமை பொருந்திய வியாசரே தர்மங்களை அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் புராணங்களையும் சாஸ்திரங்களையும் தாங்கள் இயற்றி இருந்தாலும் பகவானை முழுவதும் அறிந்து கொள்ள இயலாது பகவானுடைய ஸ்வரூப ரூப திருக்கல்யாண குணங்களை அறிந்து உணர்ந்தால் மட்டுமே பகவானை முழுவதும் அனுபவித்து அடைய முடியும். எனவே பகவானின் திருக்கல்யாண குணங்களை விளக்கும் திவ்யமான சரித்திரங்களை எளிமையான நூலாக தாங்கள் இயற்றினால் தங்கள் மனக்குறை நீங்கி பேரின்பம் அடைவீர்கள்" என்று அறிவுரை கூறினார்.

வியாசர் தெளிவடைந்தவராய் சரஸ்வதி நதியின் மேற்புறத்தில் இலந்தை மரங்கள் சூழ்ந்த சமயாபிராசம் என்ற இடத்தில் ஆஸ்ரமம் அமைத்து பரம்பொருளை தியானித்து ஸ்ரீமத் பாகவதம் என்கிற உன்னத நூலினை இயற்றி தம்முடைய அவதாரத்தின் முழுமையான ஆனந்தத்தினை அடைந்தார்.

## பிரம்ம சூத்திரம் :

உபநிடதங்களில் உள்ள வாக்கியங்களில் உள்ள அர்த்தங்களை எல்லாம் உள்ளடக்கிய 545 சூத்திரங்களைக் கொண்டதாக பிரம்மசூத்திரம் என்கிற கிரந்தம் வியாசரால் இயற்றப்பட்டுள்ளது. இதில் பரமாத்ம, ஜீவாத்ம, விரோதி, சாதனாமார்க்கம் மற்றும் புருஷார்த்தம் ஆகியவை சூத்திரவடிவில் அருளப்பட்டுள்ளது.

பிரம்மசூத்திரம், ஸ்ரீமத் பகவத் கீதை நூல்கள் இந்து சமய வேதாந்தத்தின் அடிப்படை ஆதார நூல்களாக விளங்குவதால் சமயச் சான்றோர்கள் தத்தமது மார்க்கத்தை நிரூபிப்பதற்கு இவ்விரண்டு நூல்களுக்கு வியாக்கியானம் அருளியுள்ளார்கள். பகவத் ஸ்ரீராமாநுஜர் பிரம்ம சூத்திரத்திற்கு வியாக்கியானம் அருளி சரஸ்வதி தேவியால் தலைமேல் வைத்து அங்கீகரிக்கப்பட்டு "ஸ்ரீபாஷ்யம்" என திருநாமகரணம் இடப்பட்டு ஸ்ரீவைஷ்ணவர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதத்தில் வரும் பௌர்ணமி "குரு பூர்ணிமா" அல்லது "வியாச பூர்ணிமா" என கொண்டாடப்படுகிறது. இந்நாளில் இந்துக்கள் அனைவரும் வியாசரை முன்னிட்டுக் கொண்டு தமக்கு ஞானோபதேசம் அளித்து மோட்சத்திற்கு வழிகாட்டிய குருவினைப் போற்றி வணங்குவர்.

*"வியாசாய விஷ்ணுரூபாய வியாசரூபாய விஷ்ணவே"*

– விஷ்ணு சஹஸ்ரநாமம்.



# பெரியாழ்வாரும் பிள்ளைத்தமிழும்



திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி

எம்பெருமானுக்கு எத்தனையோபேர் மங்களா சாசனம் செய்திருக்கிறார்கள். ஆனால், "ஐயோ! எம்பெருமானுக்கு என்னாகுமோ, இந்த இருள் தருமா ஞாலத்திலே" என்று வயிறு பிடித்து, பரிவு விஞ்சப் பல்லாண்டு பாடியவர் பெரியாழ்வார்.

விஷ்ணுசித்தரான அவர் இந்தப் பொங்கும் பரிவாலே பெற்றார் "பெரியாழ்வார்" என்ற பெயர் என்பார் உபதேசரத்தின மாலையில் சுவாமி மணவாள மாமுனிகள்.

திருப்பல்லாண்டுக்கும், திருப்பாவைக்கும் வைணவ மரபிலே ஒரு தனி ஏற்றம் உண்டு. இரண்டுமில்லாது தினசரி வழிபாடு நிறைவு பெறாது.

பெரியாழ்வாருடைய திருநாமம் விஷ்ணு சித்தர். இதுவும் காரணப்பெயர்தான். விஷ்ணுவை சதா சர்வ காலமும் தன் சித்தத்தில் வைத்துப் போற்றுபவர் என்பதால் இந்தத் திருநாமம்.

பகவான் விஷ்ணுவின் சித்தத்தில் சதா இவர் இருப்பதால் விஷ்ணு சித்தர் என்று நயமுரைப்பாரும் உண்டு. காரணம் என்னையே நினைக்கும் பக்தன் என்னுடைய உயிருக்கு நிகரானவன் என்று கீதையில் பகவான் கண்ணன் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட பல சிறப்புகளைப் பெற்ற பெரியாழ்வார் ஆனி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் கருடாத்மாவாகிய கருடனுடைய அம்சமாக ஸ்ரீவில்லி புத்தூரில் அவதரித்தார்.

இவர் பகவானுக்குச் செய்த தொண்டு இரண்டு பிரிவாக அமைந்தது. ஒன்று பாமாலை சூட்டினார். இரண்டாவது பூமாலை சூட்டினார்.

இதில் மகிழ்ந்த பூதேவி நாச்சியார் தனது வைகுந்த வான்போகத்தைத் துச்சமென எண்ணி பெரியாழ்வாரின் திருமகளாய் – ஆடிப்பூரத்தில் ஆண்டாளாக – இவர் நந்தவனத்தில் அவதரித்தார். கோதை என்ற பெயரால் வளர்த்து (கோதை என்பதற்கும் மாலை என்று பொருள் உண்டு) பூமாலையோடும் பாமாலையோடும் சேர்த்து கோதையையும் பகவானுக்குக் கொடுத்து பகவா னுக்கே மாமனாரானார்.

பாண்டிய மன்னனின் சந்தேகங்களைத் தீர்க்க எண்ணி – யார் பரதத்துவம் என்ற கேள்விக்கு வேத வேதாந்தங்களை எல்லாம் வடிகட்டிச் சாறு பிழிந்து நிர்ணயம் செய்து கொடுத்ததால் வேதபிரான் பட்டர் என்றே அழைக்கப்பட்டார்.

*"வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் பாதங்கள் யாமுடைய பற்று"* என்று இந்நிகழ்ச்சியை இவருடைய திருப்பல்லாண்டுத் தனியன் எடுத்துக் கூறும்.

இதில் "வேண்டிய வேதங்கள்" என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. "வேண்டிய" என்றால் "தேவைப்படு கின்ற" என்றும் ஒரு பொருள். பரமாத்ம நிரூபணத்திற்கு வேதத்தின் எந்தெந்த பாகங்கள் தேவைப்படுகிறதோ அந்தப் பகுதிகளை எல்லாம் எடுத்துரைத்து நிரூபித்துக் காட்டினார் என்று ஒரு பொருள்.

இன்னொரு அதிசயமான பொருளும் உண்டு. இதற்கு முன்பு இருந்தோர் வேதங்களுக்குத் தவறான பொருள் நிர்ணயித்து குழப்பவாதம் செய்து, வேதங்க ளுக்கு அவப்பெயர் ஏற்படுத்தியிருந்தனர். இதனால் வேதங்கள் வருந்தின. வருந்திப் பொலிவிழந்த வேதங் கள், பட்டர்பிரானான இவரிடம் சரியான பொருள் சொல்லி மீட்டெடுத்து உதவ வேண்டும் என வேண்டிய தாம்.

அவ்வாறு வேண்டிய வேதங்களைச் சரியான அர்த்தத்தில் எடுத்துரைத்து பரதத்வ நிர்ணயம் செய்தார் பெரியாழ்வார் என்று ஒரு நயமான பொருளும் உண்டு.



இவர் இரண்டு பிரபந்தங்களைப் பாடினார். ஒன்று "திருப்பல்லாண்டு". ஓங்காரத்தின் அதாவது பிரணவத் தின் அர்த்தமாக இது விளங்குகிறது. இரண்டாவது "பெரியாழ்வார் திருமொழி". அதில் முதல் பகுதி கண்ணன் மீது பாடிய பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் இலக்கியத்தில் வழங்கும் பிரபந்த நூல் வகைகளுள் ஒன்று. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு பால்களிலும் பாடப்படுவதுண்டு.

மூன்று மாதம் முதல் இருபத்தொரு மாதம் வரை யிலான குழந்தையின் வாழ்க்கைக் காலத்தைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துக் காண்பர். ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பாடல்கள் வீதம் அமைத்துப் பாடப்படுவது வழக்கு. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனும் பத்துப் பருவங்களையுடையது.

*"சாற்றிய காப்புத்தால் செங்கீரை சப்பாணிமாற்றாரிய*
*முத்தமே வாரானை - போற்றாரிய*
*அம்புலியே யாய்த்த சிறுபறையே சிற்றிலேபம்புசிறு*
*தேரோடும் பத்து"*

என்கிறது வெண்பாப் பாட்டியல் நூற்பா (பாடல்7).

தமிழர் பண்பாட்டில் முதல் 2 திங்கள் குழந்தையை வெளியில் கொண்டு வர மாட்டார்கள். எனவே, பிள்ளைத்தமிழ், 3-ம் திங்கள் முதல் பாமாலைகளால் தொடுக்கப்படும். 3-ம் திங்கள் காப்பும், 5-ம் திங்களில் செங்கீரையும், 7-ம் திங்களில் தாலாட்டும், 9-ம் திங்களில் சப்பாணியும், 11-ம் திங்களில் சிற்றிலும், 19-ம் திங்களில் சிறுபறையும், 21ம் திங்களில் சிறுதேரும் என்பன ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரியது.

இவ்வகைப் பிரபந்தத்தின் முன்னோடியாக பெரியாழ்வாரைக் கொள்வர்.

தொல்காப்பியத்துக்கு 1200 ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய நூலாயினும் திருமாலைக் குழந்தையாக்கிக் கொண்டு பெரியாழ்வார் பாடும் பாடல்கள் இதற்கு இலக்கியமாகத் திகழ்கின்றன.

பிள்ளைத்தமிழ் பத்து பருவங்களில் தான் அமைய வேண்டும் என்பது வரையறை ஆகும். பெரும்பாலான பிள்ளைத்தமிழ் நூல்கள் இவ்வாறே பாடப்பட்டுள்ளன.



பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முதல் பருவம் காப்பு ஆகும். இதில் பெரியாழ்வார் புதுமையைச் செய்திருக்கிறார். இந்தக் காப்புப் பருவத்தின் சாரமான செய்திகளைத் திருப்பல்லாண்டில் காணலாம். காக்கும் கடவுளான திருமாலுக்கு *"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பல கோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வித் திருக்காப்பு"* என்று மங்கல வாழ்த்துச் சொல்வதால் பெரியாழ்வார் ஆனார்.

பெரியாழ்வார் தமது பிள்ளைத் தமிழைத் தொடங்கும் பொழுது கண்ணனின் அவதார நாளைக் கொண்டாடுகிறார். பெரியாழ்வார் கிருஷ்ண ஜெயந்தியை எப்படிக் கொண்டாட வேண்டும் என்று இதில் வழி காட்டுகின்றார்.

*"ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார் நாடுவார் நம்பிரான் எங்குற்றான் என்பார்"* என கண்ணன் எனும் தெய்வ மழலையைப் பார்க்கும் தமது பரவச உணர்வைத் தமிழ்ப் பாசுரங்களால் அற்புதமாக வெளிப்படுத்துகிறார். அடுத்து கண்ணனின் பாதாதிகேச வருணனையை மிக அற்புதமாக 20 பாசுரங்களில் வர்ணிக்கிறார். அடுத்து *"'மாணிக்கம் கட்டி வயிரமிடைக்கட்டி"* என்று தாலாட்டுப் பாடுகிறார். இன்றும் திருக்கோயில்களில் அர்த்த ஜாமத்திற்குப் பின் பாலமுது நிவேதனம் செய்யும் போது இப்பாசுரங்கள் சேவிக்கப்படுகின்றன. 15ம் திங்களில் பாட வேண்டிய அம்புலிப் பருவத்தை அடுத்து பாடுகின்றார். அடுத்து ஐந்தாம் திங்களில் பாட வேண்டிய செங்கீரைப் பருவத்தையும், ஒன்பதாம் திங்களில் பாட வேண்டிய சப்பாணிப் பருவத்தையும் அடுத்தடுத்துப் பாடுகின்றார்.

பிள்ளைத்தமிழ் பருவங்கள் பெரியாழ்வார் பாடிய பிள்ளைத்தமிழில் மாறி இருப்பினும் அழகும் தமிழ்ச் சுவையும் மாறா அழகுடையனவாக இருக்கின்றன. கண்ணனின் பால லீலைகளை இத்தனை அழகுடனும் பாவங்களுடனும் பாடிய ஆழ்வார்களுள் பெரியாழ்வாரை மிஞ்ச எவரும் இல்லை.

மக்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாலாட்டு பாடவும், நிலாவைக் காட்டி சோறு ஊட்டவும் வேறு பாடல்களைத் தேட வேண்டாம். பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ் பாசுரங்கள் போதும். தமிழும் விஷ்ணு பத்தியும் சேர்ந்து பிள்ளைகளிடம் வளர இதுவே வழி.

**பெரியாழ்வாரின் திருவடிவாரங்களுக்கு பல்லாண்டு பாடுவோம்.**

**வாழ்க்கை நெறிகள் தொடரும்...**

## வாசகர்களுக்கு அறிவிப்பு

**பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.**

**நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.**

பிரதான ஆசிரியர்
அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 35

### இடமிருந்து வலம்

1. ஓணம் பண்டிகை முதன் முதலில் தொடங்கப்பட்ட தலம் ...(7)
4. வானத்தில் கருடனைக் காணும் போது....(9) என மனதில் சொல்லிக் கொள்ள வேண்டும்.
5. அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் உபதேசித்தது....(6)
10. நவதிருப்பதிகளில் தென் திருப்பேரை எந்த கிரகத்திற்கு உரிய தலம்...(4)
12. மகாலட்சுமியை குறித்த விரதம்...(10)
13. எந்நேரத்திலும் எந்த காலத்திலும் பெருமாளை நினைத்து உச்சரிக்கப் படும் திருமந்திரம்...(4)
16. ஸ்ரீபத்ம சக்கரத்தை கையில் வைத்தி ருக்கும் பெருமாள் உள்ள தலம்....(9)
17. தமிழகத்தில் 3வது பெரிய கோபுரம்....(7)
18. காஞ்சியில் பிரம்மாவின் யாகத்தை தடுப்பதற்காக தோன்றிய நதி.... (4)

### வலமிருந்து இடம்

2. யுக யுகமாக எத்தனையோ நினைவுகள் படர்ந்துள்ள படித்துறையை கழுவிச் செல்லும் நதி....(3)
3. உதயகிரி கோட்டையை கைப்பற்றிய போது வெற்றியைக் கொண்டாடும் விதத்தில் திருமலையப்பனுக்கு 30000 பவுன்களால் அபிஷேகம் செய்தவர்... (9)
6. சாளக்கிராம கல்லினால் ஆன சுயம்பு மூர்த்தியாக அருள்பாளிக்கும் எட்டு தலங்களில் ஒன்று....(5)
8. பாற்கடலை இவர்களும் கடைந் தார்கள்....(6)
9. ரங்கநாதர் ரங்கநாயகியை மணம் புரிந்த நாள் ....(9)
11. கிருஷ்ண அவதாரம் எந்த கிரகத்திற்கு அதிபதி.......(5)
14. உறங்கும் முன் பெருமாளை நினைத்து உச்சரிக்கப்படும் திரு நாமம்...(6)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | ■ | | | 2 | 20 |
| | ■ | | | | | | | | | 3 | |
| | 4 | | | | | | | | | ■ | |
| | 5 | | | | | | | | | | 6 |
| 7 | ■ | ■ | ■ | | | | | | 8 | ■ | |
| | | | | | | | | 9 | | | |
| ■ | ■ | 10 | | | | | | | 11 | | |
| 12 | | | | | | | | | | | |
| ■ | 13 | | | | | | | | 14 | | |
| ■ | | | | | | | | | 15 | | ■ |
| ■ | 16 | | | | | | | | | | ■ |
| 17 | | | | | | | ■ | 18 | | 19 | |

தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.

விடைக்கு 47 ம் பக்கம் பார்க்கவும்.

15. லட்சுமிக்காக சிவபெருமான் ஆடிய நடனம்...(9)

### மேலிருந்து கீழ்

8. பாண்டவர்கள் புதுப்பித்த ஐந்து கோவில்களை கேரளாவில் இப்படி அழைக்கின்றனர்....(7)
20. நவதிருப்பதிகளில் ஒரு தலம்....(9)

### கீழிருந்து மேல்

7. மூவுலகையும் ஆள நினைத்த அசுரகுல மன்னன்....(4)
19. இறைவனின் மகிழமாலையை அணிந்திருந்தபடியால் நம்மாழ்வார் இவ்வாறு அழைக்கப்பட்டார்...(7)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்



# ஸ்ரீமந்நாதமுனிகள்

சேனை முதலியாரின் படைத்தலைவர்களில் ஒருவர் தான் கஜானனர் என்கிற நித்ய சூரி. இவருடைய அம்சமாகத்தான் நாதமுனிகள் அவதரித்தார். இவருடைய தந்தையின் பெயர் ஈஸ்வர பட்டாழ்வார். காட்டு மன்னார் கோயில் என்றழைக்கப்படும் வீர நாராயணபுரத்தில் சோபக்ருத் வருடம் ஆனி மாதம் 7ம் தேதி பௌர்ணமி திதி புதன்கிழமை அனுஷ நக்ஷத்திரத்தில் பிறந்தார். இவருடைய குலம் சொட்டைக்குலம். கோத்திரம் : ஷடமர்ஷணம்.

மஹாவித்வானாக இருந்த இவர் யோகாப்யாசத்திலும் சிறந்து விளங்கினார். பகவத் பாகவத கைங்கர்யங்களைச் செய்து கொண்டு ப்ரவசனங்களும் செய்து வந்தார். அந்த ஊர் பெருமாளான மன்னனார் சன்னிதியில் கைங்கர்யம் செய்தவாறு இருந்தார்.

ஒரு நாள் மேல்நாடு என்றழைக்கப்படும் திருநாராயணபுரத்திலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்து மன்னனார் முன்பு திருவாய்மொழி பாசுரத்தை இவ்வாறு இசையுடன் பாடினார்கள். *''ஆராவமுதே! அடியேன் உடலம்''* என்று ஆரம்பித்து *''குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்''* என்று முடித்தார்கள்.

முனிகள் மிகவும் ரசித்து கேட்டதனால் அவர்களிடம் "உங்களுக்கு திருவாய்மொழி ஆயிரமும் பாட வருமா" என்று வினவினார். "இப்பத்தை தவிர வேறு பாசுரங்களை அறிவோமில்லை" என்றபடி சென்று விட்டனர்.

அன்று முதல் அந்த வரிகள் மீண்டும் மீண்டும் நாதமுனிகளின் செவியில் ரீங்காரம் செய்தபடியே இருந்தது. அதனால் குருகூர் செல்ல வேண்டும் என்கிற உத்வேகம் அவருள் எழுந்தது. பெருமாளான மன்னனாரிடம் விடை பெற்றுக் கொண்டு ஆழ்வார் திருநகரி சென்றார். அந்த ஊர் பெருமாளான *''பொலிந்து நின்ற பிரானையும்''* நம்மாழ்வாரையும் சேவித்தார்.

பிறகு விசாரித்ததில் மதுரகவிகள் சிஷ்யர்கள் பரம்பரையில் வந்த ஸ்ரீபராங்குச தாஸர் என்பவரிடம் தாம் வந்த காரணத்தைக் கூறினார்.

திருவாய்மொழியும் மற்ற பிரபந்தங்களும் மறைந்து வெகு காலம் ஆகி விட்டதே. இருந்தும் எங்கள் குலக்கொழுந்து ஸ்ரீமதுரகவிகள் அருளிய *''கண்ணிநுண் சிறுத்தாம்பு''* என்கிற 11 பாசுரங்களை ஆழ்வார் முன்னிலையில் உண்மையான பக்தி, நியமத்துடன் பன்னீராயிரம் தடவை ஜபித்தால் ஆழ்வார் பிரசன்னமாவார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம் என்றார். அதைக் கேட்ட அடுத்த க்ஷணம் அதை தமக்கு உபதேசிக்கும்படி அவரது திருவடிகளில் விழுந்து வேண்டிக் கொண்டார் நாதமுனிகள். அவரும் உபதேசித்தார்.

முனிகளும் நியமத்துடன் பன்னீராயிரம் முறை ஜபித்தவுடன் ஆழ்வார் அவர் முன் யோக

திருமதி. இந்திரா ஆராவமுதன்,
ஸ்ரீரங்கம்

ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு **0877-2264543** தொலை பேசியில் தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும். மேலும் sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவியுங்கள்.

நிலையில் காட்சி தந்து, "என்ன வேண்டும்?" என்று கேட்டார். "ஸ்வாமி அடியேனுக்கு திருவாய்மொழி திவ்ய பிரபந்தத்தை பிரசாதிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

நம்மாழ்வாரும் உள்ளம் உவந்து அவருக்கு ஞானக்கண்ணைக் கொடுத்து, ரஹஸ்யத்ரயம், நாலாயிர திவ்யப்பிரபந்தம், அஷ்டாங்க யோக ரஹஸ்யம் ஆகியவைகளை பிரசாதித்தார். திருவாய்மொழியின் 5–2–1, ***"பொலிக, பொலிக"*** என்கிற பதிகம் வரும் போது "யார் அந்த கலிபுருஷன்" என்று நாதமுனிகள் வினவினார். அவரைப் பற்றிய விவரத்தை சொல்லியதுடன் அந்த ஊரில் இருக்கும் சிற்பியை அழைத்து விபரம் அளித்து விக்ரகத்தை செய்யச் சொன்னார். சிற்பியும் நியமத்துடன் சொன்ன அளவுகளின்படி ராமாநுஜர் விக்ரகத்தை உருவாக்கித் தந்தார். அதை நம்மாழ்வார் முனிகளிடம் கொடுத்து விட்டு மறைந்தார். முனிகளும் தம் ஊரை அடைந்து, தன் மருமகன்களான கீழஅகத்தான், மேலை அகத்தானுக்கு பிரபந்த பயிற்சியைத் தந்து, பரவ வைத்தார்.

கங்கை கொண்ட சோழபுரம், ராஜ சபையில் தேவ கானத்தை ஒரு தாசியும், மனுஷ கானத்தை ஒரு தாசியும் பாடினார்கள். மன்னனுக்கு தேவகானம் புரியாததால் மனுஷ கானத்தைப் பாடிய தாசிக்கு மட்டும் வெகுமதி அளித்தார். இதனால் வருத்தமுற்ற தேவகானம் பாடிய தாசி மன்னனார் கோயிலுக்கு வந்து பாடினாள். முனிகளுக்கு தேவகானம் தெரியுமாதலால் பாட்டை மிகவும் ரசித்து பரிசுகள் கொடுத்தார். அவள் ராஜாவிடம் போய் தனக்கு பரிசு கிடைத்ததைச் சொன்னவுடன் நாதமுனிகளை அரசவைக்கு வரவழைத்து காரணம் கேட்டார். தேவகானத்தை விளக்கும்படி சொன்னார். ஒரு தூணில் ஒரு தாளத்தை (ஜாலரா) வைத்து விட்டு தேவதாசியைப் பாடச் சொன்னார். அவள் பாடும்போது தூண் உருகியது. பாட்டை நிறுத்தச் சொன்னவுடன் தாளம் தூணுடன் ஒட்டிக் கொண்டதால் அதை எடுக்க முடியவில்லை. இறுகி விட்டதால், மறுபடியும் அவளைப் பாடச் சொல்லும் போது தூண் உருகும் நிலையில் இருக்கும்போது தாளத்தை வெளியே எடுத்து காண்பித்தார். எல்லாரும் இதைப் பார்த்து வியந்தனர். மேலும், நாதமுனிகள் 400 தாளங்களை கொண்டு வரச் சொல்லி அவற்றின் ஒவ்வொன்றின் எடையையும் துல்லியமாக இவ்வளவு என்றார். அரசனும் அதை சோதிக்கச் சொன்னவுடன் எல்லாமே முனிகள் சொன்னவாறே இருந்ததைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து தேவதாசிக்கு நிறைய பரிசுகளை

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. நரசிம்மர் அவதரித்த நட்சத்திரம் எது?
2. அனுமார் எத்தலக் கோயிலில் தம்பூராவுடன் ஸ்ரீராமபஜனை செய்வது போல் எழுந்தருளியுள்ளார்?
3. உத்திரமேரூர் ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயிலில் துவார பாலகிகள் யார்?
4. வெள்ளைக் குதிரையுடன் கல்கி பகவானை நாம் எத்தலத்தில் தரிசிக்கலாம்?
5. மேலை வீடு, கீழை வீடு என்றழைக்கப்படும் திவ்ய தேசங்கள் யாவை?
6. எத்திவ்ய தேசத்தில் மட்டும் திருமால், வலது கரத்தில் சங்கு ஏந்தியுள்ளார்?
7. ஸ்ரீவராக மூர்த்தியாகவே தரிசனம் தரும் பெருமாள் யார்? எத்தலத்தில் எழுந்தருளியுள்ளார்?
8. தேவரிஷிகளில் முதன்மையானவர் யார்?
9. வியாசரின் புதல்வர் யார்?
10. சுந்தர காண்டத்தின் நாயகர் யார்?

விடைகளுக்கு 21ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : கே. ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.

கொடுத்தனுப்பினார். நாதமுனிகளுக்கும் பரிசுகளைக் கொடுக்க முன் வந்த போது, அவர் தான் பற்றற்றவர் ஆதலால் மறுத்து விட்டு தமது இருப்பிடம் திரும்பினார். அரசனும் நாதமுனிகளிடம் பெருமதிப்பு வைத்து அவரைப் பார்க்க அவரது இடத்துக்கு வந்து போவதாக இருந்தார்.

கம்பரும் நாதமுனிகளும் சமகாலத்தவர்கள். கம்ப ரின் ராமாயணத்தை வைணவ நூல் என்று சிதம்பரத்தில் உள்ளவர்கள் அதை அரங்கேற்றம் செய்வதற்கு அனுமதி தர மறுத்தனர். கம்பருக்கு உதவுவதற்காக நாதமுனிகள் ராமாயணத்தை அரங்கேற்றம் செய்வதற்கு மேட்டு அழகிய சிங்கர் சன்னதி (ஸ்ரீரங்கத்தில் ரங்க நாயகி தாயார் சன்னதிக்கு எதிரில்) மண்டபத்தில் ஏற்பாடு செய்தார். நரசிம்மர் படலம் வாசிக்கப்படும் போது "கடகட" வென்று நரசிம்மர் சிரிப்பது போன்ற ஓசை கேட்டு எல்லோரும் வியந்தனர். அவ்வாறு சிரித்தவர் மேட்டு அழகிய சிங்க ரான நரசிம்ம பெருமாளே தான். ராமாயணத்திற்கு அங்கீ காரம் கிடைத்து விட்டதற்கு இதை விட வேறு உதாரணம் வேண்டுமா. இவ்வாறு கம்பரின் ராமாயண அரங்கேற்றம் ஸ்ரீரங்கத்தில் இனிதாக முடிந்தது.

ஸ்ரீரங்கத்தில் ரெங்கா ரெங்கா வாசல் வழியாக நுழையும்போது முதலில் உள்ள ஒரு சன்னிதி தான் ஸ்ரீமந் நாதமுனிகள் சன்னிதி. அந்த சன்னிதியில் அவர் ஆரா தித்த வீர நாராயண பெருமாள் மற்றும் ஆளவந்தார், நர்த்தனகிருஷ்ணன், ஆண்டாள் ஆகியோர் உள்ளனர். சன்னிதிக்கு எதிரில் உள்ள ஒரு நூறு கால் மண்டபத்தில் தான் ரங்கநாதர் வீதி உலா சென்று வரும்போது திருவந்திக்காப்பு நடைபெறும். அதை உள்ளிருந்த படியே நாதமுனிகள் பார்த்தபடி இருப்பார். மேலும் அந்த தூண்களில் உள்ள ஒரு தூணில் கூப்பிய கைகளுடன் நாதமுனிகளுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் கம்பரின் சிலையும் உள்ளது. அதை நாம் இப்போதும் பார்க்க லாம்.

இவ்வாறு இருக்கும்போது, நாதமுனிகளின் பெண் பிள்ளைகள் வந்து "ஐயா! நம் அகத்துக்கு இரண்டு வில்லிகளும், ஒரு பெண்ணும், ஒரு குரங்கும் வந்து "நாத முனிகள் எங்கே" என்று கேட்டு நிற்கிறார்கள்" என்று சொன்னவுடன் பதறி எழுந்து, வந்தவர்கள் ராம, லக்ஷ்மண, சீதா, அனுமான் என்பதாக ஊகித்துக் கொண்டு அவர்களைப் பார்க்க வாசலுக்கு வந்தார் நாதமுனிகள். அதற்குள் அவர்கள் திரும்புவதைப் பார்த்து அவர்கள் பின்னாலேயே ஓட்டமும் நடையுமாக பின் தொடர்ந்தார். வீரநாராயண புரத்திலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் கீழ வாசல் வரை வந்தவர் அவர்கள் மறைவதைப் பார்த்தார். உடனேயே இன்னும் வேகமாகச் செல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் செல்லும் போது தடுக்கி விழுந்து மயக்கமடைந்ததுடன் மீளாத் தூக்கத்திலும் ஆழ்ந்து விட்டார். அவர் விழுந்த இடம் சொக்கப்பள்ளம் ஆகும்.

"பட்டினத்தார் எங்கே" என்று கேட்டுக் கொண்டு இறைவன் வந்தாராம். அதே போல, "நாதமுனிகள் எங்கே" என்று கேட்டுக் கொண்டு ராமரே வந்தார். மறைந்த நாதமுனிகள் பரம்பரையில் தான் அரையர்கள் வருகிறார்கள். கோயிலில் வைகுண்ட ஏகாதசி திருவிழா வில் நடைபெறும் அரையர் சேவை மிகவும் பிரபல மானது. அபிநயத்துடன் அவர்கள் நாலாயிரம் பாசுரங் களைப் பாடுவார்கள். இதைக் கேட்க பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

வள்ளுவரின்

*"கோளில் பொறியிற்குண மிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை"*

என்கிற குறள் அஷ்ட குணம் உள்ள பகவானின் திருவடிகளில் வணங்காத தலைகள் இருந்தும் பய னில்லை என்கிறது. நாம் வணங்காத் தலை உள்ளவர் களாக இல்லாமல், பகவானின் பாதக்கமலங்களைப் பற்றிக் கொள்வோம். புத்துயிர் பெற்ற நாலாயிரத்தையும் பாராயணம் செய்தபடி ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு நன்றி செலுத்துவோமாக!





சிறார் வாக்கு

# குரு பக்தி

செல்வி. பா. ஹரிணிபிரியா, இராமநாதபுரம்.

பாண்டவர்களும் கௌரவர்களும் குரு துரோணரிடம் போர் கலைகள் பயின்றனர். வில் வித்தையில் அர்ச்சுனன் சிறப்புற்று விளங்கினான். துரியோதனனுக்கு அர்ச்சுனன் மீது பொறாமை மிகவாக இருந்தது. ஆதலால் தனது தாத்தா பீஷ்மரிடம் தனக்குத் தெரியாமல் துரோணாசாரியார் அர்ச்சுனனுக்கு சிறப்புற கற்றுத் தருவதாகக் கூறினான். பீஷ்மரும் துரோணரிடம் இது பற்றி கேட்பதாக துரியோதனனிடம் கூறினார். ஒரு நாள் பீஷ்மர் துரோணரது கல்வி போதனையில் மாணவர்களது திறன் பற்றியும், கற்கும் நிலை பற்றியும் கேட்டார். துரோணர் தனக்குள் "ஏதோ நடந்திருக்கிறது" என உணர்ந்து இது துரியோதனன் செயலாக இருக்க வேண்டுமென எண்ணி ஒரு உபாயம் மேற்கொண்டார். துரோணாச்சாரியார் "அருவியில் நீராடி வருவோம்" என்று பீஷ்மரையும் மற்ற மாணவர்களையும் அழைத்துச் சென்றார். வழியில் ஓர் ஆலமரத் தருகே வந்ததும் அர்ச்சுனனை அழைத்து, "நான் எண்ணெய் ஸ்நானம் செய்ய நினைக்கிறேன். நீ ஆசிரமம் சென்று ஒரு கிண்ணத்தில் எண்ணெய் எடுத்து வா" எனக் கூறினார். குருவின் கட்டளையை சிரமேற்கொண்டு ஆசிரமத்திற்கு அர்ச்சுனன் சென்றான்.

அர்ச்சுனன் வருமுன்பு துரோணர் ஆலமரத்தடியில் மணலில் ஓர் மந்திரம் எழுதினார். துரியோதனனை அழைத்து மந்திரத்தைப் படித்து அவனது வில்லில் அம்பைத் தொடுத்து ஆலமரத்து இலைகளில் துளையிடச் சொன்னார். அவ்வாறு துரியோதனனும் தாத்தா பீஷ்மர் முன்னிலையில் சிறப்பாகச் செய்தான். பின்னர் அனைவரும் அருவிக்குச் சென்றனர். அருவிக்குச் சென்றடைந்த நேரத்தில் எண்ணெயுடன் ஓட்டமும், நடையுமாக அர்ச்சுனன் வந்தடைந்தான். ஆனந்தமான குளியலுக்குப் பின் எல்லோரும் திரும்பி வந்தனர். அதே ஆலமரத்தருகில் வந்த போது ஆலமரத்து இலைகளில் இரண்டு துளைகள் இருந்தன. பீஷ்மர் ஆச்சரியப் பட்டு இரண்டாவது துளைகள் யாரால் உருவாக்கப்பட்டிருக்கும் எனக் கேட்டார். அப்போது அர்ச்சுனன் வணங்கிக் கூறியது – "நான் எண்ணெய் கிண்ணத்துடன் வரும் போது மரத்தடி மணலில் மந்திரம் எழுதியிருந்ததைப் படித்தேன். ஆலமரத்து இலைகளில் துளைகள் இருப்பதற்கும் இந்த மந்திரத்திற்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகக் கருதி மந்திரம் ஜெபித்து அம்பு விட்டேன். இலைகளில் துளைகள் ஏற்பட்டன. தவிர குருவின் எழுத்தாகத் தெரிந்தது. எனவே குரு எழுதிய மஹாமந்திரம் யாருடைய காலிலும் மிதிபடக் கூடாதென அழித்தேன்" என பணிவுடன் குருவை வணங்கி நின்றான். துரோணர் பீஷ்மர் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்து புன்னகைத்தனர்.

துரோணர் துரியோதனனிடம் அம்பெடுத்து துளையிடச் சொன்னார். "மந்திரத்தை அர்ச்சுனன் அழித்து விட்டானே! எப்படி அம்புவிட முடியும்?" என்றான் துரியோதனன். அர்ச்சுனனிடம் துரோணர் இலைகளில் "உன் அம்பால் துளையிடுக" என்றார். உடனே அர்ச்சுனன் தனது அம்பின் மூலம் இலைகளில் துளைகள் ஏற்படுத்தினான். மந்திரம் அழிக்கப்பட்ட நிலையில் எவ்வாறு சாத்தியம் என குரு கேட்க, "தாங்கள் தான் அஸ்திர வித்தைகள் அறிந்தவர் உங்கள் உபதேச மந்திரத்தைப் படித்தவுடன் மனனம் செய்து விட்டேன். அதனால் இப்பணி சுலபமாகியது" என்று கூறி வணங்கி நின்றான்.

பீஷ்மர் அர்ச்சுனனின் குரு பக்தி கண்டு ஆனந்தம் கொண்டு ஆசிர்வதித்தார். துரியோதனனைப் பார்த்து, "குரு பக்தியால் சிறந்த அர்ச்சுனனைப் போல நடக்க வேண்டும்" யார் மீதும் பொறாமை கூடாதென்றும் உபதேசம் செய்தார்.

இதன் மூலம் குருபக்தியாலும், பொறாமையற்ற கூரிய மதியாலும் உயர்வு பெற வேண்டும் என்ற உண்மை உணர்த்தப்பட்டதாகும்.



# ஸ்ரீகிரிவரதராஜப் பெருமாள் ஆலயம் - சதுரங்கப்பட்டினம்

– திருமதி. ஜி.விஜயலக்ஷ்மி, கள்ளிடைக்குறிச்சி.

வைணவ ஆலயங்களில் ஸ்ரீமஹாவிஷ்ணுவை பக்தர்கள் நின்ற, இருந்த, கிடந்த என மூன்று கோலங்களில் ஏதாவது ஒரு கோலத்தில் தரிசிக்கலாம். மிக மிக அபூர்வமாக, ஒரே ஆலயத்தில் இந்த மூன்று திருக்கோலங்களிலும் எழுந்தருளியிருக்கும் பெருமாளை தரிசிக்க முடியும். அவ்வாறு அமைந்துள்ள ஒரு அபூர்வ ஆலயம் செங்கல்பட்டு மாவட்டம், மகாபலிபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள சதுரங்கப்பட்டினத்தில் உள்ளது. இங்கு பெருமாள் ஒரு சிறிய குன்றின் மீது "ஸ்ரீகிரிவரதராஜப் பெருமாள்", "மலை மண்டல பெருமாள்" எனும் திருநாமங்களோடு எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் டச்சுக்காரர்களின் காலனியாக இருந்த இந்த சதுரங்கப்பட்டினத்தை அவர்கள் "சத்ராஸ்" என்று (சென்னையை ஆங்கிலேயர்கள் மதராஸ் என்று அழைத்தது போல) சுருக்கி அழைத்தனர். இந்த ஊர் விஜயேந்திர சோழன் என்ற சோழ மன்னனின் அமைச்சரின் பெயரால் ராஜ நாராயணப்பட்டினம் என்று அழைக்கப்பட்டு பின்னர் விஜய நகர மன்னர் ஆட்சிக் காலத்தில் சதுரவாசப்பட்டினம் என்றும், பின்னர் சதுரங்கப் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டது. இத்திருத்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் அருள்மிகு பெருந்தேவித் தாயார் உடனுறை ஸ்ரீகிரிவரஜராஜப் பெருமாள் ஆலயம் ஒரு சிறிய குன்றின் மீது அமைந்துள்ளதால் பெருமாளுக்கு "கிரிவரதராஜர்" என்றும் "மலை மண்டலப் பெருமாள்" என்றும் திருநாமங்கள் ஏற்பட்டன.

கருவறையின் நுழைவு வாயிலில் ஜய, விஜயர் துவாரபாலகர்கள் உள்ளனர். பொதுவாக கருவறை நுழைவுவாயிலுக்கு மேலே இரண்டு புறங்களிலும் யானைகளோடு கூடிய கஜலட்சுமியின் திரு உருவம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இங்கு கஜலட்சுமிக்குப் பதில் ஸ்ரீயோக நரசிம்மர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பன்னிரு ஆழ்வார்களில் பூதத்தாழ்வார் இத்தலத்திற்கு விஜயம் செய்ததாக ஐதீகம் உள்ளது. கி.பி. 810 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் ஸ்ரீமலைமண்டலப் பெருமாள் ஆலயம், விஜய நகர ஆட்சிக் காலத்தில் புணரமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1000 ஆண்டுகள் பழமையான இந்த ஆலயத்தில் மூலவர் ஸ்ரீகிரிவரதராஜப் பெருமாள் கிழக்கு திசை நோக்கி ஸ்ரீதேவி பூதேவியரோடு காட்சித் தருகிறார். பின்னிரு கரங்களில் சங்கும் சக்கரமும் உள்ளன. இவற்றில், சங்கு சற்று உயரத்தில் இருப்பதாக வடிக்கப்பட்டுள்ளது. மேலும் பெருமாள் தனது வலது பாதத்தை சற்று முன்னோக்கி எடுத்து வைப்பது போலவே அமைக்கப்பட்டுள்ளது. முதலையால் பிடிக்கப்பட்டு,

"ஆதிமூலமே" என்று அழைத்த கஜேந்திரனுக்கு உதவுவதற்காக விரைந்து செல்லும் பாவனையில் இந்த வரதரின் பாதம் அமைந்துள்ளதாகக் கூறுவர். ஸ்வாமி கையிலேந்தியிருக்கும் சுதர்ஸன சக்கரமும் இங்கு பிரயோகச் சக்கரமாக வடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தாயார்களில் ஸ்ரீதேவியைக் காட்டிலும் பூதேவி சற்று உயரமாகக் காட்சி தருகிறாள். பெருந்தேவித் தாயார் சன்னதியும் உள்ளது. இத்தலத்தில் உள்ள பஞ்சலோக அனுமன் அஞ்சலி ஹஸ்தமின்றி தன் இரண்டு கரங்களிலும் மலர்களை ஏந்தி காட்சி தருவது இத்தலத்தின் மற்றொரு சிறப்பாகும்.

ஆதி காலத்தில் இந்த ஆலயம் ஸ்ரீலக்ஷ்மி நாராயணர் கோவிலாக இருந்துள்ளது. இங்குள்ள ஸ்ரீலட்சுமி நாராயணர் சன்னதிக்குத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டபோது, ஸ்ரீதேவி பூதேவி வரதராஜர் விக்ரகங்கள் கண்டெடுக்கப்பட்டதால் ஸ்ரீவரதராஜப் பெருமாள் இங்கு பிரதான மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு இந்த ஆலயம் தற்போது ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயமாக திகழ்கிறது. ஸ்ரீரங்கநாதரும் சயனத் திருக்கோலத்தில் தனிச்சன்னதியில் எழுந்தருளியிருக்கிறார். இத்திருத்தலத்தில் நின்ற கோலத்தில் ஸ்ரீகிரி வரதராஜரும், அமர்ந்த கோலத்தில் ஸ்ரீலட்சுமி நாராயணப் பெருமாளும், கிடந்த கோலத்தில் ஸ்ரீரங்கநாதரும் எழுந்தருளியிருப்பதால் பெருமாளை இங்கு நின்ற, இருந்த, கிடந்த கோலங்களில் பக்தர்களால் தரிசிக்க முடிகிறது.

அஷ்ட நாகங்கள் எனப்படும் பத்மன், மஹா பத்மன், குளிகன், வாசுகி, கார்கோட கன், தக்ஷகன், அனந்தன், மஹாஸ்வேதன் ஆகிய பாம்புகள் கருடனின் உடலின் பல்வேறு பாகங்களை அலங்கரிக்கும் அணிகலன்களாக காண்பிப்பது மரபு. ஆனால் இந்த அஷ்ட நாக கருடன் சிலைகளை மிக அபூர்வமாகவே காணமுடியும். இத்தலத்தில் கருடாழ்வார் சன்னதிக்கு எதிராக அஷ்டநாக கருடனாக அமைந்திருப்பது இத்தலத்தின் இன்னொரு சிறப்பாகும். பக்தர்கள் இவரை வழிபட ராகு கேது சர்ப்ப தோஷ நிவர்த்தி ஏற்படுவதால் இத்தலம் சர்ப்ப தோஷ நிவர்த்தித் தலமாகக் கருதப்படுகிறது. கருடனுக்கு நெய் தீபம் ஏற்றி அமிர்த கலச கொழுக்கட்டை நிவேதனம் செய்கின்றனர். ஸ்ரீசீதா லட்சுமண அனுமன் உடனுறை ஸ்ரீஇராமர் சன்னதியும், துர்க்கை, ஆஞ்சநேயர் சன்னதிகளும் ஆலய வளாகத்தில் உள்ளன. ஆசார்ய குரு ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் இங்கு கைங்கர்யம் செய்ததாக ஐதீகம் உள்ளது. அவருடைய மிருத்திகை பிருந்தாவனமும், அதன் எதிர்ப்புறம் ஸ்ரீபஞ்சமுக அனுமன் ஆலயமும் உள்ளன.





இந்த ஆலயத்தில் மாசி மக பிரம்மோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த உற்சவத்தின் போது இப்பகுதியில் வசிக்கும் ஏராளமான மீனவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த உற்சவங்களில் அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. வைகுண்ட ஏகாதசி நாட்களிலும் பிரம்மோத்ஸவ நாட்களிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் கூட்டத்தினை இந்த ஆலயத்தில் காணலாம். தனுர் மாதம் சிறப்பு வழிபாடுகள் உண்டு.

மணவாழ்க்கையில் பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக இருக்கவும், மணப்பேறு, மகப்பேறுக்கும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறவும் ஏராளமான பக்தர்கள் இந்த ஸ்ரீமலைமண்டலப் பெருமாளையும், ஸ்ரீஅஷ்டநாக கருடனையும் மனதார வழிபட்டுச் செல்கின்றனர். ஆலயம் காலை 6.30 மணி முதல் காலை 11.00 மணி வரையிலும், மீண்டும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.



திருமலை திருப்பதி
தேவஸ்தானம்

# “ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை”



*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. எனவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

*கொண்டுவரப்படுகிறது.*

*அது எங்ஙனே எனில் ஒரு நாளைக்கு ஆகும் செலவு :*

| | | | |
|---|---|---|---|
| 1) | காலை உணவு | - 7 | இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 11.5 | இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 11.5 | இலட்சம் |
| | மொத்தம் | - 30 | இலட்சம் |

0877-2264258
0877-2264375
0877-2264237

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இந்தத் தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகின்றது. நன்கொடையாளர்/தனிப்பட்ட நபர்/நிறுவனங்கள்/நிறுமங்கள்/அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.30 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.7 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ/ இரவு உணவிற்கு ரூ.11.5 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**குறிப்பு : நன்கொடை தொகை அவ்வப்பொழுது மாறுதலுக்குட்பட்டது**

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் :**

“சிறப்பு அலுவலர், ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை,
தி.தி. தேவஸ்தானம் நிர்வாகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி”

www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களை காணலாம்.

**ஸ்ரீபாஷ்யகாரர் (88-வது சுலோகம்)**

*''தத்பாஷ்யமாதாய நிதாய மூர்த்நி ஸ்ரீபாஷ்யமே தத்*
*வரபாஷ்யக்ருத் த்வம் ।*
*இதீவ தஸ்மை ப்ரததௌச தேவீ பாஷ்யம்*
*ஹயக்ரீவமபி ஸ்வதேவம் ।।''*

(காஷ்மீரத்தில், ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தை தன் தலையால் தாங்கிய வாக்தேவி இதுவன்றோ ஸ்ரீபாஷ்யம். சிறந்த இப்பாஷ்யத்தை அருளிச் செய்த நீர் இனி ஸ்ரீபாஷ்ய காரர் என்கிற புகழுடன் விளங்குவீர் என்று ஸ்ரீகோசத்தையும், தான் வணங்கும் பரிமுகப் பெருமாளையும் அவரிடம் சேர்ப்பித்தாள்)

அஷ்டோத்தர சத நாமாவளியில் அமைந்துள்ள "ஸ்ரீபாஷ்யகாராய நம:" என்பதன் விவரணமே இந்த சுலோகம்.

ஆசார்ய ஹ்ருதயம் என்னும் நூலில் அழகிய மண வாளப்பெருமாள்நாயனார் என்னும் ஆசார்ய ச்ரேஷ்டர்,

*''ஸ்ரீ பாஷ்யகாரர் இது கொண்டு சூத்ர வாக்கியங்கள் ஒருங்க விடுவர்''* என்று அருளிச் செய்கிறார். ஸ்வாமி ராமாநுஜர் ப்ரஹ்ம சூத்ர பாஷ்யத்தை நம்மாழ்வாரின் திருவாய்மொழியைக் கொண்டே அர்த்த நிர்ணயம் பண்ணி யருளினார். வேதாந்தங்களை ஆராய்ந்து ப்ரம்மத்தைப் பற்றிய கருத்துக்களை முன் வைக்க கீழ்வரும் வேத வாக்கி யங்களை முக்யமாகக் கொண்டனர் வேதாந்திகள்.

1) தத்வமஸி
2) அஹம் ப்ரஹ்மாஸ்மி
3) த்வா–ஸுபர்ணா–அபிசாகஸ்ரீதி
4) ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா
5) அத ய ரஷோ அந்தராதித்யே – புண்டரீக மேவமக்ஷிணி
6) யஸ்ய ஆத்ம சரீரம் யஸ்ய ப்ருதிவி சரீரம்

முதலான வாக்கியங்கள் ப்ரம்ம, ஜீவ, உலகத் தொடர்புகளை காட்ட வந்த வாக்யங்களாகும். இவ்வாக்யங்களுக்கு,

*''உடல் மிசை உயிரென கரந்தெங்கும் பரந்து உளன்''* (திருவாய்மொழி 1–1–7) என்பது முதலான ஆழ்வாரின் அருளிச் செயலை அடியொற்றி உண்மைப் பொருளை *''ஸாமாதி கரண ந்யாய முகேன''* நிறுவிக் காட்டி, சாரதா பீடத்தில் ஸரஸ்வதி ஸிரஸால் தரிக்கப்பட்டு, இதுவே ஸ்ரீபாஷ்யம், நீரே ஸ்ரீபாஷ்யகாரர் என்று திருவனந்தாழ்வானான ராமாநுசரை கொண்டாடினாள். மேலும் ஸ்ரீபாஷ்ய தொடக்கத்தில்

# வடுக நம்பி அருளிய யதிராஜ வைபவம்

## (சில திவலைகள்)

**திரு.பி.டி. சேஷாத்ரி, சென்னை**



*''அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே*
*விநத விவித பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷே*
*ச்ருதி சிரஸி விதீப்தே (ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே)*
*பவது மம பரஸ்மிந் சேமுஷீ பக்திரூபா''*

என்று அப்ப்ரஹ்மம் திருவேங்கடமுடையானே என்று அருளிச் செய்துள்ளார். திருமலையிலே வேதாந் தங்களை உபதேசிக்கும் உபதேச முத்திரையோடு ஸ்ரீபாஷ்யகாரர் எழுந்தருளியிருந்து நம்மையெல்லாம் உய்வித்து வாழ்வித்து அருள்கிறார்.

ஸ்ரீபாஷ்யகாராய நம: என்று போற்றுவோம்.

**மாறன் அடிபணிந்துய்ந்தவர் (105 வது சுலோகம்)**

*''தத்ர ஸ்ரீமாந் யதீச: கமபி சடரிபும் ஸம்ப்ரதிஷ்டாப்ய தேந*
*ஸ்ரீரங்காதீச்வரஸ்ய அத்யயந மஹமஹர் விம்சதிம் காரயித்வா ।*
*பச்சாத் கைச்சித் ப்ரபந்தைஸ் ஸ்வவிஷயக கதம் தம் ப்ரபந்தம் மிலித்வா*
*ரங்கம் ஸம்ச்ராவ்ய சக்ரே ஸ ததிதர மஹாஸூரி கோதா ப்ரதிஷ்டாம் ॥*

(அத்திருவரங்க பெருநகருள் கைங்கர்ய ஸ்ரீயை உடைய யதிராசர், நம்மாழ்வார், மற்றைய ஆழ்வார்கள், ஆண்டாள் பிராட்டிக்கு திருவுருவம் எழுந்தருளப் பண்ணி இருபது நாள் தமிழ்த்திருநாளான அத்யயன உத்ஸ வத்தை செய்வித்து ஆழ்வார்களின் அருளிச் செய லையும், தம் விஷயமாக திருவரங்கத்து அமுதனார் அரு ளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதியோடு கூட திருவரங் ாகன் திருச்செவி சாற்றும்படி பண்ணியருளினார்.)

இந்த சுலோகம் அஷ்டோத்தர சத நாமாவில் அமைந்துள்ள திருநாமங்களால் *''த்ராவிடாம் நாய ஸாகர:''* (40) மற்றும் *''சடஜித் த்ருண மோசக:''* (72) என்ப தன் விவரணம் ஆகும்.

எம்பெருமானார் ஆழ்வார்களின் அருளிச் செயலில் தன் இதயத்தை பறிகொடுத்தார் என்பதை அமுதனார் இராமாநுச நூற்றந்தாதியில் காட்டிய வகையில் சில வற்றை அனுபவிப்போம்.

1) பாமன்னு மாறன் அடி பணிந்துய்ந்தவன் -1
2) குறையல் பிரானடிக்கீழ் விள்ளாத அன்பன் -2
3) பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் -8
4) பூதத்திருவடித்தாள்கள் நெஞ்சத்துறைய வைத்தாளும் - 9
5) தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றும் இராமாநுசன் - 10
6) செந்தமிழால் அளித்த பாரியலும் புகழ்ப்பாண் பெருமாள்-11
7) மழிசைக்கிறைவன் இணையடிப் போது அடங்கும் - 12
8) சீரரங்கத்து ஐயன் கழற் கனியும் பரன்தாள் - 13
9) கொல்லி காவலன் சொல் பதிக்கும் - 14
10) பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன் தாள் - 15
11) சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் - 16
12) நீலன் தனக்கு உலகில் இனியானை - 17
13) சடகோபனை சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் - 18
14) மாறன் விளங்கிய சீர்... அறிதர நின்ற இராமாநுசன் - 19
15) ஈரத்தமிழின்... சீரைப் பயின்று உய்யும் சீலங்கொள் நாதமுனியை - 20

முதலானவைகளினாலும், திருவாய்மொழிக்கு அமைந்த தனியன்களில்

16) "ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரம்... மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்"

என்பது முதலான திவ்ய வரிகளினால் அறிந்து கொள்ளலாம். பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை "கலியன் அருளப்பாடு" என்னும் நூலில் திருவரங்கத்தின் அத்யயனோத்சவம் பற்றிய அரிய செய்திகளை தந்தருள்கிறார். ஆழ்வார் திருநகரியி லிருந்து திருவரங்கத்திற்கு நம்மாழ்வாரின் திவ்ய மங்கள

## சிறுவர் பகுதி விடைகள்

1. ஸ்வாசி.
2. குடந்தை ஸ்ரீராமஸ்வாமி திருக்கோயில்.
3. கங்கா; யமுனா.
4. திருவனந்தபுரத்திற்கருகிலுள்ள சிறய்கல் தலத்தில்.
5. திருவரங்கம் - மேலை வீடு, திருக் கண்ணபுரம் - கீழை வீடு.
6. திருக்கோவிலூர்.
7. ஸ்ரீபூவராகப் பெருமாள், ஸ்ரீமுஷ்ணம்.
8. நாரத மகரிஷி.
9. சுக மகரிஷி.
10. அனுமார்.

தொகுப்பு : கே. ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.



### ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*யாவத் பவனோ நிவஸதி தேஹே*
*தாவத் ப்ருச்சதி குஸலம் கேஹே ।*
*கதவதி வாயௌ தேஹாபாயே*
*பார்யா பிப்யதி தஸ்மிந் காயே ॥*

**ஒரு மனிதனின் உடலில் உயிர் இருக்கும்போது வீட்டில் உள்ள அத்தனை உறவினர்களும் அவனுடைய க்ஷேம லாபங்களை மிக அக்கறையோடு விசாரிப்பார்கள். எந்த க்ஷணம் "ஆத்மாவானது" அந்த உடலை விட்டு நீங்குகிறதோ, அந்த க்ஷணத்தில் இருந்து அவனை (உயிர் பிரிந்த அவனது உடலை) யாருமே சீண்டுவதில்லை. கட்டிய மனைவி கூட அந்த உயிரற்ற உடலை பார்த்து பயப்படுகிறாள். (இதுவே உறவுகளின் எல்லை என்று அறிவுறை)**

**– திரு. சீதாராமன், சென்னை.**

விக்ரஹம் அத்யயன உத்ஸவத்திற்கு எழுந்தருள பண்ணப்பட்ட விஷயத்தை காட்டியருள்கிறார்.

பிற்காலத்தில் ஆழ்வார் எழுந்தருள்வதில் ஏற்பட்ட சிரமங்களை கருத்தில் கொண்டு, திருவரங்கத்திலேயே ஆழ்வார்களுக்கு திவ்ய திருமேனிகளை எழுந்தருளப் பண்ணிய சரிதம் வடுக நம்பியின் யதிராஜ வைபவம் என்னும் இந்நூலில் அமைந்துள்ள இந்த சுலோகம் தன்னால் ஊர்ஜிதமாகிறது. மேலும் தம்முடைய அபிமாந புத்ரனான *"தென்னாரும் ஞானத் திருக்குருகைப் பிள்ளானைக்"* கொண்டு *"விஷ்ணு புராண"* கணக்கிலே திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி என்கிற வ்யாக்யானத்தை அரங்கேற்றினார். எம்பெருமானார் ஐதிஹ்யங்கள், நிர்வாஹங்கள் என்று நம் ஆசார்யர்கள் தங்கள் நூல்களிலே அருளிச் செயலிலே அவருடைய ஈடுபாட்டினை பற்பல இடங்களிலே எடுத்துக் காட்டியுள்ளது சேவிக்கத்தக்கது.

### கோயில் அண்ணர் (106 சுலோகம்)

*"தத்வத் திவ்ய ஸ்தலேஷ்வப்யதி மஹிமசு தத்ஸூரி கோதா ப்ரதிஷ்டாம்*
*க்ருத்வா ஸர்வத்ர தம் சாத்யயந மஹமபி ப்ராஜ்ய ஹய்யங்க வீநம் ।*
*ப்ராஜ்ய க்ஷீரோத் குடாந்நம் வ்ருஷப கிரிபதி ப்ரீண நார்த்தம் நிவேத்ய*
*ஸ்ரீமாந் ராமாநுஜார்ய: க்ருத பஹுமதிரப்யாஸ கோதா கடாக்ஷை: ॥"*

(சிறப்புடைய திவ்ய தேசங்கள் தோறும் ஆழ்வார்கள், ஆண்டாளுடைய திருமேனிகளை எழுந்தருளப் பண்ணி, உத்ஸவங்களைச் செய்வித்தும், ஆண்டாள் பாரித்தபடி திருமாலிருஞ்சோலை அழகனுக்கு நூறு தடா வெண்ணையும், நூறுதடா அக்கார வடிசிலும் சமர்பித்து ஆண்டாளின் கடாக்ஷத்தால் "கோயிலண்ணர்" என்று ஸந்மானிக்கப் பெற்றார்.) அஷ்டோத்தர ஸத நாமாவளியில் *"கோதா க்ரஜ:"* (101) மற்றும் *"கோதாபீஷ்ட ப்ரபூரக:"* ஆகியவற்றின் விவரணம் ஆகும். எம்பெருமானாருக்கு சூடிக் கொடுத்த நாச்சியாரிடத்து மிகுந்த பக்தி உண்டு. அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையை சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன் என்னும் மாமுனியே என்கிறார் திருவரங்கத்தமுதனார்.

ஆண்டாளின் வாழித் திருநாமத்தில், *"பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னாளாள் வாழியே"* என்று அமைந்திருப்பதும் இதை அறுதி செய்கின்றது. கோதை நாச்சியார் தம்முடைய அற்புத திருமொழியில் *"நாறுநறும்பொழில்"* (9–6) பாசுரத்தில் ஆசைப்பட்ட நூறுதடா வெண்ணை, நூறு தடா அக்கார வடிசில் அழகனுக்கு சமர்ப்பித்து எம்பெருமானார் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருள, தமது அர்ச்சா ஸமாதியை குலைத்துக் கொண்டு "எம் கோயில் அண்ணரே" என்று அழைத்து ஆநந்தித்தாள். மற்றும் நித்ய மாதுகரத்தில் திருப்பாவை அநுஸந்தானத்தோடே எழுந்தருளியதால் "திருப்பாவை ஜீயர்" என்றே குலாவப் படுகிறார் எம்பெருமானார். *"அஞ்சு குடிக்கொரு சந்ததி"* என்கிற ரீதியில் தான் பற்றுகின்ற பற்றை உபாயமாய் கொள்ளாமல் அஞ்சி அவனாலே அவனைப் பெறுகின்ற பேறே அஞ்சாத பேறு என்கிற குடிக்கு இவள் ஒரு சந்ததி யன்றோ. இது தன்னையே அமுதனார் "தொல்லருளால்" வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன் என்கிற பதம்தன்னிலே காட்டுகின்றார். இதுவன்றோ தாழ்வொன்றில்லா மறை தன்னின் ஸாரம்.

### வடுகநம்பி பெற்ற பேறு (113 வது சுலோகம்) :

*"காம்ச்சித் கஸ்மிம்ச்சிதர்த்தே ப்ரதி நியத தயா ஸந்நியோஜ் யாந்தரங்காந்*
*தத்ர க்ஷீரார்த்த க்ருத்யே ப்ரதி நியத மஹோதாஸமப்யத்ய நர்ஹம் ।*
*குர்வந் ஸ்ரீமாந் யதீசஸ் ஸ்வபத விநத தத் தாஸ தாஸாநு தாஸம்*
*மாமப்யத்யந்த பக்தம் ஸ்வஹிதமிவ ஸதா கோபயந் ஸோऽபி ஜீயாத் ॥"*

(தனது அந்தரங்க சிஷ்யர்கள் ஒவ்வொருவரையும் முகப்பேக்கூவி பணி கொள்ளும்படியாக நியமித்த கைங்கர்ய ஸ்ரீமானான யதிராஜர், சீலமில்லா சிறியேனையும் பால் அமுது காய்ச்சும் கைங்கர்யத்தில் நியமித்தருளியது மிகுந்த ஆச்சர்ய விஷயமாகும். அத்துடன் நில்லாது அடியார் அடியார் தமக்கு அடியார்க்கு என்னை ஆட்படுத்தி, ஹிதத்தை பேசியும், அடியேனையும் காத்தருள்கின்ற அவர் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழியவே)

அஷ்டோத்தர சத நாமாவளியில் 87–வது திருநாமமான *''அங்கீக்ருத ஆந்த்ர பூர்ணார்ய:''* என்பதன் விவரணம் இந்த சுலோகம். "அந்திமோபாய நிஷ்டர்" தாம் என்பதை இந்த சுலோக முகேண காட்டுகிறார். பெரியாழ்வார் திருமொழி (4–4–1) (நாவகாரியம்) பதிக வ்யாக்யானத்தில் உடையவர் எழுந்தருளியிருக்கிற காலத்தில் வடுக நம்பி அருகே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருளியிருந்து *''ஓம் நமோ நாராயணாய''* என்று இத்தைச் சொல்ல, இத்தைக்கேட்டு வடுக நம்பி "நாவகாரியம்" என்று எழுந்து கடக்கப் போனார் என்ற ஐதிஹ்யமும், பெரிய வாச்சான் பிள்ளையின் மாணிக்க மாலையில் வடுக நம்பி ஆசார்ய பதம் என்று தனியே ஒரு பதம். அது உள்ளது எம்பெருமானார்கேயாயிற்று. *''எம்பெருமானார் திருவடிகளே சரணம்''* என்று விச்வஸித்து இருங்கோள் என்றாயிற்று தம்முடைய சிஷ்யர்களுக்கு அருளிச்செய்வது என்று காட்டப்பட்டிருப்பதினாலேயும்.

வைஷ்ணவர் அல்லாத சிலர் இவர் அகத்திலே தங்க, அவர்கள் சென்றவுடன் அகத்தை சுத்தி செய்து, அவர்கள் உபயோகித்த பொருள்களை எரிந்து முதலியாண்டான் திருமாளிகையில் புழக் கடையில் கழித்துக்கிடந்த பண்டங்களை தம் அகத்தில் உபயோகப்படுத்திய சரிதமும் அறியும் பொழுதில் *''ஆசார்ய அபிமாநமே உத்தாரகம்''* என்கிற லோக தேசிகனின் ஸ்ரீஸூக்திக்கு இட்டு பிறந்தவர் இவரே என்பதும் பொலிய தோன்றுகிறது.

**பல ச்ருதி (பெறும்பயன்) (114வது சுலோகம்)**

*''கமலேச முக்ய குரு பங்க்தி வைபவ ப்ரதிகர்ம சோபி*
*யதிராஜ வைபவம் |*
*ய இதம் படந்தி கலிகல்மஷாபஹம் த இமே விபூதியுக*
*நாயகா த்ருவம் ||''*

(திருமகள் கேள்வன் தொடக்கமான ஆசார்யர்களின் வைபவ வரிசையில் அதற்கு அலங்காரமாய் விளங்குகின்றார் யதிராசர். அவரின் வைபவத்தை விளக்கும்படியாகவும், "நீசக்கலி" என்றும், "அறம் சிறுமுறுகலி" என்றும் *''கலியிருளே மிடை தருகாலத்து''* என்றும் உள்ள கலியின் சேஷ்டைகளை போக்கி *''பொன்னி இறந்தது வெங்கலி''* என்றும், நல்நாலம் பொருந்தாதவரைப் பொரும் கலி என்னும் படியாக குற்றங்களைப் போக்கி அருளும் "யதிராஜ வைபவம்" என்கின்ற இந்த ஸ்தோத்திரம். இதை எவர்கள் படிக்கிறார்களோ, அவர்கள் உபய விபூதிக்கும் நாயகர் ஆவார் என்பது (விண்ணும் ஆள்வர் மண்ணூடே என்பதைப் போல) உறுதி.

ஆக இதுகாறும் எம்பெருமானாரின் திருநாமங்களில் எட்டுத் திருநாமங்களின் வைபவத்தை அனுபவித்தோம்.

*''ஸ்ரீமந் மஹாபூத புரே ஸ்ரீமத் கேசவ யஜ்வன: |*
*காந்திமத்யாம் ப்ரஸீதாய யதிராஜாய மங்களம்' ||'*

என்று போற்றி உகப்போம்.

*''உய்ய ஒரே வழி உடையவர் திருவடி''* என்பதை மறவோம்.

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.**

யதிராஜ வைபவம் முற்றும்.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**வாசகர்களுக்கு அறிவிப்பு!!**

**"ஸப்தகிரி பொன்விழா மலர்" கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளி வருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.

ஸப்தகிரி "சிறப்பு பொன்விழா இதழை" வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.

– பிரதான ஆசிரியர்

# ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் –கீலபட்லா

**ஸ்தல புராணம் :**

சித்தூர் மாவட்டம் பலமனேருக்கு அருகில் கங்கவரம் மண்டலத்திலுள்ள சிறு கிராமமே "கீலபட்லா". இங்கு கொலுவிருக்கும் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியின் மூல விக்ரகம், திருமலை திருவேங்கடமுடையானை போன்று இருப்பதால் இதுவும் அத்தகைய பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. சுற்றிலும் மலைகளும், காடுகளும், குளிர்ந்த நீர்வீழ்ச்சிகளும் நிறைந்த இயற்கை அழகோடு விளங்கும் திருத்தலமான கீலபட்லா "சின்ன திருப்பதி" என்றும் அழைக்கப்படுகிறது. இந்த திருத்தலத்தின் உண்மையான பெயர் கோடி பல்லி. இப்பகுதி சேர அரசர்கள் காலத்தில் அவர்களின் படை வீரர்கள் வசித்த இடமாகும். இந்த கோடி பல்லிக்கு சமீபமாக அடர்ந்த காடுகள் இருந்தபடியால் இந்த படை (பட்டாளம்) "கீல பட்டாளம்" என்கிற பெயரோடு பின்னாளில் பிரபலமாயிற்று. நாளடைவில் "கீலபட்டு, கீழ் பட்டணம், கீலபட்லா" என்கிற பெயர்களால் அழைக்கப் பட்டது.

இந்த "கீலபட்லா" திருத்தலத்தில் இருக்கும் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிருகு மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. பிருகு மகரிஷி சப்தரிஷிகளுள் ஒருவர். ஒரு சமயம் மும் மூர்த்திகளில் யார் சாத்வீகமானவர் என்கிற கேள்வி எழுந்த போது அதை பரிசோதிக்க மூன்று லோகங்களுக்கும் சென்று, முடிவாக ஸ்ரீமஹா விஷ்ணுவே சாத்வீகமானவர். அவரே பரதெய்வம் என்பதை நிரூபித்த மஹா முனிவர். ஜனமே ஜய மஹாராஜர் காலத்தில் இந்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டதாம். பின் வந்த அரசர்களில் பல்லவர்களும், சோழர்களும் இந்த கோவிலை புதுப்பித்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. பல்லவர்கள் காலத்தில் தான் இந்த எம்பெருமான் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி என்று பக்தர்களால் அழைக்கப்பட்டார்.

வேற்று மன்னர்கள் படையெடுத்து வரும் போது, கோவிலின் மூலமூர்த்திகளுக்கு பங்கம் ஏற்படாமலிருக்க, கோயில் அர்ச்சகர்கள் உபய நாச்சிமார்களோடு கூடிய ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி விக்ரகங்களை ஒரு பட்டுத் துணியில் சுற்றி கோவிலுக்கு ஈசான்ய திசையில் இருந்த திருக்குளத்தில் மறைத்து வைத்தனர். உற்சவ மூர்த்திகளான பஞ்சலோக விக்ரகங்கள், ஆபரணங்கள், திருவாராதனை பாத்திரங்கள் ஆகியவற்றுடன் மறைத்து வைத்து விட்டார்கள். சுமார் நூறு வருட காலத்திற்கு மேல் அந்த எம்பெருமான் வடபத்ரசாயியாக அந்த திருக்குளத்தின் அடியிலேயே இருந்தார். அதன் பின்பு புங்கனூர் ஜமீந்தார் ஒருவரின் கனவில் தோன்றி பகவான், தான் இந்த குளத்தில் இருப்பதாகவும், தன்னை வெளியே எடுத்து, நித்யபடி தூப, தீப, ஆராதனைகள் செய்யும்படி



கட்டளையிட, அதன்படியே அந்த ஜமீந்தார் செய்ய கோனேரி என்கிற திருக்குளத்தில் இருந்தபடியால் அன்று முதல் "கோனேரி ராயர்" என்று எல்லோராலும் போற்றப் பெற்றார்.

### ஆலய மண்டபம் :

ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி சன்னதியும், அலர்மேல் மங்கை தாயார் சன்னதியும் ஒரே மண்டபத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எம்பெருமான் திருசன்னதி அமைக்கப்பட்டு நூறு வருடங்களுக்குப் பிறகு அலர் மேல் மங்கை தாயார் சன்னதி அமைக்கப்பட்டது. எம்பெருமானின் ஆலய கோபுரம் விஜய நகர கட்டிடக் கலையின்படி வெகு அழகாக அமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் நான்கு புறங்களிலும் அஷ்டதிக் பாலகர் களோடு, கருடாழ்வாரின் சிற்பமும் கம்பீரமாக பொருத் தப்பட்டுள்ளது. கோபுர விமானம் அஷ்டபுஜம் வடிவில் அமைந்துள்ளது. இத்தனை அற்புதமாக அமைந்துள்ள சன்னதியில் ஐஸ்வர்ய பீடத்தின் மீது எம்பெருமான் நின்ற கோலத்தில் கம்பீரமாக தரிசனம் தருகிறார். சன்னதிக்கு முன்பாக "அந்தராலம்" எனப்படும் சிறிய மண்டபம் உள்ளது. அந்த மண்டபம் சதுர வடிவில் உள்ளது. 40 அடி நீளமும், 30 அடி அகலமும், 16 தூண்களும் கொண்ட அந்த மண்டபம் விஜய நகர சிற்ப வேலைப்பாடோடு மிக அழகாக விளங்குகிறது. அந்த மண்டபத்திற்கு வாயிலில் ஜய, விஜயர் துவாரபாலகர்களாக விளங்குகிறார்கள்.

### தசாவதார மண்டபம் :

எம்பெருமான் மூலமூர்த்தியாய் கொலுவிருக்கும் சன்னதியை அடைய மூன்று வாயில்களை கடக்க வேண்டும். நான்குகால் மண்டபம், காலிகோபுரம், மஹா முக மண்டபம் என்கிற மூன்று வாயில்கள். இந்த மஹா முக மண்டபம் பின்னாளில் சிதிலமடைந்ததால் அதை தசாவதார மண்டபமாக மாற்றி அமைத்தார்கள். இந்த மண்டபத்தின் மேற்கு பகுதியில் விநாயகரின் திருவுரு வம் அமைக்கப்பட்டுள்ளது. பிரதான ஆலயத்தின் வடகிழக்கு திசையில் (ஈசான்ய மூலை) ஸ்வாமி புஷ் கரணி எனப்படும் திருக்குளம் உள்ளது. விஜய நகர மன்னர்கள், நமது திருமலை திருவேங்கடமுடையானின் திருத்தேரைப் போன்றே சந்தன மரத்தில் மூன்று அடுக்கு களாக தேரை செய்துள்ளார்கள். அதே போன்று பிரம் மோத்ஸவத்திற்கான வாகனங்களும் அமைக்கப்பட்டுள் ளன. இத்துடன் ஐந்து அடுக்குகள் கொண்ட ஒரு பெரிய தேரும் உள்ளது. அந்த காலத்தில் இந்த தேரை இழுக்க யானைகளை உபயோகித்ததாகக் கூறப்படுகிறது.

### ஆலயத்தைச் சுற்றியுள்ள புண்ணிய தீர்த்தங்கள் :

இந்த தீர்த்தங்களின் பெயரைக் கேட்கும் போதே வினோதமாக உள்ளது. மலகங்கண கிணறு, ஜொன் னாருபோலு கிணறு, ரெட்டி கிணறு, பில்லோனி, பில்லோனி செலிமி, தாததான, நாகி ரெட்டி கிணறு, நலம நாயுனி ஏரி, பெனுதேவுல கிணறு, கோதுல கிணறு, சலீந் த்ரால தோனை, அனுபொங்கா, பைரவ கிணறு, தோண கால்வாய் ஏரி, யாபமாகுலதோனை, தேவதல தோனை, அக்கம்ம தோனை, மங்கலோனி பண்ட தோனை, பால மந்தரங்கன்ன கிணறு, பந்திவாதமு கிணறு, தோனகுட்ட கிணறு, பாத பந்த தோனை, போடிபந்த தோனை, வபதநால தோனை, வீரதோனை, நாகிரெட்டி தோனை, பெள்ளி பந்த தோனை, தல்லிபந்த தோனை, சாமிரெட்டி கிணறு, கடப்ப தோனை, பரிவி தோனை ஆகிய தீர்த்தங் கள் இயற்கையழகோடு பொலிந்து இந்த திருத்தலத் திற்கு குளுமையை சேர்க்கின்றன. பெனுதேவுல கிணற்றிற்கு அருகே ஆதி மனிதர்கள் வசித்த இடங்களும் அடையாள சின்னங்களும் உள்ளன. இவற்றைப் பார்க்கும் போது ஒரு காலத்தில் இந்த திருத்தலம் பிரசித் தமாகவும், புராதனமாகவும் இருந்தது தெரிய வருகிறது.

இந்த எம்பெருமானுக்கு நடைபெறும் உற்சவ விசேஷங்கள் யாவும் திருமலையில் நடைபெறுவது போலவே ஸ்ரீவைகானச ஆகமப்படி நித்ய பூஜைகள், மாதோத்ஸவங்கள், வருடாந்திர உற்சவங்கள் அனைத் தும் இங்கும் நடைபெறுகின்றன. மாதோத்ஸவத்தில் எம்பெருமானின் திருஅவதார நட்சத்திரமான திருவோண நட்சத்திரத்தில் சிறப்பு பூஜை, ஆஸ்தானம், வீதி புறப்பாடு ஆகியவை நடைபெறுகின்றன. தை மாதத்தில் வரும் "ரத சப்தமி" அன்று எம்பெருமான் சூரிய பிரபை வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களை கடாக்ஷிக்கிறார். சித்திரையில் வசந்தோத்ஸவம், வைகாசியில் பிரம்மோத்ஸவம் ஆகி யவை கோலாகலமாக நடைபெற்று பக்தர்களுக்கு ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாளின் திருவருளைப் பெற்றுத் தருகிறார்கள். கோனேரி ராயரின் பிரம்மோத் ஸவத்திற்கு சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து பக்தர்கள் திரளாக வந்து ஸ்வாமியை விதவிதமான வாக னங்களில் காலையும், மாலையும் தரிசித்து புண்ணியம் பெறுகிறார் கள். பிரம்மோத்ஸவம் முறைப்படி ஸ்ரீவிஷ்வக்சேனரின் ஆராதனை, அங்குரார்ப்பணத்தில் தொடங்கி ஒன்பதாம்

நாள் சக்கரத்தாழ்வார் பூர்ணாஹுதி யோடு முடிவடைகிறது. திருமலையில் நடைபெறுவது போலவே விஜயதசமி யன்று பாரிவேட்டை உற்சவமும் கோலாகலமாக நடைபெறுகிறது. வைகாசி மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமியில் மூல ஸ்தம்பத்தில் விளக்கேற்றி வைத்து தீபாராதனை செய்கிறார்கள். இது இந்த கீலபட்லா கோனேரி ராயர் எம்பெருமா னுக்கு மட்டுமே நடைபெறுவது விசே ஷம். இது திருமலையில் இல்லை.

**கீலபட்லா எம்பெருமானின் அற்புதங்களும், மகிமைகளும் :**

ஸ்ரீரங்கராயுலு என்பவர் இந்த ஆலயத்தில் உற்சவங்களும் நித்ய பூஜைகளும் முறையாக நடைபெற நிறைய மானியங்களை அளித்துள்ளார். நலசானி பல்லே என்கிற கிராமத்தை சேர்ந்த "போடி கொண்டம நாயுடு" என்பவரின் கனவில் தனக்கு



தெலுங்கு மூலம் : திருமதி. எம். உத்தரபல்குனி, திருப்பதி.
தமிழாக்கம் : திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ண ஸ்வாமி, திருப்பதி.

நைவேத்தியம் செய்யப்படும் பிரசாதத்தில் கல்லும், புழுவும் இருப்பதாக வும் ஆதலால் அதை தான் நிராகரிப்பதாகவும் எம்பெருமான் கூற, மறுநாள் காலை கோவிலில் எம்பெருமானுக்கு பூஜை செய்யும் அர்ச்சகர் களை வரச் செய்து இதுபோன்ற தவறுகள் நடக்குமானால் அவர்களுக்கு தூக்கு தண்டனை நிச்சயம் என்று எச்சரித்தாராம்.

சில நாட்கள் ஆனதும் எம்பெருமான் திரும்பவும் அவரது கனவில் தோன்றி அதே விஷயத்தைக் கூற அதிர்ந்து போன அவர், அந்த அர்ச்சகர் களைத் தனது ஆட்களைக் கொண்டு சாட்டையால் அடிக்க, இதனால் அவமானமடைந்த அந்த அர்ச்சகர்கள் இரவோடு இரவாக மூல விக்ரகத் தின் அடியில் இருக்கும் பக்தர்களை ஈர்க்கும் ஸ்ரீசக்ர யந்திரத்தைப் பெயர்த்தெடுத்து திருமலைக்குச் சென்று திருவேங்கடமுடையான் சன்னதியில் பிரதிஷ்டை செய்து விட, அதுவரை சாதாரண அளவில் பக்தர் களின் வருகை இருந்த நமது திருமலையின் கோயிலுக்கு வரும் பக்தர் களின் எண்ணிக்கை வெள்ளமெனப் பெருகி தற்போது ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கில் பக்தர்கள் வந்து தரிசிப்பதும், தங்கள் காணிக்கைகளை செலுத்துவதுமாக பெருகிப் போயிற்று என்பது ஒரு கர்ணா பரம்பரை கதை.

**விக்ரகங்களின் முக்கியத்துவம் :**

திருமலை திருவேங்கடமுடையானின் மூலமூர்த்தியும், இந்த கீல பட்லா கோனேரிராயர் ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாளின் மூல மூர்த்தி யும் தரிசிப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும் சில வித்யாசங்களும் உள்ளன. அவர் திருமலையான் என்பதற்கேற்ப ஏழு மலைகளின் மீது அர்ச்சை வடிவமான நின்ற கோலத்தில் சேவை தருகிறார். இந்த கீலபட்லா எம்பெருமான் அடர்ந்த காடுகளின் நடுவே கொலுவிருக்கிறார். அவர் சர் வாலங்கார பூஷிதர். அவரது திருமேனி ஆபரணங்கள், வஜ்ர, வைடூரி யங்களோடு மின்ன, இவரோ எளிமையாக புஷ்பாலங்காரத்தோடு தரிசனம் தருகிறார். அதேபோல் திருமலையானைத் தரிசிக்க பக்தர்கள் ஏழு மலைகள் ஏறி வந்து, கூட்ட நெரிசலில் சிக்கி, எம்பெருமானைத் தரி சிக்க வேண்டும். இங்கே இந்த கீலபட்லா எம்பெருமானை எளிதாக தரிசிக்கலாம். ஆகவே பக்தர்களே! இந்த "கீலபட்லா" திவ்ய திருத்தலத் திற்கு வந்து இந்த கோனேரி ராயரான ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமியை தரிசித்து வேண்டியதைப் பெறுவோம்.

இந்த ஆலயத்தை திருமலை திருப்பதி தேவஸ்தானம் 18–11–2012ல் தங்கள் ஆதினத்தில் எடுத்துக் கொண்டு, எம்பெருமானுக்கு நித்யபடி ஆரா தனைகளை முறையாக நடைபெறவும், பக்தர்கள் வந்து எளிதாக தரிசிக்க அத்தனை ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

*"கோனேடி ராய தேவாய பக்தானுக்ரக காரிணே*
*கீலபட்ல நிவாஸாய ஸ்ரீநிவாசாய மங்களம்"*

மாண்புமிகு பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 09-06-2019 அன்று
திருவேங்கடமுடையானை தரிசித்தார். அவருடன் இருதெலுங்கு மாநில மேதகு ஆளுநர்
திரு. இ.எஸ்.எல். நரசிம்மன் அவர்கள், மாண்புமிகு ஆ.பி. முதல்வர்
திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு பாரதப்பிரதமரை தி.தி.தே. ஜீயர் ஸ்வாமிகள்
ஆசீர்வதித்தனர். பின்னர் ஸ்வாமி திருவுருவப்படத்தை வழங்கும் ஆ.பி. முதல்வர்,
தி.தி.தே. செயலாட்சித்தலைவர், திருமலை இணைச்செயலாட்சித்தலைவர்












ஸ்வாமி பிரசாதத்தை
உட்கொள்ளும்
மாண்புமிகு பாரதப்பிரதமர்
திரு.நரேந்திரமோடி அவர்கள்



திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு
17-05-2019 முதல் 19-05-2019 வரை நடைபெற்ற
வருடாந்திர வஸந்தோத்ஸவம்

குறித்த காலத்தில்
மழை பொழிந்து நாடு
நலமடைய திருமலையில்
பாரிவேட்டை மண்டபத்தில்
2019, மே 14 முதல் 18 வரை
தி.தி.தே. சாஸ்திரமுறைப்படி
நடத்திய காரீரீஷ்டி யாகம்













குறித்த காலத்தில்
மழை பொழிந்து நாடு
நலமடைய திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர
ஸ்வாமி ஆலயம் அருகில் 2019,
மே 14 முதல் 18 வரை தி.தி.தே.
சாஸ்திரமுறைப்படி நடத்திய
வருணஜபத் திருக்காட்சிகள்







04-06-2019 அன்று திருவேங்கடமுடையானை தரிசித்த மேதகு இந்தியத்துணைக்குடியரசுத்தலைவர் திரு. எம்.வெங்கய்யநாயுடு அவர்கள்



மேதகு இந்தியத்துணைக்குடியரசுத் தலைவர் அவர்களுக்கு ஸ்வாமி திருவுருவப்படத்தை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் மற்றும் திருமலை இணைச்செயலாட்சித்தலைவர்





05-06-2019 அன்று தர்மகிரி வேதவிக்ஞானபீடம், திருமலைக்கு வருகை புரிந்த மேதகு இந்தியத்துணைக்குடியரசுத்தலைவர் திரு.எம்.வெங்கய்யநாயுடு அவர்கள்



ஆ.மா. புதிய முதல்வராக பதவி ஏற்பதற்கு முன்பு (29-05-2019) திருவேங்கடமுடையானை தரிசித்த திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்கள்



திரு. ஒய்.எஸ். ஜகன் மோகன் ரெட்டி அவர்களுக்கு ஸ்வாமி தீர்த்தப்பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே.செயலாட்சித் தலைவர் மற்றும் திருமலை இணைச்செயலாட்சித்தலைவர்

ஆடி மாதத்திலிருந்து மார்கழி மாதம் இறுதி வரை உள்ள 6 மாத காலம் சூரியனுடைய சஞ்சாரம் தென்திசையில் இருக்கும். இதனை "தக்ஷிணாயண புண்யகாலம்" என்பர்.

திருவேங்கடவனுக்கு இந்த தக்ஷிணாயண புண்ய காலத்தில் சிறப்பு பூஜைகள் நடத்த ஏற்படுத்தபட்டதே இந்த "ஆனிவர ஆஸ்தானம்"ஆகும். உண்மையான பெயர் ஆடிப்பூஜை. இதுவே ஆனிவர ஆஸ்தானம் ஆயிற்று. தமிழ் மொழியில் "ஆடிப் பூஜை" என்றும், தெலுங்கில் இதனை "ஆனிவர ஆஸ்தானம்" என்றும் கூறுவர். இந்த நன்னாளில் திருவேங்கடவனுக்கு வருடம் முழுவதும் கிடைக்கின்ற வருமான கணக்குகளை ஒப்படைத்து, மீண்டும் புதிய கணக்குகளைத் துவங்குவர்.

இரவில் பிரம்மாதி தேவர்களாலும், பகலில் மானிடர்களாலும் வணங்கப்பட்டு, தன் கடைக்கண் பார்வையால் அனைவரையும் குளிர கடாக்ஷிக்கும் அத்திருவேங்கடவனுக்கு ஈடு இணை இல்லை. அப்பேர்ப்பட்ட சர்வ ஜகத்ரக்ஷகனான திருவேங்கடவனுக்கு நடைபெறுகின்ற வருடாந்திர உற்சவங்களில் மிக முக்கியமான உற்சவம் "ஆனிவர ஆஸ்தான உற்சவம்".

இவ் உற்சவம் நடைபெறும்போது தினந்தோறும் நடைபெறுகின்ற சுப்ரபாதம், விஸ்வரூப தரிசனம், தோமாலை சேவைகளுக்குப் பிறகு, ஸ்நபன திருமஞ்சன மண்டபத்தில் சத்ர சாமர மரியாதைகளுடன் தங்க சிம்மாசனத்தின் மீது கொலுவீற்றிருக்கும் ஸ்வாமிக்கு (கொலுவு மூர்த்தி) பஞ்சாங்கம் வாசிப்பர். அன்றைய தின திதி, நட்சத்திரம், வாரம் போன்ற விசேஷங்களுடன் உற்சவ சிறப்புகளையும் ஸ்வாமியிடம் கூறுவார்கள்.

அதுமட்டுமல்லாமல் முந்தைய நாள் வருமானம், தங்கம், வெள்ளி ஆபரணங்கள், பாத்திரங்கள் போன்றவற்றின் மதிப்புகள் அனைத்தையும் கூட கணக்குக் காட்டி மொத்த வருமானத்தையும் பெருமாளுக்கு படித்துக் காட்டுவர். முந்தைய நாள் தரிசனம் செய்த பக்தர்களின் எண்ணிக்கையையும் கணக்குக் கூறுவர். எல்லாவற்றையும் கேட்டு மகிழ்ச்சியடைந்து பெருமாள் பக்தர்களை அனுக்ரஹம் செய்வார். இது ஒவ்வொரு ஆஸ்தானத்தன்றும் நடைபெறக் கூடியதாகும்.

ஆனால் மற்ற ஆஸ்தானத்தை விட தக்ஷிணாயண புண்ய காலமான "ஆனிவர ஆஸ்தானம்" மிகவும் சிறப்பானதாகும். இந்நாள் திருமலை கோயில் சரித்திரத்தில் மிகவும் பிரதானமானது.

தினந்தோறும் போலவே தக்ஷிணாயண புண்ய காலத்தில் (ஜூலை 17ஆம் தேதி) காலை ஸ்வாமிக்கு சுப்ரபாதம், விஸ்வரூப தரிசனம், தோமாலை சேவைகள் வழக்கம்போல் நடைபெறாது. அதே போன்று தினமும் நடைபெறுகின்ற கொலுவு ஸ்ரீனிவாச மூர்த்திக்கு தங்க சிம்மாசனத்தின் மேல் கொலுவு நடைபெறாது. தோமாலை சேவை முடிந்தவுடன் ஸ்ரீதேவி பூதேவியுடன் திருமலையப்ப ஸ்வாமிக்கும், விஷ்வக்சேனருக்கும் கோயிலில் ஏகாந்தமாக திருமஞ்சனம் நடைபெறும். பின்னர், முதல் சகஸ்ரநாம அர்ச்சனை, நைவேத்தியம் (முதல் மணி) நடைபெறும்.



# திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்

பிறகு தங்க வாயில் அருகில் உள்ள திருமாமணி (மணிமண்டபம்) மண்டபத்தில் சர்வபூபால வாஹனத் தில் உபய நாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு கருடாழ்வார் பார்க்கும் விதமாக கொலுவு செய்வார்கள். சர்வ ஆபரணங்களாலும் சுகந்த பரிமள மான புஷ்பங்களாலும் உற்சவ மூர்த்திகளை அலங் கரிப்பர்.

திருவேங்கடவனுக்கு அருகில் தெற்கு முகமாக ஸ்ரீவிஷ்வக்சேனரையும் எழுந்தருளப் பண்ணி ஆபர ணங்கள், புஷ்ப மாலைகளால் அலங்கரிப்பர். தலை யில் தொப்பி, கையில் கட்கம் (வாள்) அணிந்து மிகுந்த பயபக்தியுடன் ஸ்வாமியின் ஆணைக்காக காத்துக் கொண்டு இருப்பார் சேனாதிபதி என்னும் விஷ்வக் சேனர். பிறகு ஆனந்த நிலையத்தில் உள்ள மூல மூர்த் திக்கும், தங்க வாயில் அருகில் ஆஸ்தானத்தில் எழுந் தருளச் செய்திருக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும், சேனா பதிக்கும் சிறப்பு பிரசாதங்களால் நைவேத்தியம் சமர்பிக்கப்படும்.

பெரிய ஜீயர் ஸ்வாமிகள், சிறிய ஜீயர் ஸ்வாமிகள், ஏகாங்கிகள், அர்ச்சகர்கள், ஆசார்ய புருஷர்கள், வேத பண்டிதர்கள், தேவஸ்தான செயலாட்சித் தலைவர், உயர் அதிகாரிகள், ஆலய துணை செயலாட்சித் தலைவர், பார்பத்யதார் சத்ர சாமரங்களுடனும், மங்கள வாத்தியங்களுடனும், வேத பண்டிதர்கள் வேதபாரா யணம் முழங்க, பரிச்சாரகர்கள் (மடைப்பள்ளியி லிருந்து தளிகையை கொண்டு வருபவர்கள்) சிறப்பு பிரசாதமாக பொங்கல், சர்க்கரை பொங்கல், புளியோ தரை, தயிர்சாதம், மிளஹோரை, லட்டு, வடை, அப்பம், தோசை போன்றவற்றை நைவேத்தியம் நிவேதனம் செய்வர். விமான பிரதக்ஷணத்தில் தங்கக் கிணறு அருகி லிருக்கும் மடைப்பள்ளியிலிருந்து கிளம்பி இந்த பிரசாதங்களை ஆனந்த நிலயத்தை பிரதக்ஷணம் செய்து கொண்டு, வெள்ளி வாயிலுக்கு எதிராக உள்ள துவஜஸ்தம்பத்தை பிரதக்ஷணமாக வந்து, கோயில் உள்ளே நுழைந்து மூலமூர்த்தி சன்னதியிலும், தங்க வாயில் அருகில் உள்ள ஆஸ்தானத்திலும் நைவேத்தி யதிற்காக வைப்பார்கள். அவ்விரு இடங்களிலும் மணி ஓசை நடைபெறும் நேரத்தில் இந்த சிறப்பு நைவேத் தியம் சமர்ப்பிக்கப்படும்.

நைவேத்தியம் முடிந்ததும் யோக நரசிம்மர் சன்னதியின் அருகில் உள்ள பரிமள அறையிலிருந்து பெரிய ஜீயர் ஸ்வாமிகள், பெரிய வெள்ளி தட்டில் மடித்து வைக்கப்பட்ட 6 பட்டு வஸ்த்திரங்களை தலை மீது வைத்துக் கொண்டு, சத்ர சாமர, மங்கள வாத்தியங் களுடன் பஞ்சமுக தீவட்டிகளுடன் மணியோசை ஒலிக்க, வேத பாராயணத்துடன், சிறிய ஜீயர் ஸ்வாமிகள், ஏகாங்கிகள், தேவஸ்தான செயலாட்சித் தலைவர், இணை செயலாட்சித் தலைவர், துணை செயலாட்சி தலைவர், பார்பத்யதார் முதலான அதிகாரிகள் பின்வர கோயில் வெள்ளி வாயில் முன்பாகவுள்ள துவஜஸ் தம்பத்தை சுற்றி பின் ஆனந்த நிலையத்தில் கொலு வீற்றிருக்கும் மூலமூர்த்திக்கு சமர்பிக்கின்றனர்.

பெரிய ஜீயர் ஸ்வாமிகள், சிறியஜீயர் ஸ்வாமிகள், ஏகாங்கிகள் மட்டுமே ஆனந்த நிலயத்தின் உள்ளே செல்வர். அர்ச்சகர்கள் குலசேகரப்படியின் அருகில் திரையை இடுவர். அர்ச்சக ஸ்வாமிகள், ஜீயர் ஸ்வாமி கள் சமர்பித்த 6 பட்டு வஸ்திரங்களில் நான்கினை மூலமூர்த்திக்கு அலங்கரிப்பர். 1.கிரீடத்திற்கும், 2.நந்த கட்கத்திற்கும், 3.வேஷ்டியாகவும், 4.மேல் அங்க வஸ்திரமாகவும் அலங்கரிப்பர். திரை விலக்கிய பின் அர்ச்சக ஸ்வாமி திருவேங்கடமுடையானுக்கு தலை யில் பரிவட்டம் கட்டி பூஜை ஆரத்தி செய்வர். ஆரத்தி முடிந்த பிறகு முதலில் பிரதான அர்ச்சகருக்கு தீர்த்தம் சடாரி மரியாதையை அளிப்பர்.

அதன் பின் இரு ஜீயர் ஸ்வாமிகளும், ஏகாங்கி களும் குலசேகரப்படிக்கு வெளியே வந்து தீர்த்தம் வாங்கிக் கொண்டு, பின் சடாரி மரியாதையை ஏற்றுக் கொள்வர் (ஆனந்த நிலையத்திற்குள் அர்ச்சகர்களைத் தவிர மற்றவர்களுக்கு தீர்த்தம் கிடையாது). ஆரத்தி, தீர்த்தம், சடாரி மரியாதை தேவஸ்தான அதிகாரிகள் அனைவருக்கும் வழங்கப்படும். இவை அனைத்தும் முடிந்த பின் மற்ற இரு பட்டு வஸ்திரங்களை தங்க வாயில் அருகில் உள்ள உற்சவ மூர்த்திகளுக்கு சமர் பிப்பர். ஒன்றை திருமலையப்ப ஸ்வாமிக்கும், மற் றொன்றை விஷ்வக்சேனருக்கும் அர்ச்சகர்கள் அலங்கரிப்பர்.

பிறகு பிரதான அர்ச்சகர் தம் தலையில் பரிவட் டம் கட்டிக் கொண்டு ஸ்வாமிக்கும், விஷ்வக்சேனருக் கும் அக்ஷதை (குங்கும) தூவுவர். அதன் பிறகு சேனா பதிக்கு பரிவட்டம் கட்டி அக்ஷதையை தூவி சடாரி மரியாதையை செய்வர். அர்ச்சகர்கள் திருவேங்கடவ னின் மூலமாக தானம், தக்ஷிணை வாங்கிக் கொண்டு



"நித்ய ஐஸ்வர்யோபவ" என ஸ்வாமியை ஆசிர்வதிப்பர். அதன் பிறகு அர்ச்சகர்கள் சடாரி, மரியாதையை பெற்றுக் கொண்டு ஸ்வாமிக்கு கொலுவு, மங்கள ஆரத்தி நடத்துவர். இந்தக் கொலுவில் எள்பொடியை நிவேதனம் செய்வர்.

அதன் பிறகு அர்ச்சகர்கள் பெரிய ஜீயர் ஸ்வாமி களுக்கும், சிறிய ஜீயர் ஸ்வாமிகளுக்கும் தனித்தனியாக பரிவட்டம் கட்டி ஸ்வாமியின் பாதங்களில் வைத்திருந்த முத்திரைகளை அவரவர் கைகளில் கொடுத்து தேவஸ் தான "லச்சனை" என்னும் சாவி கொத்துகளை ஜீயர் ஸ்வாமிகளுடைய கையில் கொடுத்து ஸ்வாமிக்கு ஆரத்தி காட்டி தீர்த்தம், சந்தனம், சடாரி மரியாதைகளை நடத்துவர். பிறகு சாவிக்கொத்து ஸ்வாமியின் பாதங் களில் வைக்கப்படும்.

பிறகு ஏகாங்கிக்கும் மேற்கூறிய மரியாதை நடத்தப்படுகிறது. அதன் பிறகு திருமலை திருப்பதி தேவஸ்தான தரப்பில் செயலாட்சித்தலைவர் அவர்க ளுக்கு மட்டும் பரிவட்டம் கட்டி தேவஸ்தான சீல்களை யும், சாவி கொத்தையும் கைகளில் கொடுத்து ஆரத்தி, சந்தனம், தாம்பூலம், தீர்த்தம் போன்ற மரியாதைகளை செய்வர்.

பிறகு ஏகாங்கி தலைக்குப் பரிவட்டம் கட்டிக் கொண்டு ஆஸ்தானத்தில் எழுந்தருளி உள்ள பக்தர் களிடம் ஸ்வாமிக்கு காணிக்கைகளை வசூல் செய்து நிர்வாக அதிகாரிகளிடம் சமர்பிப்பார். பிறகு கமேதார், மஹந்து, மைசூர்ராஜா, தாள்ளபாக்க, தரிகொண்டா ஆரத்திகள் நடைபெறும். பிறகு அங்குள்ள பக்தர்க ளிடம் 1 ரூபாய் வீதம் வசூல் செய்து "ரூபாய் ஆரத்தி" நடைபெறும். பிறகு இந்த காணிக்கை "கஜானாவில்" சேர்க்கப்படும்.

இறுதியில் ஜீயர் ஸ்வாமிகள் மற்றும் செயலாட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டுமே பரிவட்டம் கட்டி சடாரி மரியாதை கள் வழங்கப்படும். அதன் பிறகு ஸ்வாமிக்கு சமர்பித்த நைவேத்திய பிரசாதங்கள் அனைவருக்கும் வழங்கப் படும். அதன் பிறகு பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப் படும். "ஆனிவர ஆஸ்தானம்" அன்று ஆர்ஜித உற்சவங் கள் ஏதும் நடைபெறாது. பின்னர் ஸ்வாமி உபய நாச்சியார்களுடன் (இரண்டாவது மணி) மதிய நேர நைவேத்தியம் வரை அம்மண்டபத்திலேயே வீற்றிருப் பார். அன்றைய மாலை வேளையில் நான்கு மாட வீதி களில் புஷ்ப பல்லக்கில் திருவீதி உலா எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்புரிவார்.

யார் ஸ்வாமியை புண்ய காலத்தில் விசேஷ பூஜை செய்து பலன் பெறுகிறார்களோ அவர்களுக்கு புகழ், வெற்றி, கார்யசித்தி, விஷ்ணுலோகப்ராப்தி பெறுவார் கள் என ஆகம சாஸ்திரம் கூறுகிறது. ஆகையால் இது போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு "ரூபாய் ஆரத்தி" காணிக்கைகளை சமர்ப்பித்து ஸ்வாமியி னுடைய அருளைப் பெறுவோம்.


தெலுங்கு மூலம் : திருமதி. எம். விஜயலக்ஷ்மி.
தமிழாக்கம் : திருமதி. ஏ. அருணா.


*திருமலையில் திருமலையப்ப ஸ்வாமிக்கு 17.07.2019, புதன் கிழமை அன்று ஆனிவர ஆஸ்தானம் நடைபெறும்.*

தெய்வ தரிசனம்



# அத்திகிரி அருளாளன் அருட்தரிசனம்

திரு. தி.சக்திவிநாயகம்,
காஞ்சிபுரம்.

முக்தி தரும் ஏழு தலங்களில் முதன்மையானது காஞ்சிபுரம். சைவ, வைணவத் தலங்கள் பலவும் தன்னகத்தே கொண்ட நகரம். இந்நகரில் பெருந்தேவி தாயார் சமேத தேவராஜ ஸ்வாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

**தலவரலாறு :**

பிரம்ம தேவர் ஸத்ய வ்ரத திருத்தலமாம் காஞ்சி புரத்தில் அச்வ மேத யாகம் செய்தார்.அந்த யாகத்திற்கு அவருடைய பத்தினியாகிய சரஸ்வதியை விடுத்து மற்ற இரு துணைவியராகிய சாவித்ரி, காயத்ரி ஆகியோருடன் யாகத்தை தொடங்கினார். இதனை அறிந்த சரஸ்வதி மிகவும் கோபம் கொண்டு வேகவதி என்ற நதியாய் தோன்றி யாகத்தை அழிக்க முயன்றாள். பிரம்மாவின் வேண்டுகோளின்படி மகாவிஷ்ணு வேகவதி நதியின் குறுக்கே சயனித்துக் கொண்டார். நதியும் அங்கேயே தடுத்து நிறுத்தப்பட்டது. பிறகு பிரம்மாவின் யாகம் பூர்த்தியானதும் யாக குண்டத்தில் இருந்து புண்ணியக் கோட்டி விமானத்துடன் பெருமாள் தோன்றினார். பிறகு பிரம்மாவின் வேண்டுகோளின்படி அங்கேயே ஸ்ரீவரத ராஜர் எனும் திருநாமத்துடன் கோயில் கொண்டார்.

பிரம்மாவும் அத்தி மரத்தில் ஒரு சிலை வடித்து இங்கே பிரதிஷ்டை செய்தார். வேண்டும் வரம் தருபவர் என்பதால் "வரதர்" என பெயர் பெற்றார். இங்குள்ள தாயாரை பெருந்தேவி தாயார் என்று அழைப்பர். வரதராஜ பெருமாளை தரிசனம் செய்ய 24 படிகள் மேலேறி அத்திகிரியை அடைய வேண்டும். மேலும் ஸ்வாமி தேவர்களுக்கெல்லாம் தலைவர் என நம்மாழ்வார் குறிப்பிடுகின்றார். அதனால் ஸ்வாமிக்கு "தேவராஜன்" எனும் திருநாமமும் உண்டு. இங்கு தங்க பல்லி, வெள்ளி பல்லிகளாக இருக்கும் சூரியன், சந்திரனை தரிசனம் செய்தால் நம் மீது பல்லி விழுவதால் உண்டாகும் தோஷங்களும், கிரகண தோஷங்களும் நீங்கி நலம் உண்டாகும். நம் மனதில் நினைத்த காரியம் கைகூடும் என்பது ஐதீகம்.

**தலச்சிறப்பு :**

பெருமாள் மேற்கு முக மண்டலமாக நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். எம்பெருமானை ஐராவதமே மலை உருவில் தாங்கினதால் இதற்கு "அத்திகிரி" என்று பெயர். அத்திகிரி வரதரை பூதத்தாழ்வார், பேயாழ்வார்

மற்றும் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

> *"அத்தியூரான் புள்ளை ஊர்வான் அணிமணியின்
> துத்திசேர் நாகத்தின் மேல் துயில்வான் முத்தீ
> மறை ஆவான் மாகடல் நஞ்சுஉண்டான் தனக்கும்
> இறை ஆவான் எங்கள் பிரான்."*

என்று காஞ்சி வரதரை பூதத்தாழ்வார் மனம் உருக பாடுகிறார். அதாவது "பெரியதிருவடியான கருடனை வாகனமாகக் கொண்டு நடத்துபவரும், அழகிய மாணிக் கங்களையும், படப்பொறிகளையும் உடையவனான ஆதிசேடன் மேல் பள்ளிக் கொள்பவரும், மூன்று அக்னி களால் ஆராதிக்கப்படுபவரும், வேதங்களால் போற்றப் படுபவரும், கடலிலிருந்து உண்டான நஞ்சை உட் கொண்ட சிவனுக்கும் ஸ்வாமியாய் இருப்பவருமான எம்பெருமான் ஸ்ரீஅத்திகிரியிலே எழுந்தருளியிருக் கிறார்" என்று பாசுரமிடுகிறார்.

**அத்திவரதர் :**

பிரம்மனின் யாகத்தீயினின்று தோன்றியதால் சிறிது உருமாறிவிட்டார் ஸ்வாமி. எனவே அசரீரி மூலம் தன்னை அனந்தத் தீர்த்தத்தில் விட்டு விட்டு, பழைய சீவரத்தி லிருந்து சிலையை கொண்டு வந்து காஞ்சியில் பிரதிஷ்டை செய்யுமாறு கூறினார். பின்னர் அத்திவரதரை வெள்ளித் தகடுகள் பதித்த பெட்டியில் சயன கோலமாக "அமிர்தசரஸ்" எனும் குளத்தில் பள்ளி கொள்ள செய்தனர். 40 வருடங்களுக்கு ஒரு முறை அத்திவரதரை மேலே கொண்டு வந்து சயன மற்றும் நின்ற கோலத்தில் எழுந்தருளச் செய்வர்.

நூற்றுக்கால் மண்டபத்தின் வடக்கே உள்ள குளத் தில் இரண்டு நீராழி மண்டபங்கள் உள்ளன. தென் திசை யில் உள்ள மண்டபத்திற்கு கீழே நீருக்கு அடியில் ஒரு மண்டபம் உள்ளது. அதில் தான் மிகப்பெரும் அத்தி மரத்தால் ஆன பழைய அத்திவரதர் சயன நிலையில் சேவை சாதித்துக் கொண்டிருக்கிறார். இந்தக் குளம் வற் றாத, நீர் நிறைந்த குளமாக உள்ளது. 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும் இப்பெருமாளின் திருமேனி வெளியே கொண்டு வந்து தரிசனத்திற்கு வைக்கப்பட்டு வழிபாடு



கள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் 1979 ஆம் ஆண்டிற்குப் பிறகு இவ்வாண்டு ஜூலை 1 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 17ஆம் தேதி வரையில் பக்தர்களின் கண்களுக்கு விருந்தாகக் காட்சியருள்வார். அதுசமயம் எம்பெருமானுக்கு நாள்தோறும் ஆகம சாஸ்திரப்படி நான்கு கால பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெறும். இவ்வாலயத்தில் உள்ளூர், வெளியூர் மட்டுமின்றி வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாட்டிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரளாக வந்து எம்பெருமானை தரிசிப்பார்கள்.

இத்தலத்தில் எந்த ஒரு புண்ணிய காரியம் செய்தா லும் அது ஒரு கோடி மடங்காக பலன் தரும். 40 வருடங் களுக்கு ஒரு முறை தரிசிக்கக்கூடிய அத்தி வரதரை இந்த வருடம் தரிசிப்பது நம் வாழ்வில் செய்த மிகப்பெரிய புண்ணியமாகக் கருதலாம்.



**இவ்வாலயம் காஞ்சிபுரத்திலிருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் காலை 6.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மாலை 3.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் நடை திறந்திருக்கும்.**



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

# பக்த துருவனின் சரித்திரம் (பகுதி-2)

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

பக்த துருவனின் கடும் தவத்தைக் கண்டு மனம் மகிழ்ந்து, ஸ்ரீஹரி கருட வாகன தாரனாக வந்து அவனுக்கு காட்சியளித்தார். அக்காட்சியைக் கண்ட துருவன் ஆச்சரிய மாகப் பார்த்து பரவச மடைந்தான். அப்ப டியே எழுந்து இறைவ னின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். அந்தத் தேவாதி தேவனாகிய இறைவனின் கருணையினால் வேதசாரம் முழுவதும் துருவனுக்குப் புலப்பட்டது. அவன் பக்தி பாவணையோடு இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடித் துதித்தான். அதைக்கேட்டு மகிழ்ந்த ஸ்ரீஹரி “துருவனே! கல்பத்தின் முடிவில் உண்டாக விருக்கும் பிரளயத்திற் குப் பிறகும் நிலைத்து நிற்கக் கூடிய சூரிய மண்டலத்துக் கிரகங்களும், நட்சத்திரங் களும் எப்போதும் சுற்றி வருகின்றதும், இதுவரையில் எவருடைய ஆளுகைக்கும் உட்படாததுமாகிய துருவ லோகத்தை உனக்கு நான் அளிக்கின்றேன். மேலும், உன் தந்தை உன்னிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு காட்டிற்குச் சென்ற பிறகு நீ அந்த நாட்டை முப்பத்தாறாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்வாய். உனக்கு வயோதிகம் என்பது இல்லை. இந்த உலக சுகங்கள் அனைத்தையும் அனுபவித்தப் பிறகு முடிவில் என்னை நீ தியானித்து என்னிடம் வந்து சேருவாய்! என்று கூறினார். இவ்வாறாக ஸ்ரீஹரி எதிர்காலத்தில் நடக்கப் போவதையும் அதற்காகத் துருவன் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் எடுத்துக் கூறி இறைவன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினார். துருவன் அரண்மனையை அடைந் தான். சில ஆண்டுகள் சென்றன. துருவன் வாலிபப் பருவத்தை அடைந்தான். அவன் அரசுப் பொறுப்பை ஏற்கும் தகுதியை அடைந்து விட்டதாக மந்திரிகளும் மக்களும் ஆமோதித்தார்கள். இதைக் கண்டு உத்தானபாதனும் நல்லதொரு சுப வேளையில் துருவனுக்கு சக்கிரவர்த்தியாகப் பட்டாபிஷேகம் செய்து வைத்தான். பின்பு தன் வயோதிகத்தை உணர்ந்து ஆத்ம சாந்திக்காகக் காட்டுக்குச் செல்லலானான். தன் மகன் துருவனை முன்னுதாரணமாக மனதில் எண்ணிக் கொண்டு பகவத் தரிசனத்தைக் காண வேண்டும் என்னும் கோரிக்கையோடு காட்டில் தவம் செய்யத் தொடங்கினான். பின்பு துருவன் சிசுமாரன் என்னும் பிரஜாபதியின் மகளாகிய பிரமியை திருமணம் செய்து கொண்டான். அவர்களுக்குக் கல்பன், வத்சரன் என்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். பின்னர் வாயு தேவனுடைய மகளாகிய இளை என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். அவளுக்கு உத்கலன் என்ற பிள்ளையும், சௌந்தர்யவதியான ஒரு பெண்ணும் பிறந்தனர்.

ஒரு நாள் துருவனின் சகோதரனான உத்தமன் இமயமலைக்குச் சென்று அங்கு யட்சன் ஒருவனால் கொல்லப்பட்டான். அதை அறிந்த அவன் தாயான சுருசி துடிதுடித்துப் போனாள். பின்பு அவள் காட்டிற்குச் சென்று, எதிர்பாராத விதமாகக் காட்டுத் தீயில் சிக்கிக் கொண்டு மாண்டுபோனாள். தன் சகோதரன் யட்சகனால்



கொல்லப்பட்டதை அறிந்து துருவன் கடும் கோபம் கொண்டு, யட்சர்களை அழித்து விடுவது என்று அவர்கள் மேல் படையை திரட்டிச் சென்று கொடூர மாகப் போர் செய்தான். இப்போரின் காரணமாக அனைத்து திக்குகளும் அதிர்ந்தன. அதைக்கண்டு யட்சர்கள் யாவரும் அச்சம் கொண்டனர். மிகவும் பலசாலிகளான யட்சர்கள் மட்டுமே ஆயுதங்கள் ஏந்தி வந்து போர்ச் செய்தனர். அவர்களுள் பெரும்பாலானோர் துருவனால் கொல்லப்பட்டார் கள். உண்மையில் ஒரு பாவமும் அறியாத யட் சர்கள் கொல்லப்படு வதைக் கண்டு சுயம்புவமனு முனிவர்கள் சிலருடன் அங்கு வந்தார். துருவ னைப் பார்த்து இப்போரை உடனே நிறுத்தும்படி யாகக்கேட்டுக் கொண்டார். சுயம்புவ மனுவின் ஆலோசனைப்படி போரை நிறுத்தியதோடு அவரை வணங்கி நின்றான். அவனுடைய வணக் கத்தை ஏற்றுக் கொண்ட சுயம்புவமனு தன்னுடன் வந்த முனிவர்களுடன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பி னார். துருவன் யட்ச சம்ஹாரத்தை நிறுத்தி விட்டதை அறிந்த குபேரன் மகிழ்ந்து அவன் முன்பு தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் தருகிறேன் என்றான்.

குபேரன் தன் முன் தோன்றி இவ்வாறு கூறியதைக் கேட்டு துருவன் மிகவும் மகிழ்ச்சி கொண்டான். துருவன், “இறைவ னாகிய மகாவிஷ்ணுவிடம் எப்பொழுதும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கையும் பக்தி யும் இருக்கும்படி அருள்பாளிக்க வேண்டும்” என்று வேண்டி னான். குபேரனிடம் கொட்டிக் கிடக்கும் எல்லா செல்வங்களை யும் வேண்டாம் என்று உதறி, பகவத் பக்தியே தனக்கு வேண் டும் எனக் கேட்டுக் கொண்டதினால், அனைத்துச் செல்வங் களைக் காட்டிலும் பகவத் பக்தி ஒன்றே முக்திக்கு வழி வகுக் கும் என்பது புலப்படுகின்றது. பின்னர் குபேரன் மகிழ்ச்சியுடன் துருவன் கேட்டவாறே அருள் செய்தான். பின்பு தன் இருப்பிடம் திரும்பினார். துருவனும் தன் அரண்மனைக்கு வந்து சேர்ந் தான். துருவன் தன் நாட்டுக்குத் திரும்பிய பின்பு, இறைவனிடம் மிகுந்த பக்தியுடையவனாகி யாகங்கள் பல செய்தான். தெய்வ குணம் நிரம்பியவனாகவும், அடியார்களிடத்தில் மிகவும் அன்புடையவனாகவும் இருந்து, நாட்டுமக்களை தான் பெற்ற பிள்ளைகளைப் போல் கண்ணில் வைத்துக் காப்பாற்றினான். இப்படியாக முப்பத்தாறாயிரம் ஆண்டுகள் நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்து வந்தான்.


பின்பு ஆட்சிப் பொறுப்பைத் தன் மகனிடத்தில் ஒப்ப டைத்து விட்டான். இந்த உலகம் முழுவதும் மாயையால் நிரம்பி யுள்ளது. இந்த மாயையிலேயே உயிர்கள் எல்லாம் சிக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்தவனாய் அனைத்தும் துறந்து இமயமலையில் உள்ள பத்ரிகாசிரமம் சென்றான். அங்கு உள்ள புனித நீரில் நீராடிய உடனே அவனுடைய இந்திரி யங்கள் பவித்திரமானது. மூச்சை அடக்கி, இறைவனிடத்தில் மனதை ஒருமுகப்படுத்தி நீண்ட காலம் தியானத்தில் இருந் தான். ஒரு நாள் விண்ணிலிருந்து ஒளிமயமான விமானம் ஒன்று கீழே இறங்கி வந்தது. அந்த விமானத்தில் இரண்டு இறைத் தூதர்கள் இருந்தனர். அவர்கள் நான்கு கரங்களை உடையவர் களாகவும் கருமை நிறமுடையவர்களாகவும், அழகிய அணி கலன்கள் பலவும் அணிந்தவர்களாகவும் இருந்தனர். அவர் களைப் பார்த்த மாத்திரத்தில் அவர்கள் இறைவனின் குற்றேவ லர்கள் என அறிந்து கொண்டான். மிகவும் பணிவோடு அவர் களை வணங்கி நின்றான். அப்பொழுது துருவன் கிருஷ்ணரி டத்திலே உள்ளம் ஒன்றியவனாக இருந்தான் என்பதை *“தம் க்ருஷ்ண பாதாபிநிவிஸ்ட சேதஸம்”* என்று பாகவதம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது.

இறைதூதர்களான நந்த சுனந்தர்கள் இருவரும் துருவனை கீர்த்தித்து தங்களை இறைவனின் இருப்பிடத் திற்கு அழைத்து செல்லவே நாங்கள் வந்துள்ளோம் எனவே புறப்படுவதற்குத் தயாராகுங்கள் எனக் கேட்டுக் கொண்டனர். அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுப் புலகாங்கிதம் அடைந்த துருவன் புறப்படுவதற்குத் தயாரானான். பின்னர்

விமானத்தில் ஏறப் போனான். அப்பொழுது தன் தாயான சுனீதியின் நினைவுகள் அவன் மனதில் வந்தது. "தாயை இங்கு விட்டுவிட்டு தான் ஒருவன் மட்டும் எப்படி வைகுண் டத்திற்குச் செல்வது" என்று நினைத்தான். அவனுடைய மனதைப் புரிந்துக் கொண்ட நந்த சுனந்தர்கள், "துருவா! அதோ உன் தாய் உனக்கும் முன்பாக இறைவனிருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அந்த விமானத்தைப் பார்" எனச் சுட்டிக்காட்டி அவன் மனதைத் தேற்றினார்கள். அதைப் பார்த்தவுடன் மிகவும் மகிழ்ந்த துருவன் மனச் சஞ் சலம் ஏதுமின்றி இறைவன் இருப்பிடம் நோக்கிப் பய ணமானான். பயண வழியில் அவனுக்குச் சூரிய மண்ட லத்தில் உள்ள அனேக கிரகங்களும் தென்பட்டன. தேவர் கள் எல்லாரும் தன் மீது பூமழைப் பொழிவதையும் கண் டான். மேலும், சப்தகிரி மண்டலம் என்று சொல்லப் படு கின்ற ரிஷிகளின் சப்த லோகத்தையும் கடந்து, விஷ்ணு நிவாசமான வைகுண்டத்தை அடைந்து திவ்ய நிலை யைப் பெற்றான். துருவனின் கிருஷ்ண பக்தியை எடுத் துக் காட்டும் பாகவத சுலோகம் "இத்யுத்தாந பத: புத்ரோ த்ருவ: க்ருஷ்ண பராயண:" என்று சுட்டுகிறது. இவ் வாறாக துருவன் மூன்று லோகத்திற்கும் சூடாமணியாய் விளங்கும் இடத்தைப் பெற்றான்.

துருவனின் மகிமைகளையும் வரலாற்றையும் தேவரிஷி நாரத முனி வீணையை மீட்டிப் பாடல்களைப் பாடிக் கீர்த்தித்து வந்தார். பெருமை வாய்ந்த இந்த துருவ னின் வரலாற்றைக் கேட்பதற்கு சாதுக்களும், பக்தர்களும் மிகவும் விரும்புகின்றனர். இவ்வரலாற்றைக் கேட்பதி னால் செல்வமும், இளமையும், தீர்காயுசும் பெறுவர் மற் றும் தம் மனதில் நினைத்திருக்கும் கோரிக் கைகள் அனைத்தும் நிறைவேறும். மங்களகரமான இச்சரித் திரத் தைக் கேட்பதினால் சொர்க்கத்தை அடைவர். இதனால் தேவர்களுடைய அருளும் கிட்டும். மேலும், எல்லா வித மான பாபங்களும் அழிந்து போகும். துருவனின் சரித்தி ரத்தைக் கேட்பவர்களுக்குத் துருவனைப் போலவே நல்ல குணங்கள் சித்திக்கும். துருவ சரித்திரத்தை, பௌர்ணமி அமாவாசைகளிலும், துவாதசியிலும், சிரவண நட்சத்திரத்திலும் மாதக் கடைசி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளிலும் கீர்த்திப்பது சிறப்புக்குரியதாகும்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

## சர்வ தரிசனம் டோக்கன்

- நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிப்பதற்கு "சர்வதரிசனம் டோக்கன்" முறையினை அமல்படுத்தப்பட்டுள்ளது.
- க்யூ வரிசையிலும், கம்பார்ட்மெண்ட்டிலும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.
- சர்வ தரிசனம் டோக்கன்கள் பெறுவதன் மூலம் நிர்ணியிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிக்கலாம்.
- திருமலையிலும் இந்த டோக்கன்கள் வழங்கப்படுகிறது.
- திருப்பதியில் இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ள விஷ்ணு நிவாசம், இரயில் நிலையத்திற்கு பின்புறமுள்ள கோவிந்த ராஜ ஸ்வாமி 2,3 சத்திரங்கள், ஸ்ரீநிவாசம், அலிபிரியில் உள்ள பூதேவி கட்டிடத் தொகுதி, ஆர்.டி.சி. பேருந்து நிலையத்தில் உள்ள கௌண்ட்டரில் பக்தர்கள் இலவசமாக சர்வ தரிசனம் டோக்கன்கள் பெற்றுக் கொள்ளலாம்.
- குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆதார் அட்டையை கொண்டு வருதல் வேண்டும். ஆதார் அட்டை இல்லாத பட்சத்தில் வாக்காளர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.
- டோக்கன்கள் பெற்ற பக்தர்கள் டோக்கனில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நாராயணகிரி கார்டனை அடைந்து திவ்ய தரிசன கட்டிடத் தொகுதி வழியாக ஸ்வாமியை தரிசனம் செய்யலாம்.
- இடைப்பட்ட காலத்தில் திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், அப்பளாயகுண்ட்டா போன்ற தி.தி.தே. ஆலயங்களுடன் பிற புண்ணிய திருத்தலங்களையும் தரிசியுங்கள்.
- ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை இல்லாத பக்தர்கள் வழக்கம் போல் வைகுண்டம் கட்டிடத் தொகுதியில் காத்திருந்து ஸ்வாமியை தரிசிக்கலாம்.

– செயலாட்சித்தலைவர்.

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

## பெரியாழ்வார் :

பெரியாழ்வார் ஆனி மாதம் சுவாதி நக்ஷத்ரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தார். இவர் அருளிய பிரபந்தங்கள் திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியுமாகும்.


"நல்ல திருப்பல்லாண்டு நான்
மூன்றோன் வாழியே
நானூற்று அறுபத்தொன்றும் நமக்கு
உரைத்தான் வாழியே
சொல்லரிய ஆனிதனில் சோதி வந்தான்
வாழியே
தொடைசூடிக் கொடுத்தவள்தன்
தொழுந்தமப்பன் வாழியே
செல்வ நம்பி தன்னைப்போல்
சிறப்புற்றான் வாழியே
சென்று கிழியறுத்து மால் தெய்வ
மென்றான் வாழியே
வில்லிபுத்தூர் நகரத்தை விளக்கினான்
வாழியே
வேயர்கோன் பட்டர்பிரான் மேதினியில்
வாழியே."

## பதவுரை

நல்ல திருப்பல்லாண்டு – நன்மையான திருப்பல்லாண்டு, நான்மூன்றோன் – பன்னிரண்டு பாசுரங்களை அருளியவன், நானூற்று அறுபத்தொன்றும் – 461 பாசுரங்களையும், – நமக்கு உரைத்தான். சொல்லரிய – சொல்லுவதற்கு அருமையான, ஆனி தனில் – ஆனி மாதத்தில், சோதி – சுவாதி நக்ஷத்திரத்தில், வந்தான் – அவதரித்தவன். தொடை – பூமாலையை, சூடிக் கொடுத்தவள் தன் – தன் தலையிலே சூடி எம்பெருமானுக்குக் கொடுத்தவளான ஆண்டாள், தொழும் தமப்பன் – வணங்கும் தந்தையான பெரியாழ்வார். – செல்வநம்பிதன்னைப்போல் – செல்வ நம்பியைப் போல், சிறப்புற்றான் – சிறப்பு பெற்றவரான பெரியாழ்வார். சென்று – பாண்டிய சபைக்குச் சென்று, கிழி அறுத்து – வெற்றி பெறுவோர்க்குப் பரிசாகச் சீலையில் முடித்த நிதிப் பொதியை அறுத்து, மால் – பெருமையுடைய நாராயணனை, தெய்வமென்றான் – பரம்பொருள் என்று நிலைநாட்டினார். – வில்லிபுத்தூர் நகரத்தை, விளக்கினான் – விளங்கச் செய்தான். வேயர்கோன் – வேயர் குலத்துக்கு தலைவனான, பட்டர்பிரான் – பெரியாழ்வார், மேதினியில் – இப்பூமியில், வாழியே – நித்ய மங்களமாக வேணும்.

## சிறப்பு உரை

(நல்ல திருப்பல்லாண்டு) – திருப்பல்லாண்டுக்கு நன்மையாவது காலம் என்ற பொருள் உள்ளவரையிலும் தன்னை ஒழிந்த அறிவுள் பொருள் அறிவில் பொருள் ஆகியவற்றை சரீரமாகக் கொண்ட



எம்பெருமானைச் சுற்றி நின்று மங்களாசாசனம் பண்ணப் பெறுவதாகும். "பல்லாண்டு" என்ற சொல் ஸ்வரூபத் துக்குச் சேர்ந்ததாகும். அதாவது உயர்ந்தவனாயி ருப்பவனைத் தாழ்ந்தவனான ஒருவன் கண்டால் அவனு டைய உயர்வுக்குத்தக்கதாகச் சொல்லும் சொல்லாகை யால், எம்பெருமானுடைய உயர்த்திக்கு எல்லையில்லா மையாலும், அவனைக் குறித்துத் தம்முடைய தாழ்ச்சிக்கு எல்லையில்லாமையாலும், இந்த உயர்வு தாழ்வு வேறு பாடு ஸ்வரூபத்தால் உண்டானதாகும். எனவே பல்லாண்டு என்ற சொல் ஸ்வரூப வாசியாகும். திருப்பல்லாண்டானது திவ்ய ப்ரபந்தங்களுக்கெல்லாம் ஆதியானது. எதுபோல என்றால் – எல்லா வேதங்களும் பிரணவத்தை முதலில் கொண்டவை. வேதங்கள் பிரணவத்திலிருந்து உண்டானவை. வேதத்துக்கு பிரண வம் முதலிலேயாயிருக்குமாபோலே, திருப்பல்லாண் டும் அடையத்தக்க பரம்பொருளின் தன்மை முதலான வற்றில் தெரிவிக்கிற எல்லாப் பிரபந்தத்தின் கருத்தான ஐந்து பொருளை இந்தப்பிரபந்தத்தில் கொண்டதாகும். இப்பிரபந்தம் முழுவதும் மங்களாசாசனமாய் இருக்கை யாலும் சுருங்கியிருக்கும் தன்மை நன்மை யாம் தன்மை ஆகியவற்றாலே அருளிச் செயலுக்கு எல்லாம் முதலாயி ருக்கும் நன்மை உண்டு என்பர். மேலும் பிரணவத்தை முதலாகவுடைய திருமந்திரம் எம்பெருமானை அடை வதில் முக்கியமாயிருக்குமா போலே, அதன் விவரண மான இதுவும் எம்பெருமானை அடைதலைத் தெரிவிப் பதில் முக்கியமாயிருக்கும். அருளிச் செயல்களுக்கும் முதல் முடிவு சொல்லும் முறையிலே காப்பாகவும் இருக் கும் என்பர். இது பற்றியே மாமுனிகள் *"கோதிலவாம் ஆழ்வார்கள் கூறுகலைக் கெல்லாம் ஆதி திருப்பல்லாண்டு"* என்பர். வல்லப தேவனுக்கு பெரியாழ்வார் எம்பெருமா னுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொண்டு, அவனுக்காகவும் அவன் அடியார் களுக்காகவும் வாழ்க்கை நடத்துவதே, அவனருளாலே மறுமைப் பயன் பெற சிறந்தவழி என்று திருப் பல்லாண்டின் நன்மையை உபதேசித்தது காண்க. இது பற்றியே *"நன்றி புனை பல்லாண்டு"* என்று மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் அருளுவர். மேலும் அமுதனாரும் இராமாநுச நூற்றந்தாதியில் *"சேராத காதல் .... பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன்"* (15) என்கிறபடியே எல்லோருக்கும் நன்மை செய்பவனாய், எல்லாரையும் காப்பவனான சர்வேச்வரனை நேரில் கண்டு அவனுடைய காக்கும் தன்மை முதலானவற்றில் கண் வைக்காமல் பக்தியின் முதிர்ச்சியாலே அவனுக்கு என் வருகிறதோ என்னும் ஐயப்பாட்டினாலே திருப்பல்லாண்டாலே மங்களாசாச னம் பண்ணி அவனுக்குக் காப்பிட்ட தன்மையுடையவர் என்று சுவைபட உரைப்பர்.

(நான்மூன்றோன்) – $4\times3=12$. 12 பாசுரங்கள் கொண் டது திருப்பல்லாண்டு. மற்றை ஆழ்வார் பிரபந்தங் களைக் காட்டிலும் இப்பிரபந்தத்துக்கு உண்டான பெருமை. வேதம், இதிகாசம், புராணம் ஆகியவை கற் பது அரிது. எல்லாருக்கும் தகுதியான நம்மாழ்வார் அரு ளிய திருவாய்மொழியில் உண்டான அருமை இப்பிரபந் தத்துக்கு இல்லை. இன்னமும் மகாபாரதம் போலே பெரும் பரப்பாய் இன்னது சொல்லிற்று என்று முடிவு எடுக்க முடியாத குறையுமின்றிக்கே, பிரணவம் போலே சப்தம் சிறியதாய், எல்லா வேதப் பொருளும் அதுக் குள்ளே காண வேண்டியிருக்கும். அது தெரியாமல் தேட வேண்டிவரும். அக்குறையின்றிக்கே, பன்னிரண்டு பாட டாய் நிலையற்ற செல்வம், ஆத்மாநுபவம் ஆகியவற்றை நீக்கி உத்தம உறுதிப் பொருளான பகவத் கைங்கர் யத்தை நன்கு அறியும்படியாக தெரிவிக்கையாலே இதுக்குப் பெருமை உண்டு. மேலும் இப்பிரபந்தம் தன்னைச் சொல்லுபவன் கையிலே மேன்மையைக் கைக்கொள்ளவல்ல சக்தியை உடையது என்பர். இதில் முதலிரண்டு (1,2) பாசுரங்களால் எம்பெருமானின்

**69. சாஸ்த்திர நீதிகள் :**

தஸ்கரஸ்ய வதோ தண்டோ
தாசீ தண்டஸ்து முண்டநம் |
பார்யா தண்டம் ப்ருதக்ச்யாம்
மித்ர தண்டம் பாஷணம் ||

கடுமையாக நடக்கும் மூர்க்க குணமுடைய திருடர்க ளுக்கு கொலையே சிறந்த தண்டனையாகும். அவர்களை நாட்டில் அலைய விட்டால் மறுபடியும் துணிச்சலுடன் தவறு செய்து பொது ஜனங்களுக்கு தீமையை செய்வார் கள்! விபசாரம் செய்யும் பெண்களுக்கு தலையை மொட்டை அடித்து விடுவதே சிறந்த தண்டனையாகும்! மனைவி தவறு செய்தால் அவளிடம் பேசாமல், வாசலிலே படுத்து தூங்கு வதே சிறந்த தண்டனை யாம்! துஷ்ட குணங்கள் நிறைந்த நண்பர்களோ! உறவினர் களோ! அவர்களுடன் பழகாமலும் பேசாமல் இருப்பதுமே, மன அமைதியை தரும்! அதுவே அவர்களுக்கு தண்டனை யாகிவிடும்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



அழகுக்கும் குணத்துக்கும் மங்களா சாசனம் செய்கிறார். இதனால் திருப்தி பெறாத ஆழ்வார் அடுத்த மூன்று பாசுரங்களால் (3,4,5) முறையே எம்பெருமானையே சரணமடைந்தவர்கள், கைவல்யாநுபவம் செய்பவர்கள், ஐச்வர்யத்தை விரும்புமவர்கள் ஆகிய மூவகை மக்கள் சமூகத்தை அழைக்கிறார். அடுத்த மூன்று பாசுரங்களில் (6,7,8) அவர்கள் சம்மதித்து ஆழ்வாருடன் சேருகின்றனர். மேலும் மூன்று பாசுரங்களில் (9,10,11) மூவகையினரும் ஆழ்வாருடன் சேர்ந்து எம்பெருமானுக்கு பல்லாண்டு பாடுகின்றனர். கடைசி பாசுரத்தில் (12) திருப்பல்லாண்டின் பயனைச் சொல்லுகிறார்.

இதுபற்றியே "பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டு" என்று பிரபந்த முடிவில் அருளியது காண்க. மேலும் திருமந்திரத்தின் விளக்கமாகவும் கூறுவர். அதாவது முதலிரண்டு பாசுரம் பிரணவத்தின் பொருளைக் காட்டியபடி. மூன்று முதல் பதினொன்று வரை "நம:" என்ற பதத்தின் பொருளைச் சொன்னபடி. 12 வது பாசுரம் "நாராயணாய" என்பதன் விளக்கம் என்பர் ஆன்றோர்.

(நானூற்று அறுபத்தொன்றும் நமக்கு உரைத்தான்) – திருப்பல்லாண்டு நீங்கலாக பெரியாழ்வார் அருளிய திருமொழியானது நான்கு பத்துக்களோடு ஐந்தாம் பத்தில் நான்கு பதிகங்கள் கொண்டு, சில பதிகங்களில் பாடல்கள் அதிகமாகக் கொண்டு மொத்தம் 461 பாசுரங்களைக் கொண்டதாகும். இதன் மூலமாக ஆழ்வார் தாம் மிகவும் ஈடுபட்ட கிருஷ்ணாவதாரத்தை, அவதாரம் தொடங்கி, கண்ணனுடைய இளமைப்பருவ திருவிளையாடல்களையும் ஆனைத் தொழில்களையும் ஒன்று விடாமல் முதல் பத்து முதல் மூன்றாம் பத்தில் எட்டு பதிகம் வரை பரக்க அனுபவித்து, 3.9இல் ராமக்ருஷ்ண அவதார திருவிளையாடல்களை ஒரே சமயத்தில் அனுபவித்து, மூன்றாம் பத்து கடைசி பதிகத்தில் அனுமன் சீதைக்குச் சொன்ன அடையாளங்களை அனுபவித்தார். மேலும் நாலாம் பத்து தொடக்கமாக ராமாவதாரம் மற்றும் திருவரங்கம் முதலான அர்ச்சாவதார திவ்ய தேசங்கள் பற்றி பேசி, இறுதியில் 5.4இல் திருவேங்கடவனிடம் சரணாகதி செய்து நம்மையும் அனுபவிக்க உபதேசித்துள்ளார்.

(சொல்லரிய ஆனிதனில் சோதி) – சொல் அரிய– சொல்லுவதற்கு பெருமையான. இவ்வாழ்வார் ஆனி மாதத்தில் ஒன்பதாம் தேதியில் சுக்ல பக்ஷ ஏகாதசியில் ஞாயிற்றுக்கிழமையில் சுவாதி நக்ஷத்திரத்தில் அவதரித்தார் என்று திவ்யசூரி சரிதம் கூறும். ஆனி மாதம் மிதுன மாதம் என்றும், ஜ்யேஷ்ட மாதம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனி மாதத்தின் பெருமையாவது காலம் என்பது நடையாடாத தேசமான பரமபதத்தில் இடமில்லாத இடத்தில் பயப்படுமவர்களான நித்ய சூரிகளாலே எப்போதும் வாழ்த்தப்படுகிற எம்பெருமான், கலி சாம்ராஜ்யம் பண்ணும் இப்பூமியில் மென்மையான திவ்யமங்கள திருமேனியுடன் ஆழ்வார் கண்ணுக்கு இலக்காகத் தோன்றினான். அப்படிப்பட்ட ஆழ்வார் பிரிதொன்றுக்கில்லாத சிறப்புடைய ஆனி மாதத்தில் அவதரித்தார் என்று உரைப்பர். இதுவாயிற்று எல்லாவற்றாலும் வந்த பெருமை. வடமொழியில் சுவாதி நக்ஷத்ரம் சோதி என்று தமிழில் வந்தது. இது வாயுவை தேவதையாகக் கொண்ட நக்ஷத்ரம்.

இந்த சுவாதியின் பெருமையாவது – திருப்பாவை ஆறாயிரப்படியில் ''அணிபுதுவை'' என்ற இடத்தில் பெரியாழ்வாரை முத்தாகக் கூறுவர். முத்து உள்ளும் புறமும் தூய்மை பெற்றது. அம்முத்தை உண்டாக்கும் சுவாதி அன்று அவதரித்த முத்தாகிற ஆழ்வாரும் உள்ளும் உடலும் தூய்மை பெற்றவர். ஆழ்வாருக்கு இத்தன்மை வந்தமைக்குக்காரணம் சுவாதி நக்ஷத்திரத்தின் பெருமையேயாகும். கடலில் முத்துச் சிப்பியில் சுவாதி அன்று முத்துப் பிறக்கும். புதுவை என்று பெயரான ஸ்ரீவில்லிபுத்தூரில் வேயர் குலத்தில் சுவாதியில் அவதரித்த ஆழ்வாராகிய முத்து அவதரித்தது என்பர்.

மேலும் ஆனி சுவாதி நக்ஷத்திரத்தில் பெரியாழ்வாரும், ஆசார்யர்களில் வடக்குத் திருவீதிப் பிள்ளையும், வாதி கேசரி அழகியமணவாளச் சீயரும் அவதரித்து முப்புரியூட்டிய பெருமையுடையதாகும்.

வாழித்திருநாமம் வளரும்...

**எளிமை :**

நெருப்பிலே காய்ச்சி எடுக்கப்பட்ட இரும்பைப் போலே தன்னுடைய விடாயானது பக்தி பிறந்து பகவத் விஷயத்திலே ஊன்றியிருக்கச் செய்தது நெருப்பின் நடுவிலே மலர்ந்த மலரைப் போலே அடிமை கொள்ள வைத்தது என்று *''இரும்பனன்னுண்ட நீர்போல்''* ஆயிற்று என்கிறார் ஆழ்வார். அதாவது தன்னிடமிருந்த அஹங்கார மமகாரங்களாகிய நெருப்பு, *''அஹம் ஸர்வம் கரிஷ்யாமி''* என்று இளையபெருமாள் சொன்னது போலே வழுவில் லாத அடிமை செய்யப் பெற்றது. இதுவே இந்த ஆத்மா வுக்கு ஆபரணமாயிற்று என்கிறார். *''சேஷத்வமே ஆத்மா வுக்கு ஸ்வரூபம்''* (முமுக்ஷு.55) என்பது உலகாரியனின் திருவாக்கு அல்லவா! இதுவே "பகவத் தாஸ்யம்" என்பதாம். ஆதலால், தான் உய்ந்து போனதாகவும், முன்பு "அஸந்நேவ" (அஸத்து) என்றிருந்ததாகவும், தெரிவிக்கிறார். இங்கே *''அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன்''* (திருச் சந்த–64) என்னும் திருமழிசைப்பிரானின் திருவாக்கை நினைப்பது. எம்பெருமான், விமுகனாய் (பாராதவனாய்) இருந்த தன்னுடைய மனத்திலே கடலை மணலோடுப் பருகி வரும் மேகம் போலே புகுந்தானாம். அவனுக்கு வேறு புகலிடமில்லாது ஒன்றாய் நின்றானாம். இவ்வாறு *''கலக்கக் கலக்கப் பருகலாம்படி ஒரு நீரானான்; இதுவுமொரு நீர்மை இருந்தபடி என்?''* என்று ஆழ்வார் வியப்படைந்த நிலைமை யைப் பெரியவாச்சான்பிள்ளை வெளிப்படுத்துகிறார்.

**புகழுக்கு அப்பாற்பட்டவன் :**

*''மூவரில் முதல்வனாய''* என்னும் பாசுரத்தில் பிரமன், உருத்திரன், இந்திரன் ஆகிய மூவர்க்கும் காரணமானவன் என்று தெரிவிக்கிறார் ஆழ்வார். உலக நாயகனாயிருந்துத் திருக்குடந்தையில் பள்ளி கொண்டுள்ளான். தேனை விட மிக இனியவன். *''ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவான் ஏக ஏவ ஜநார்த்தந:''* (வி.பு.1.2.66) என்கிறபடியே பிரமனுக்கு வேதத்தைக் கொடுத்தான்; அவன்தன் மகனுக்கு ஓட்டைப் பிரித்துக் கொடுத்தான்; இந்திரனுக்கு *''மூவடி தாவென்ன கள்வனாயிருந்து''* (திருவாய். 3.8.9) உபகரித்தான்; *''க: புண்டரீக நயந: புருஷோத் தம: க:''* (ஸ்தோ.ர.12) என்னும்படி ஈஸ்வரனாயி ருப்பவன். அப்படிப்பட்டவனை *''இன்கவி பாடும் பரம கவிகளான முதலாழ்வார்களாலே புகழப்படுகிறவன் செவிக்கு மட்டுமல்லாது நாவுக்கும் இனியவன் ஆபர ணங்களைப்போல அணிந்து கொள்ளும்படியான பரம ஸுலபன்; நித்ய ஸூரிகள் தலையில் சூடும் பூவைப் போன்றவன். வெள்ளத்திலே மூழ்குவாரைப்போலே அவனைப் புகழும்போது அவனுடைய குண வெள்ளத் தில் மூழ்குவதைத் தவிர அவனைப் பாசுரமிட்டுப் புகழவொண்ணாது''* என்கிறார். மூவரில் *''முதல்வ னாய ஒருவனை''* என்பதற்கு *''ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம''* என்ற ச்ருதி வாக்கியத்தாலே "ஒருவனை" என்கிறார் காஞ்சி ஸ்வாமி.

**ஆச்ரித பரதந்த்ரன் :**

*''இம்மையை மறுமை தன்னை''* என்னும் பாசுரத்தில் திருமலையில் நின்று கொண்டு பரமபதத்தி லிருக்கும் நித்ய ஸூரிகளுக்கும்



# திருக்குறுந்தாண்டகத்தின் ஸாரம்

டாக்டர்.கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி,
திருப்பதி.

இவ்வுலகிலுள்ள நித்ய ஸம்ஸாரிகளுக்கும் வேறுபாடில்லாது ஒருபடிப்பட்டவனாயிருந்து அருளைத் தருமவன். அப்படிப்பட்ட எம்பெருமானின் ஆச்ரித பாரதந்த்ரியத்தை நினைப்பவர்களின் திருவடிகளும் அவனுடைய திருவடிகளும் தன்னுடைய சிரத்துக்குப் பொருந்துவன என்று சொல்லி ''தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேலாரே'' (பெரிய திரு. 7.4.1) என்ற ஆழ்வார் திருவுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் பெரியவாச்சான்பிள்ளை.

### வெறிதே அருள்செய்பவன் :

''...போகதசையில் ஈச்வரனழிக்கும்போது நோக்க வேணும் என்று அழியாதொழிகை'' (முமுக்ஷ.92) என்னும் உலகாரியனின் திருவாக்குக்கிணங்க இருப்பதே ஜீவாத்மாவின் நிலையாகும். சேஷத்வத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும். எம்பெருமானின் ஆநந்தமே வேண்டுவது என்றபடி. நிலையில்லாத தேஹ நினைவை ஸம்ஸாரிகள் விடாமல் அதைக் காப்பாற்றும் செயலை நினைந்து ஆழ்வார் வெறுக்கிறார். எம்பெருமான் வெறிதே அருள் செய்பவன் என்பதை உணராமல் மின்னலை விட நிலையற்ற தேஹத்துக்கு உறுதி வேண்டுகின்ற ஸம்ஸாரிகளைக் கண்டு ஆழ்வார் வியப்படைவதோடல்லாமல் வெறுப்புற்றும் பேசுகிறார்.

### அகார வாச்யன் :

''உள்ளமோ உருகி நில்லாது'' என்னும் பாசுரத்தில் ஆழ்வார் எம்பெருமானைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்கிறார். அதற்கு உதாரணமாக எம்பெருமானுடைய ஔதார்ய (வள்ளல்) குணத்தைத் தெரிவிக்கிறார். ''மாறி மாறிப் பலபிறப்பை'' (திருவாய் 2.6.8) எண்ணி இருபாலும் எரிகிற கொள்ளியினுள்ளே தவிக்கும் எறும்பு போலே தான் இருப்பதாகச் சொல்கிறார். மஹாபலியின் வள்ளல் தன்மைக்குக் குறைவு ஏதும் வாராமலும் இந்திரனுடைய வேண்டுதலுக்குக் குறைவு வாராமலும் தன்னுடைய நெடிய கையைத் தாழ விட்டுக் கொண்டு பூமியை அளந்து, பிரயோஜநாந்தரபரனான இந்திரனுக்கு வழங்கியதால் எம்பெருமானுடைய வடிவிலே ஒப்புமையில்லாத ஒரு ஒளி (தேஜஸ்) ஏற்பட்டதாக ஆழ்வார் உணர்கிறார். ஆழ்வாருக்கு அரங்கநாதனுடைய துணையை விட வேறில்லை என்கிறார். ''(குழையுமால்)-இவன் சைதன்யத்துக்கு ப்ரயோஜநம்; -இது பொல்லாது என்றறிகை; அவன் சைதன்யத்துக்கு ப்ரயோஜநம் -அப்படி செய்கை; அதாவது - ரக்ஷிக்கையிறே'' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் பேருரை. அதாவது ஆழ்வாருடைய உணர்வுக்குப் பயன் தான் (ஆழ்வார்) வேறு துணையைத் தேடாதிருப்பது; எம்பெருமானுக்குப் பயன் ரக்ஷிக்கை என்பதாகும். "அப்படி செய்கை" என்பதற்கு அகாரப்படியே செய்கை என்பது அரும்பத வுரை. இங்கே ''இதில் அகாரம் ஸகல சப்தத்துக்கும் காரணமாய், நாராயண பதத்துக்குக் காரணமாய் ஸர்வ ரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது'' (முமுக்ஷ.35) என்ற உலகாரியரின் திருவாக்கை நினைக்கத்தக்கது.

### பக்தி - பரமபக்தி :

''சித்தமும் செவ்வை நில்லாது'' என்னும் பாசுரத்தில் ஸம்ஸாரத்திற்கு அஞ்சி, எம்பெருமான் திருவடிகளில் பக்தி ஏற்பட்டு அதுவே பரம பக்தி ஆயிற்று என்கிறார் ஆழ்வார். தன்னுடைய பாவத்தால் அவனை நினைக்கப் புகுந்தால் தரித்து நிற்கிறதில்லையாம். பக்தியை உண்டாக்கிய அவனே அளவு படுத்தவேண்டும். அவனுடைய திருவடிகளில் கைங்கர்யமொழிய வேறொன்றும் அறியாராம். ஆழ்வார் அவனை மறந்ததாகவும் ''ஏது செய்தால் மறக்கேன்'' என்று சொல்லும்படிச் செய்தவனை வேறொன்றால் அறிய வரகுண்டோ என்று தனக்கு ஏற்பட்ட பக்தி, பரமபக்தியைத் தெரிவிக்கிறார் ஆழ்வார்.


### பரஞ்சோதி ஸ்வரூபம் :

''தொண்டெல்லாம் பரவி நின்னை'' என்னும் பாசுரத்தில் செய்யும் அடிமையைச் செவ்வனே செய்து ''அஹம் ஸர்வம் கரிஷ்யாமி'' என்று பிரார்த்தித்தாலும் மனக்கவலையால் அடிமை செய்யமுடியுமோ என்று எதிர்மறைப் பொருளால் வினவுகிறார். ''வருநரகம் (மனக்கவலை) தீர்க்கும் மருந்து'' (மூன்றாம் திருவ.3) என்கிற படியே அந்த மனக்கவலையைத் தீர்க்குமவனான எம்பெருமானே நிர்வாஹனாயிருந்து அருள்புரிய வேண்டும் என்கிறார். அவனே தனவான்; அவனே ''நாராயண பரோஜ்யோதி'' (புருஷ ஸூக்தம்) என்கிறபடியே பரஞ்சோதி ஸ்வரூபனான அவனையே முறையாகத் துதிப்பேன் என்கிறார் ஆழ்வார்.

**தொடரும்...**

- ⇨ ஸ்வாமி பிரசாதத்தை வீணாக்காதீர்.
- ⇨ ஸ்வாமி புஷ்கரணியில் ஷாம்பு, சோப்பு உபயோகப்படுத்த வேண்டாம்.
- ⇨ திருமலையில் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தாதீர்.
- ⇨ திறந்த வெளியில் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களை செய்யாதீர்.
- ⇨ க்யூ வரிசையில் மற்றவரை முந்திக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் செல்லாதீர்.

108 திவ்விய தேசவைபவம்



(38) (கீழச்சாலை)

# திருத்தேவனார் தொகை

உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

இந்திரன், துர்வாச முனிவரின் சாபத்தால், பதவி, செல்வம் எல்லாவற்றையும் இழந்தான். ப்ருஹஸ்பதியை வணங்கி, அவர் காட்டிய வழியில், பகவானைப் பணிந்து, பாற்கடல் கடைந்தபோது தோன்றிய மஹாலக்ஷ்மியை வழிபட்டு, பகவான், திருமகளைத் திருமணம் செய்து கொள்ளும் காட்சியைத் தேவர்களோடு கண்டு, பாக்யவானாக ஆகி, எல்லாச் செல்வத்தையும் திரும்பப் பெற்றான். இப்படித் தேவர்களால் வணங்கப்பட்ட எம்பெருமான் தேவனார்... தேவர்கள் தொகை... கூட்டம் கூட்டமாக வந்து விவாஹத்தைத் தரிசித்தார்கள். இக்ஷ்வாகு வம்ஸ குலகுரு, வசிஷ்டருக்கு, அருளப்பட்ட எம்பெருமான் இவர் என்றும் சொல்வர்.

| | |
|---|---|
| **பெருமாள்** | – தெய்வநாயகன் கிழக்கு நோக்கிய திருக்கோலம். |
| **உத்ஸவர்** | – மாதவன். |
| **தாயார்** | – கடல்மகள் நாச்சியார்/ உத்ஸவர் – மதுர நாயகி |
| **தீர்த்தம்** | – சோபன புஷ்கரணி, தேவகுண்ட புஷ்கரணி. |
| **விமானம்** | – சோபன விமானம். |
| **ப்ரத்யக்ஷம்** | – வசிஷ்டர், உதங்கர். |
| **ஆகமம்** | – பாஞ்சராத்ரம். |
| **மங்களாசாஸனம்** | – திருமங்கை ஆழ்வார் |

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**சிறப்புகள் :**

பாற்கடலிலிருந்து அவதரித்ததால், கடல்மகள் நாச்சியார். விமான நிழல் விமானத்திலேயே விழுவது சிறப்பு.

**த்யான சுலோகம்**

*ஸ்ரீமத் திவ்ய ஸபா ஸரஸ்தடபுவி ஸ்ரீதேவ ப்ருந்தே புரே*
*தேவோ தைவத நாயகஸ் ததபலா க்ஷீராப்தி ஜா சோபனை |*
*தீப்த்யா நிரஜித பாஸ்கரே து ரமணஸ் தத்வ்யோம யாநேஸ்தித:*
*சிஷ்டஸ்ரேஷ்ட வஸிஷ்ட வாஞ்சிதகர: ப்ரத்யங்கமுகோ பாஸதே||*

----

**பாசுரம்**

கும்பமிகு மதயானை பாகனொடும் குலைந்து விழ
கொம்பதனைப் பறித்து எறிந்த கூத்தன் அமர்ந்து உறையும் இடம்
வம்பு அவிழும் செண்பகத்தின் மணம் கமழும் நாங்கை தன்னுள்
செம்பொன் மதிள் பொழில் புடைசூழ் திருத்தேவனார் தொகையே

--------


ஆர்க்கும் வலம்புரியால் அண்டமும் எண்திசையும்
கார்க்கடலும், வெற்றும், கலங்கினவால் .... சேர்க்கும்

# வேங்கட மலையை வணங்கிடுவோம்!

திருப்பதி மலையில் வாழ்பவராம்!
தீரா வினைகளை தீர்ப்பவராம்!
கருணை மிகுந்த வேங்கடவா!
கடவுள் நீதான் எங்களுக்கே!
அருளை அள்ளி அளிக்கின்றாய்!
ஆனந்த வாழ்வை கொடுக்கின்றாய்!
திரும்பும் திசைகள் யாவினிலும்
திங்கள் ஒளியே நீயன்றோ!

பெருமை மிக்க திருமலையில்
பெருமாள் பெயரில் வீற்றிருப்பாய்!
விரும்பும் வரங்கள் அளித்திடவே
வேண்டி நின்றோம் உன்அருகில்!
கருவில் இருக்கும் குழந்தைகளை
கருத்தாய் நாளும் வளர்த்திடுவாய்!
உருவம் கொடுத்தே உணவளிப்பாய்!
உயிரை என்றும் காத்திடுவாய்!

வேண்டும் வரங்கள் நமக்களிக்கும்
வேங்கட மலையை வணங்கிடுவோம்!
மீண்டும் மீண்டும் வரத்தூண்டும்
மிகுந்த அழகிய மலையிதுவே!
தாண்டும் படிகள் ஏறிவந்தே
தரிசனம் செய்ய காத்திருக்கோம்!
காண்போர் வியக்கும் வேங்கடவா!
கருணை எமக்கு காட்டிடுவாய்!




திருத்தேவனார் தொகைமால், செவ்வாய் வைத்து ஊதத்
தகுத் தேவனார் தொகையும் சாய்ந்து
(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

**நாமாக்கள்**

331. ஓம் வரதாய நம:
(வரங்களை அளிப்பவனே)
ஓம் பத்மதராயை நம:
(தாமரை மலரைக் கரத்தில் வைத்திருப்பவளே)

332. ஓம் வாயுவாஹநாய நம:
(உலகங்களுக்கு உயிரான காற்றையும் நடத்துபவனே)
ஓம் பூஜ்யாயை நம:
(ஆராதிக்க எளிதாக இருப்பவளே)

333. ஓம் வாஸுதேவாய நம:
(விளையாட்டாகவே எல்லாவற்றையும் ரக்ஷிப்பவனே)
ஓம் த்ரைலோக்ய மோஹின்யை நம:
(மூவுலகையும் மயக்கமுறச் செய்பவளே)

334. ஓம் ப்ருஹத்பாநவே நம:
(எங்கும் பரந்த பேரொளி உள்ளவனே)
ஓம் நித்யகன்யாயை நம:
(எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருப்பவளே)

335. ஓம் ஆதிதேவாய நம:
(உலகங்கட்கு மூல காரணமானவனே)
ஓம் பிந்து மாலின்யை நம:
(ஜலத் திவலை போன்ற முத்துக்களால் ஆன மாலையை அணிந்திருப்பவளே)

336. ஓம் புரந்தராய நம:
(அசுரர்களின் பட்டணங்களைப் பிளப்பவனே)
ஓம் அக்ஷயாயை நம:
(அழியாத ஸ்வபாவத்தை உடையவளே)

337. ஓம் அசோகாய நம:
(துன்பங்களைத் துடைப்பவனே)
ஓம் ஸர்வ மாத்ருகாயை நம:
(எல்லாருக்கும், எல்லா நல்ல விஷயங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பவளே)

338. ஓம் தாரணாய நம:
(ஸம்ஸார பயங்களை தாண்டுவிப்பவனே)
ஓம் கந்தாத்மிகாயை நம:
(நறுமணமே உருக்கொண்டதுபோல் இருப்பவளே)

339. ஓம் தாராய நம:
(ஸம்ஸாரக் கடலை கடக்கச் செய்பவனே)
ஓம் ஸுரஸிகாயை நம:
(நல்லவைகளைக் கொண்டே இன்புறுபவளே)

340. ஓம் ஸுராய நம:
(பராக்ரமசாலியே)
ஓம் தீப்தமூர்த்யை நம:
(ஒளி குன்றாத திருமேனி உடையவளே)

ஸ்ரீமதேஸ முத்ரதனயா நாயிகா ஸமேத
ஸ்ரீதேவநாயக பரப்ரஹ்மணே நம:
திவ்ய தேச வைபவம் வளரும்...




# தவத்தினால் அனைத்து வெற்றிகளும் சாத்தியமே

வாகனத்தை ஓட்ட வேண்டுமெனில் எரிபொருள் இருத்தல் வேண்டும், வாகனத்தின் இயந்திரம் வேலை செய்ய வேண்டுமெனில் பேட்டரி இருத்தல் வேண்டும். மனிதன் ஓட வேண்டுமெனில் அவனிடத்தில் சக்தி இருத்தல் வேண்டும். அது போன்றே வெற்றி பெற வேண்டுமெனில் தவம் இருத்தல் வேண்டும். கடினமான செயல்களை சாதிக்க வேண்டுமென்றாலும், சாதாரண மானவற்றை சாதிக்க வேண்டுமென்றாலும் தவம் அவசியமாகின்றது. தவம் என்றால் என்ன? வாழ்க்கையில் தவம் முதன்மையானது என்பதனை அறியாமலேயே மானிடர் தங்களுக்கு கிடைக்கக்கூடிய பொன்னான வாய்ப்புகளை தவற விடுகின்றனர். உடலால் செய்யப்படுவதே தவம். தவத்தின் வாயிலாக உடல் செயல்பாடுகளில் பொறுமை ஏற்படுகிறது. தவத்தினால் சக்தியும் அதிகரிக்கின்றது. இறைவனின் தரிசனத்தைப் பெறுவதற்காக பக்த துருவன் ஆறு மாதகாலம் கடினமான தவம் புரிந்தான் என்று பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் மாணக்கர்கள் கூட ஐ.ஐ.டி.யில் இடம் கிடைக்க வேண்டும் என்றால் தவம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இவையாவும் அவர்களுக்கு தவமென்று தெரிவதில்லை. கடினமாக உழைக்கின்றேன் என எண்ணுகின்றனரே தவிர தவத்தில் உள்ளோம், அதற்கான பலன் நமக்கு கிடைக்கும் என்கின்ற தைரியம் அவர்களுக்கு உண்டாவதில்லை.

தவத்திற்கான எதிர் சொல் போகம், எவனொருவன் போகத்திற்கு உட்படுகின்றானோ அல்லது பொழுது போக்கிலேயே காலத்தை கழிக்கின்றானோ அவனில் உள்ள சக்தி குறைந்து கொண்டே இருக்கும். அதுவே தவத்தில் இருப்போரின் சக்தி அதிகரித்துக் கொண்டே இருக்கும். வெற்றிப் பெறுவதற்கு தவம் அவசியமாகிறது. உண்மையில் தவம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆதலால்தான் வெற்றி பெற வேண்டும் என்று எண்ணும் மாணாக்கர்கள் பகவத்கீதையில் கூறப்பட்ட தவம் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். அதனை கடைபிடித்தல் வேண்டும்; சக்தியை பெறுதல் வேண்டும். அதன் மூலம் வெற்றியை அடைய முடியும்.

தவம் மூன்று வகைப்படும் என பகவத் கீதை (17வது அத்யாயம், 14,15,16 சுலோகங்கள்) தெரிவிக்கின்றது. மாணக்கர்களும் இளைஞர்களும் இதனை கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

“இறைவன், அந்தணர்கள், பெற்றோர், பெரியோர்கள்–இவர்களைப் பூஜித்தல், தூய்மை, நேர்மை, பிரம்மச்சரியம், அகிம்சை இவையாவும் உடலால் செய்யக்கூடிய தவம்” என்று சொல்லப்படுகிறது.

“பிறர் மனதைப் புன்படுத்தாமல், இனிமையும், நலனும் அளிக்கக்கூடியதாகவும், உண்மையாகவும் இருக்குமோ, அந்தப்பேச்சும், தினமும் வேத சாஸ்திரங்களை ஓதுதலும், பகவானுடைய நாம சங்கீர்த்தனமும் வாக்கினால் செய்யக் கூடிய தவம்” என்று கூறப்படுகிறது.

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.



"மனமகிழ்ச்சி, அமைதியான இயல்பு, இறைவனை இடைவிடாது நினைக்கும் இயல்பு, மன அடக்கம், உள்ளத்தூய்மை இவையெல்லாம் மனத்தால் ஆற்றக் கூடிய தவம்" ஆகும்.

இவ்விதமாக பகவத்கீதையில் அனைவருக்கும் மூன்று விதமான தவங்கள் சொல்லப்பட்டன. அவை உடலளவிலும், வாக்களவிலும், மனதளவிலும் உள்ளன. பெரியோரை கௌரவித்தலையும், வணங்குதலையும் இன்றைய காலத்தில் அனைவரும் முழுமையாக மறந்து விட்டனர். ஆதலால்தான் அவர்களுக்கு உன்னதமான வரங்கள் பெரியோர்களிடமிருந்து கிடைப்பதில்லை. பெரியோர்களை கௌரவிப்பதும், வணங்குதலும் என்பது அற்புதமான சக்தியை அளிக்க வல்லது.

பிறகு வாக்கின்படி கட்டுப்பட்டு நடப்பதும் பெரிய தவமேயாகும். சாதாரணமாக அனைவரிடமிருந்து அபசகுணமான வார்த்தைகளே வரும். "இந்த பணி செய்ய முடியவே முடியாது", "இந்த நேர்க்கானல் மிகவும் கடினமானது", "ஐ.ஐ.டி.யில் இடம் கிடைக்காது" என்று எதிர்மறையானவற்றையே கேட்டு அவ்விதமாகவே பலனும் பெறுகின்றனர். ஆனால் பேசுபவை அன்பானவையாகவும், நல்லவையாகவும் இருத்தல் வேண்டும். ஆன்மீக நூல்கள் படித்தல் கூட வாக்கிய தவமாகவே கூறப்படுகிறது. எவருடைய மனதையும் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது. இதுவும் வாக்கிய தவமேயாகும்.

இன்றைய காலக்கட்டத்தில் தவம் மிகவும் அவசியமானதாகும். மனதினை குழப்பக்கூடிய தேவையற்ற ஆலோசனைகளை செய்தல் கூடாது. தேவையற்றவற்றை குறித்து எவ்வளவு அதிகமாக பேசுகிறோமோ அவ்வளவு அதிகமாக மனதில் குழப்பம் உண்டாகும். "எனக்கு வெற்றி உண்டாக வேண்டும், வெற்றி எனதே" என்று அடிக்கடி கூறுவதன் வாயிலாக மன அழுத்தம் குறைகின்றது. பகவத் கீதையின் மூலமாக அனைத்து வெற்றிகளையும் பெறுவோம் என்று கூறி கொண்டே இருந்தால் மானசீக குழப்பம் ஓடி விடும். ஆதலால் மாணக்கர்களும், இளைஞர்களும் இம்மூன்று தவங்களை மிக முக்கியமாக செய்தல் வேண்டும். இம்மூன்று தவங்களை செய்து, சிறந்த லட்சயங்களை ஏற்படுத்திக் கொண்டால் அவர்கள் இலட்சயங்களில் நிச்சயமாக வெற்றி பெறுவர். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. லட்சயங்களை ஏற்படுத்திக் கொண்டு தவத்தில் நிற்போருக்கு வெற்றியானது நிச்சயமாக கிடைக்கும். அனைத்து வெற்றிக்கான ரகசியமும் இதுவே.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 35க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | கா | ட் | க | ரை | | கை | ங் | 2 க | 20 தி |
| லி | | ர் | ய | ரா | வ | தே | ண | ஷ் | ரு | 3 கி | ரு |
| ப | 4 ம | ங் | க | ளா | னி | ப | வ | ந் | து | | ப் |
| கா | 5 ப | க | வ | த் | கீ | தை | ம் | ர | க | ஷ் | 6 பு |
| 7 ம | | | | ள் | க | ர் | ர | சு | 8 அ | | ளி |
| ம் | ர | தி | த் | உ | னி | கு | ங் | 9 ப | ஞ் | ன் | ய |
| | | 10 சு | க் | ர | ன் | ர | தி | ந் | 11 ச | ண | ங் |
| 12 வ | ர | ல | ட் | சு | மி | வி | ர | த | ம் | ர | கு |
| | 13 மா | த | வ | ன் | ப | நா | ம | த் | 14 ப | ப | டி |
| | ம் | வ | ட | ண் | தா | மி | சு | ட் | 15 ல | ளா | |
| | 16 ச | வு | ந் | த | ர் | ய | பு | ர | ம் | கு | |
| 17 தி | ரு | க் | கோ | வி | லூ | ர் | | 18 வே | க | 19 வ | தி |



# ஆடிக் கிருத்திகை

திரு.வி.சீதாராமன், சென்னை

பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் கலியுகத்தில் வழிபட வேண்டிய தெய்வம் "முருகனே" என்பது புலமை மிகுந்த பல அறிஞர் பெருமக்களால் சுட்டிக் காட்டப்பட்ட உண்மையாகும். சூரபத்மன் போன்ற கொடிய அரக்கர் கூட்டத்தை சம்ஹாரம் செய்து, பக்தர்களின் உள்ளம் கவர்ந்து காத்து நிற்கும் அருட்பிரவாகம் கொண்ட அவதாரமே... "சுப்ரமணிய ஸ்வாமியின் தோற்றம்".

தேவர்கள் அனைவரும் சூரபத்மனின் கொடுமைகளை தாங்கவொண்ணாமல் சிவபெருமானிடம் சென்று ஈசனே ஒரு குமாரனாக தோன்ற வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர் என்று சுட்டிக்காட்டுகின்றது பழங்கால தமிழ்ச்செய்யுள் ஒன்று...

"ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பமுமின்றி
வேதம் கடந்துநின்ற விமல...! ஓர் குமரன் தன்னை
நீ தரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க"

முழுமுதற் கடவுளின் இலக்கணங்களையெல்லாம் நுணுக்கமாக எடுத்துரைத்து, "ஆதியந்தமற்ற" குமாரனை நின்பால் நீயே தர வேண்டும் என்று இறைஞ்சுகின்றனர். சிவபெருமானே மாற்றுருப்பெற்ற ஒரு சக்தியாக "ஒரு குமரனாய்" தோன்ற வேண்டும் என்ற ஒரு கருத்து நிலவியதாக தெரிகின்றது. தத்துவங்கள் எப்படி இருந்த போதிலும், தெளிவான வலுவான புராணங்களின் ஆதாரம் தரும் செய்தி இதுவே...! சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு பொறிகள் தோன்றி, சரவணப் பொய்கையில் இருந்த மலர்க்குவியலில் ஆறு குழந்தைகளாக உருப்பெற்றன. கார்த்திகைப் பெண்கள் அறுவர் ஆறு குழந்தைகளையும் எடுத்து சீராட்டி பாலூட்டி வளர்த்தனர். அந்த ஆறு குழந்தைகளும் இணைந்து ஒரு உடல், ஆறு முகங்கள், பன்னிரு கைகளுடன் தோன்றிய மூர்த்தியே ஆறுமுகம் எனப்படும் அழகிய முருகனாகியது. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் சர்வேஸ்வரனால் கார்த்திகேயன் என்ற திருநாமம் கொண்டு அழைக்கப்பட்டதாக ஸ்காந்தம் (கந்த புராணம்) கூறுகிறது.

முருகன் ஜனித்த திருநாள் வைகாசி விசாகமே... ஆனால் ஆடிக்கிருத்திகை, எவ்வாறு தனித்துவமும் பெருமையும் கொள்கிறது? ஆடிக்கிருத்திகை, கார்த்திகை மாதம் பெரிய கார்த்திகை, தை மாதம் வரும் தைக் கிருத்திகை இந்த மூன்று நாட்களும் முருகன் வழிபாட்டில் குறிப்பான சிறப்பு கொள்கின்றன? இந்த மூன்றில் ஆடிக் கிருத்திகை அதிவிசேஷமான கோலாகலமான கொண்டாட்டங்களுடன் அனைத்து முருகன் ஆலயங்களிலும் பெருந்திருவிழாவாக உருப்பெறுகிறது. அதன் பின்னணியை அலசுவோம்!

மழைக்காலத் தொடக்கமான தக்ஷிணாயணம் பொதுவாக அனைத்து இறைவழிபாடுகளுக்கும் ஏற்றதாகவும், உத்தராயணம் திருமணம், உபநயனம், கிரஹப்பிரவேசம் போன்ற முக்கிய நிகழ்வுகளுக்கு ஏற்றதாகவும் சொல்லப்படுகிறது. ஆடி மாதத்தில் இருந்து வரிசையாக அனைத்துக் கடவுளரையும் வேண்டிச் செய்யும் பண்டிகைகளும், விரதங்களும் வருகின்றன. அதன் காரணமாகவே, தேவர்களின் மாலைக்காலம் என்று சொல்லப்படும் இந்த மாதத்தில் வழிபாடுகள் நடத்தப்படுகிறது.

ஆடி மாதம் என்பது தக்ஷிணாயணம் துவங்கும் மாதம். ஜ்யோதிஷ சாஸ்திரப்படி சந்திரனுடைய வீடான

கடக ராசியில் சூரியன் பிரவேசிக்கும் மாதம். ஆடி மாதம் என்பது அம்பாளுக்கும் ஆண்டாளுக்கும் உரிய மாதம் என்பது பிரசித்தம். சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சம்ஹாரம் என்பது ஒரு பிரபலமான வழக்கில் உள்ள பெருமையான சொற்றொடர். சூரபத்மனை சம்ஹாரம் செய்ய, ஆடிக்கிருத்திகை அன்றுதான் அம்பாள் தனது முழு சக்தியையும் ஒன்று திரட்டி வேலினை படைத்தார் என்றும், செந்தூரில் சூரபத்மனை சம்ஹாரம் செய்ய அந்த வேல் தான் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டியன்று திருச்செந்தூரில் சூர சம்ஹா ரத்திற்கு முன் – சிக்கலில் வேல் வாங்கும் திருவிழாவாக உருப்பெற்றது என்றும், வாரியார் ஸ்வாமிகள் சுவை யான தகவலை தனது அருளுரைகளில் கூறி அகமகிழ் வார். கூர்ந்து அகன்று ஆழ்ந்து உருவம் கொள்ளும் “வேல்” சக்தியின் (அம்பாளின்) ஸ்வரூபமே என்பது பல சித்தர்களின் வாக்காகும். அருணகிரியாரின் விளக்கம் சற்று வித்தியாசமாக உள்ளது. பழங்கால தமிழ் இலக்கியங்கள் தரும் சான்றுகளின்படி – ஷண்மத வழி பாடு என்பது ஆறு விதமான இறைசக்திகளை ஒருங்கே வைத்து நடத்தப்படும் வீர்யம் கொண்ட மந்திர பிரயோக வழிபாடாகும். கணபதியை வழிபடுதல் காணாபத்யம் என்றும், சிவனை வழிபடுதல் சைவம் என்றும், விஷ்ணுவை வழிபடுதல் வைணவம் என்றும், சக்தி உருவமாக அம்பாளை வழிபடுதல் சாக்தம் என்றும், சூரியனை வழிபடுதல் சௌரம் என்றும், முருகனை வழிபடுதல் கௌமாரம் என்றும் அழைக்கப்படும். இந்த ஆறு சக்திகளும் ஒருங்கே ஆறு கார்த்திகைப் பெண்க ளாக உருக்கொண்டு “முருகனை” எடுத்து வளர்த்ததாக ஒரு கருத்தும் நிலவுகிறது.

ஆகவே காலாகாலமாக பக்த கோடிகள், “ஆடிக் கிருத்திகையில் விரதத்தினை தொடங்கி ஒவ்வொரு மாதம் வரும் கிருத்திகையில் கிரமமாக விரதத்தினை அனுஷ்டித்து, கார்த்திகை மாதம் வரும் திருக்கார்த்திகை மற்றும் உத்தராயணம் தொடங்கும் தை கார்த்திகையில் விசேஷமான வழிபாடுகளுடன் விரதத்தினை முடிப்பர்... இது குடும்பங்களில் பரம்பரையாக கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயம். ஆடிக்கிருத்திகை அன்று அதிகாலையில் எழுந்து, நீரில் சிறிது மஞ்சள் பொடி கலந்து, தூய நீராடி, ஆதவனை தொழுது விரதத்தினை துவங்குவார்கள். அன்று முழுதும் உண்ணாமல் உறங்காமல் ஒரே



# பூரிஜெகன்நாதரின் ரதயாத்திரை வைபவம்

உலகப்புகழ் பெற்ற பூரி ஜெகன்நாதர் திருக்கோயில் நம் நாட்டின் கிழக்கு கடற்கரையில் ஒரிசா மாநிலம், பூரி நகரத்தில் அமைந்துள்ளது. இது மிகப்பெரிய வைணவ திருக்கோயில். இக்கோயில் ஒரு சிறிய குன்றின் மீது அமைந்துள்ளது. 22 படிகள் ஏறி எம்பெருமானை தரிசனம் செய்ய வேண்டும். இவ்வாலயத்தில் பல சிறிய சந்நிதிகளும் உள்ளன. இங்கு ஜெகன்நாதர், பாலபத்ரர், சுபத்திரை மூலமூர்த்திகளாகவும், அவர்களுடைய திருமேனி மரத்தினால் ஆனதாகவும் திகழ்கிறது. இக்கோயிலில் பலவிதமான பிரசாதங்கள் செய்தாலும் அவற்றினை மண்பாண்டத்தில்தான் எம்பெருமானுக்கு நிவேதனம் செய்வார்கள். இங்கு தேரோட்டத்திருவிழா ஆஷாட(ஆடி) மாதத்தில் ஒன்பது நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும் ஓர் நிகழ்வாகும். எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணருக்கும், அவருடைய அண்ணன் பலராமருக்கும், தங்கை சுபத்திரைக்கும் தனித்தனியாக ஒவ்வொரு வருடமும் புதிதாக ரதம் தயாரித்து, அழகு வண்ணங்கள் பூசி எம்பெருமானை குண்டிசா ஆலயத் திற்கு அழைத்து செல்வார்கள். ஆண்டு தோறும் புதிய திருத்தேர்கள் அமைத்து நடைபெறும் இத்தேரோட்ட விழாவை காண பலவிடங்களிலிருந்தும் பக்தர்கள் திரண்டு வருவார்கள். இவ்வாறு தேர் திருவிழா கொண்டாடும் உலகிற்கு நாயகனாக விளங்கும் ஜெகன்நாதரின் அருளை பெற்று நாமும் வளமாக வாழ்வோமாக.



சிந்தனையுடன் முருகப் பெருமானின் துதிகளை மட்டுமே ஓதி, குடும்பத்தின் வழக்கத்திற்கேற்ப சம்பிரதாயமான வழிபாட்டினை நடத்த வேண்டும். ஆறு நெய் தீபங்களை ஏற்றி, "சரவணபவ" எனப்படும் "யந்திரத்தை" அரிசி மாக்கோலமாக வரைந்து, அதன் மேல் "வேல்" ஒன்றினை பிரதானமாக அலங்கரித்து, 108 மலர் வழிபாடு செய்து, பானகம், நீர்மோர், பஞ்சாமிர்தம் படைத்து அடியார்களுக்கு விநியோகம் செய்து மாலையில் கந்தபுராணம் பாராயணம் நடத்தி விரதத்தை முடிப்பது வழக்கமாக இருந்துள்ளது. ஆடிக்கிருத்திகை விரதம் அனுஷ்டிக்கும் நாளன்று சுத்தமாக உப்பில்லாத உணவினை சாப்பிடுவதும் – முருகனுக்கு செய்யப்படும் நைவேத்தியங்களில் கூட உப்பில்லாத வகையிலேயே படையல்கள் இருப்பதும் வழக்கமாக இருந்துள்ளது. நாளடைவில் நாகரீகம் பெருக, நகர்ப்புற வளர்ச்சிகள் பெருக, வழிபாட்டு முறைகளும் படையல்களும் மாற்றம் கொண்டு விட்டன.

ஆனால் ஆலயங்களில் ஆடிக்கிருத்திகை வழிபாட்டில் மக்கள் கூடி கோலாகலமாக முருகனை கொண்டாடுவது விசேஷமான அம்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன. காவடி எடுத்தல் என்ற நேர்த்திக்கடன் பிரதானமான இடத்தினை பெறுகிறது. காவடி எடுக்கும் பிரார்த்தனை மிகப் பழங்காலத்தில் பழனி மலையிலேயே துவங்கியதாக அறியப்படுகிறது. இடும்பன் என்ற அரக்கன், பழனி மலையினையும், இடும்ப மலையினையும் ஒரு பெரும் தராசின் இருபக்கங்களிலும் சுமந்து கொண்டு வைத்ததால் அதனையே நேர்த்திக்கடனாக "காவடி எடுக்கும்" சம்பிரதாயமாக இன்று வரை கொண்டாடி வருகின்றனர். இந்த நேர்த்திக் கடன் ஆடிக்கிருத்திகை அன்றுதான் சிறப்பு மிக்க வகையில் உருபெறுகிறது. ஆறுபடைவீடுகளில் "திருத்தணிகை" என்பது... முருகன் சினம் தணிந்து போர் முடித்து அமர்ந்த க்ஷேத்ரம். திருத்தணிகை மலையில் ஆலயத்தில் ஆடிக்கிருத்திகை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி, சர்ப்பக்காவடி என வண்ண வண்ணமான காவடிகள் அமைக்கப்பட்டு மலையேறும் அழகினை காண கொடுப்பினை வேண்டும்.

அழகன் முருகனின் அருளைப் பெற துவங்குவோம் ஆடி கிருத்திகை நோன்பு!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## 2019, ஆகஸ்ட் மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1 | சக்ரத்தாழ்வார் திருநட்சத்திரம், ஸ்ரீபிரதிவாதி பயங்கர அண்ணன் திருநட்சத்திரம் |
| 3 | ஆண்டாள் திருவாடிப்பூரம் |
| 5 | கருட பஞ்சமி |
| 5-7 | வால்மீகிபுரம் ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி பட்டாபிஷேகம் |
| 6 | கல்கி ஜெயந்தி |
| 9 | வரலஷ்மி விரதம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதியில் வரலக்ஷ்மி விரதம் |
| 10-13 | திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 12-14 | கார்வேடிநகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 13 | ஆளவந்தார் திருநட்சத்திரம் |
| 15 | ஸ்ரீவிகனச ஜயந்தி, ஸ்ரீஹயக்ரீவர் ஜயந்தி |
| 21-23 | தாள்ளபாக்க ஸ்ரீகாமாக்ஷி தேவி சமேத ஸ்ரீசித்தேஸ் வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |
| 23 | கோகுலாஷ்டமி |
| 25-28 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பவித்ரோத்ஸவம் |




| | |
|---|---|
| தெலுங்கு மூலம் | : டாக்டர். சி. மதுசூதன சர்மா. |
| | : 90007 61390. |
| தமிழாக்கம் | : திருமதி. வி. உஷா. |

*"தர்மார்த்த காம மோக்ஷாணாம் ஆரோக்யம் மூலமுத்தமம்"* என்ற வாக்கின்படி தர்ம, அர்த்த, காம, மோக்ஷ சாதனைகளுக்கு மிகவும் முக்கியமானது ஆரோக்கியம். ஆரோக்கியத்தை நாம் சீராக வைத்துக் கொள்ள உணவே மூலாதாரமாக விளங்குகிறது.

சீரகத்தை சமஸ்க்ருதத்தில் ஜீரக என்றும், ஆங்கிலத்தில் Cumin Seeds என்றும், தெலுங்கில் ஜிலகர என்றும் அழைக்கின்றனர்.

ஏபியேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இந்த சீரகத்தின் அறிவியல் பெயர் Cuminum Cyminum ஆகும். சீரகப் பொடியை மருந்தாக உபயோகிக்கும் போது சீரகத்தை நன்கு வறுத்து பொடி செய்து உபயோகிக்க வேண்டும்.

## ஜீரண மண்டல உபாதைகள் சீர் செய்ய :

சீரகப்பொடி 50 கிராம், கொத்தமல்லி 500 கிராம் இவற்றை நன்கு வறுத்து 25 கிராம் உப்புடன் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் கைப்பிடியளவு உணவு உண்ணும் முன்னர் சாதத்துடன் ஒரு டீஸ்பூன் கலந்து சாப்பிட்டால் செரிமான உபாதைகள் நீங்கும்.

## முகம் அழகிற்கு :

சீரகப்பொடி மற்றும் மஞ்சள் பொடியை 25 கிராம் வீதம் கலந்து கொண்டு நாள்தோறும் ஒரு வேளை 2 டீஸ்பூன் பொடியை நீரில் குழைத்து முகத்திற்கு பூசி வந்தால் முகப்பரு, கறுப்பு மச்சங்கள், கட்டிகள் அனைத்தும் குறைந்து முகம் பொலிவடையும்.

## தேள் மற்றும் பூழுக்கடிக்கு :

சீரகம், உப்பு, தேன், நெய் ஆகியவற்றை சம அளவு கலந்து மிருதுவாக அரைத்து தேள் மற்றும் புழுக்கடியின் மேல் தடவி விட்டால் வலி, எரிச்சல் போன்றவை குறையும்.

## இரத்தக் குறைவால் ஏற்படும் உபாதைகளுக்கு :

சீரகப்பொடி, வெல்லப்பொடி ஒவ்வொன்றையும் 100 கிராம் வீதம் எடுத்து, மிருதுவாக அரைத்து வைத்துக் கொண்டு நாள்தோறும் 3 வேளை சிறு சுண்டைக்காய் அளவு விழுங்க வேண்டும். இவ்வாறு உட்கொள்வதால் இரத்தக் குறைவினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் நீங்கும்.

## பற்பொடியாக :

சீரகப்பொடி, கரக்காய்பொடி, உப்பு ஆகியவற்றை 30 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு, நாள் தோறும் 2 முறை பல் துலக்கினால் பல்வலி, ஈறுகளில் கசியும் இரத்தம், ஈறுகள் வலி போன்றவை குறையும்.

**மூலவியாதி :**

10 கிராம் சீரகப்பொடி, 20 கிராம் கற்கண்டு பொடி, 30 கிராம் உப்பு ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு காலை மற்றும் இரவு உணவு உட்கொள்வதற்கு அரை மணி நேரம் முன் 100 மி.லி. நீரில், 2 அல்லது 3 கிராம் பொடியை சேர்த்து நாள்தோறும் குடிக்க வேண்டும்.

**வாயு தொல்லைக்கு :**

சீரகப்பொடி, நெல்லிக்காய் பொடி காய்ந்த ரோஜா இதழ்களின் பொடி, உப்பு ஆகியவற்றை ஒவ்வொன்றையும் 50 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு உணவு உட்கொண்ட பின் அரைடீஸ்பூன் பொடியை 100 மி.லி. தண்ணீரில் கலந்து குடித்து வந்தால் வயிற்று உப்பசம், நெஞ்சு எரிச்சல் ஆகியவை நீங்கும்.

**இருமல் குறைய :**

சீரகப் பொடி 10 கிராம், உப்பு பொடி கால் டீ ஸ்பூன், மிளகுப்பொடி கால் டீஸ்பூன் ஆகியவற்றை கலந்து வைத்துக்கொண்டு இருவேளை சிறு உருண்டைகள் வீதம் உட்கொண்டால் இருமல் குறையும்.

**தாய்ப்பால் அதிகரிக்க :**

வறுக்காத சீரகப்பொடி 50 கிராம், வறுத்த சீரகப் பொடி 50 கிராம், கற்கண்டு பொடி 200 கிராம் எடுத்துக் கொண்டு தினமும் இருவேளை 100 மி.லி. நீர் அல்லது பாலில் 2–3 கிராம் பொடியை கலந்து குடித்தால் தாய்ப்பால் அதிகரிக்கும். இதனை நெய்யுடன் கலந்து உண்டால் உடலின் வெப்பம் தணியும்.

**உடல் எடை குறைய :**

நாள்தோறும் 200 மி.லி. நீரில் 5 கிராம் சீரகத்தை சிறிது நேரம் ஊற வைத்து அதனை சூடுபடுத்தி, ஆறிய பின் வடிகட்டி ஒரு டீஸ்பூன் தேன், எலுமிச்சை சாறு கலந்து குடித்து வந்தால் உடல் எடை குறையும்.

**பித்த வாந்தியை தடுக்க :**

கால் கிலோ சீரகத்தை சுத்தம் செய்து நன்கு வறுத்து ஆறியபின் ஒரு பாத்திரத்தில் போட்டு அது மூழ்கும் வரை எலுமிச்சை பழ இரசத்தை விட்டு நன்கு கலந்து காய வைக்க வேண்டும்.

இவ்வாறு ஏழு முறை எலுமிச்சை இரசத்தை கலந்து காய வைத்து பொடி செய்து கொள்ள வேண்டும். இவை ஆயுர்வேத கடைகளிலும் கிடைக்கின்றன. இப்பொடியை காலை, மாலை வேளைகளில் 1 அல்லது 2 கிராம் வீதம் 50 மி.லி. நீரில் கலந்து குடித்து வந்தால் பித்த வாந்தி குறையும். அதுமட்டுமின்றி தலை சுற்றல், வாந்தி, வாயில் நீர் ஊறுதல் போன்றவை குறையும்.

**இரத்தத்தை சுத்திகரிக்க :**

சீரகப்பொடி, கற்கண்டு பொடி, ஆயுர்வேத மருந்துக் கடைகளில் விற்கப்படும் அதிமதுரப்பொடி ஆகியவற்றை 50 கிராம் வீதம் கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் 2 முறை 100 மி.லி. நீரில் அல்லது பாலில் அரை டீஸ்பூன் பொடியை போட்டு கலந்து குடிக்க வேண்டும்.

சரும வியாதிகள், வயிற்றில் எரிச்சல், வாய்ப்புண், அதிக சூடு போன்றவையும் குறையும். அவை மட்டுமன்றி சக்தி வாய்ந்த நவீனமாக தயாரிக்கப்படும் மருந்துகள் உட்கொள்வதால் ஏற்படக்கூடிய ஜீரண மண்டல பக்க விளைவுகளும் குணமாகும்.

**மாதவிடாயின் போது ஏற்படக்கூடிய வலிகளுக்கு :**

நெய்யில் வறுத்த சீரகப்பொடி 100 கிராம், உப்பு 50 கிராம் கலந்து காலை மாலை வேளை 2,3 கிராம் பொடியை 100 மி.லி. நீரில் உட்கொள்ள வேண்டும்.

**கர்ப்பிணிப்பெண்களின் ஆரோக்கியத்திற்காக :**

கர்ப்பிணிப் பெண்கள் நாள்தோறும் ஒரு முறை 200 மி.லி. நீரில் ஒரு டீஸ்பூன் சீரகத்தை போட்டு 100 மி.லி. நீர் ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து, ஆறிய பின் வடிகட்டி அதனுடன் 1 அல்லது 2 டீஸ்பூன் தேன் கலந்து குடித்தால் ஆரோக்கியமாக இருப்பர்.

வயிற்றில் உள்ள குழந்தையின் வளர்ச்சிக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது சுக பிரசவம் உண்டாகும்.

**வாய்ப்புண் :**

சீரகம், கற்கண்டு பொடியை சம அளவில் எடுத்துக் கொண்டு காலை மாலை இரு வேளைகளில் 1 அல்லது 2 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து குடித்தால் வாய்ப்புண் குணமாகும்.

ஜீரகாத்யரிஷ்ட, ஜீரகபில்வாதி லேஹியம், ஹிங்காவாஷ்டக பொடி முதலிய மருந்துகள் தயாரிப்பில் இந்த சீரகத்தை உபயோகிக்கின்றனர்.

ஆயுர்வேதம் வளரும்...



# 2019
# ஜூலை மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் | | ராகு சந்திரன் சுக்ரன் சூரியன் |
| (நெப்ட்யூன்) | ஜூலை-2019<br>07- புதன் -வ.ஆ.<br>16- சூரியன் -கடகம்<br>23- சுக்ரன் -கடகம்<br>30- புதன்(வ) -மிதுனம் | | புதன் செவ்வாய் |
| | | | |
| (ப்ளூட்டோ) கேது (சனி) | (குரு) | | |

**மேஷம்**

ராசி நாயகன் செவ்வாய் கடகத்தில் உலவிட அவரை வியாழன் நோக்குகிறார். ஆரோக்கிய பாதிப்புகள் அகலும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பெண்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். மாத இறுதியில் பொருளாதார நிலையில் விசேஷமான வளர்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்**

சுக்ரன் இரண்டில் உலவிடுவது சிறப்பாகும். உங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள், வாசனை திரவியங்கள் சேர்க்கையைப் பெறுவீர்கள். பெண்களுக்கு உற்சாகமான போக்கும், கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் சுபிட்சமும் காண்பார்கள்.

**மிதுனம்**

தன–குடும்ப ஸ்தானம் குருவின் பார்வையைப் பெறுகிறது. அரசு சம்பந்த காரியங்கள் இப்போது நிறைவேறும். முக்கியஸ்தர்கள் உங்களுக்கு உதவுவார்கள். இயந்திரப் பணிகள் லாபம் தரும். உடன்பிறப்புகள் பக்கபலமாக இருப்பார்கள். சொத்துக்களால் வருமானம் கிடைக்கும்.

**கடகம்**

உடல் நலம் சற்று பாதிக்கப்படலாம். சொத்துக்கள் சம்பந்தமான காரியங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. புதியவர்களை நம்பி எதிலும் ஈடுபடக் கூடாது. வெளிநாட்டுத் தொடர்புடன் தொழில் புரிபவர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**சிம்மம்**

வீடு மாற்றம், இடமாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள். லாபஸ்தானத்தில் உலவிடும் சுக்ர பலத்தால் உடன்பிறப்பு வழியில் சுப காரிய நிகழ்ச்சி நடைபெறும். மாற்றினத்தவரின் ஒத்துழைப்போடு நீங்கள் எடுக்கும் கூட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். தன வரவு அதிகரிக்கும்.

**கன்னி**

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் விதத்திலேயே அமைந்திருக்கிறது. தொழிலில் சிலமாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள். கல்வி சம்பந்தமான பாதியில் நின்ற முயற்சி மீண்டும் தொடரும்.

**துலாம்**

ராசி நாயகன் சுக்ரன் மாத ஆரம்பத்தில் ஒன்பதிலும், மாத இறுதியில் பத்தாமிடத்திலும் சஞ்சரிப்பது மிகவும் சிறப்பானதாகும். புதன் வக்ரம் பெற்றுள்ளதால் செலவுகள் அதிகரிக்கவே செய்யும். 10–ல் உலவிடும் கிரகங்களால் தொழில் வளர்ச்சியில் புதிய நபர்களைக் கொண்டு வந்து இணைக்கும்.

**விருச்சிகம்**

செவ்வாய்க்கு நீசபங்கம் ஏற்பட்டுள்ளதால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். இடம், பூமி வழியிலும் லாபம் கிடைக்கும்.

**தனுசு**

குருவின் வக்ரம் மற்றும் விரய வீட்டுப் பயணத்தால் உடல் நலனில் சற்று கவனம் தேவை. எதிரிகளின் பலம் சற்று கூடவே செய்யும். உத்தியோகம் தொழிலைப் பொறுத்தவரையில் ஓரளவு எதிர்ப் பார்த்தபடியே நற்பலன்கள் கிடைக்கும்.

**மகரம்**

ராசிநாதன் வக்ரம் பெற்று பன்னிரண்டாமிடத்தில் சஞ்சரிக்கிறார். அவரே தனஸ்தானாதிபதியுமாவதால் குடும்பத்தில் வீண் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே வீண் வாக்கு வாதங்கள் எழலாம். ராகு, கேது சஞ்சாரத்தால் நல்வாய்ப்புகள் கைவிட்டுச் செல்லும்.

**கும்பம்**

சிலமாற்றங்களைச் சந்திக்கும் நிலை உருவாகிறது. ராசி நாயகன் லாபஸ்தானத்தில் வக்ரமாக உலவிடுவதால், சேமிப்புகள் கரையக் கூடும். எனினும் அதிகப்படியான செலவுகளைச் சமாளிக்க பண வரவும் அதிகரிக்கும். அசையா சொத்துக்கள் வாங்குவதில் இருந்து வந்த தடைகள் நீங்கும்.

**மீனம்**

ராசி நாயகன் குரு 9–ஆம் இடத்தில் இருப்பதால் தந்தை வழி சொத்துக்கள் கிடைக்கும். தொழிலில் நல்ல வளர்ச்சி உண்டு. அலுவலக பணியாளர்களுக்கு தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். உயரதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். நட்பு வட்டம் விரியும். நீதிமன்ற வழக்குகளில் வெற்றி கிட்டும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் &பின்கோடு எண் ________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐தமிழ் ☐கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ரூ. 500/-

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.



பெரிய சேஷ வாகனத்தில் உபயதேவியருடன் ஸ்ரீகோவிந்தன்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

திருப்பதியில்
11-05-2019 முதல்
19-05-2019 வரை
நடைபெற்ற
ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்



சிறிய சேஷ வாகனத்தில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி







அனுமன், ஹம்சம் மற்றும் கருட வாகனங்களில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி



சர்வபூபால வாகனத்தில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி



சிம்ம வாகனத்தில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி



கல்பவிருக்ஷ வாகனத்தில் உபயதேவியருடன் ஸ்ரீகோவிந்தன்



திருப்பதி புறவீதிகளில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருத்தேர்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams 25-06-2019
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

